# தமிழரசு








1-12-1988

ரூ. 1



மூதறிஞர் ராஜாஜி

தோற்றம்:10.12.1878 மறைவு:25.12.1972





# ஒருமைப்பாட்டைக் காக்க உறுதி ஏற்போம்!

மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் பிறந்த நாள விழா, தேசிய ஒருமைப்பாட்டு நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில் 18.11.88 அன்று சென்னையில், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலக ஊழியர்கள் தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழி எடுத்துக கொண்டார்கள்.

தலைமைச் செயலகத்தில் உள்ள அணிவகுப்புத் திடலில் நடைபெற்ற இந்த உறுதியேற்பு நிகழ்ச்சியில் மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி.அலெக்சாண்டர், அன்னாரின் ஆலோசகர் திரு ஜி.வி.இராமகிருஷ்ணா ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

இந்திய ஒருமைப்பாட்டை வலியுறுத்திப் பேசியபின் மேதகு ஆளுநர் அவர்கள் தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழியைப் படித்தார். தலைமைச் செயலக ஊழியர்கள் அதைத் திரும்பச் சொல்லி உறுதி மொழி ஏற்றார்கள். உறுதிமொழி விவரம் வருமாறு:

'நாட்டின் சுதந்திரம், ஒருமைப்பாடு ஆகியவற்றைக் காக்கவும், வலுப்படுத்தவும் என்னை அர்ப்பணித்துச் செயல்படுவேன் என்று மனமார உறுதி கூறுகிறேன். நான் ஒருபோதும் வன்முறையில் ஈடுபட மாட்டேன் என்றும், மதம் மொழி வட்டார மற்றும் அரசியல் அல்லது பொருளாதார பேதங்களுக்கு அமைதியான முறையிலும், அரசியல் சட்டத்திற்குட்பட்டும் தீர்வு காணத் தொடர்ந்து பாடுபடுவேன் என்றும் நான் மேலும் உறுதி கூறுகிறேன்'.


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2019

விபவ - கார்த்திகை 16

மலர்: 19 இதழ் : 11

1—12—1988

## முதல் அட்டை சொல்லும் செய்தி:



# திருவனந்தபுரத்தில் தமிழ்த் திரைப்பட விழா

திரைப்படத் தயாரிப்பு ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட்டு நூற்றாண்டு விழா கொண்டாட இன்னும் சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் இருக்கின்றன; தமிழத் திரைப்பட உலகம் பவளவிழா கொண்டாட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் - சென்னை மாநகரில் கடந்த ஆகஸ்டுத் திங்களில் மலையாளத் திரைப்பட விழா கொண்டாடப்பட்டது. அதைத் தொடர்ந்துதான், திருவனந்தபுரத்தில் நவம்பர் 13-ஆம் தேதி முதல் ஒருவார காலம் தமிழத் திரைப்பட விழா கொண்டாடப்பட்டது. 1930 ஆம் ஆண்டு முதல் தயாரான தமிழ்த் திரைப்படங்கள் திருவனந்தபுரத்தில் உள்ள ஐந்து திரையரங்குகளில் திரையிடப்பட்டன.

13-11-88 அன்று மாலை, திருவனந்தபுரத்தில் உள்ள வழுதைக்காடு தாகூர் திரையரங்கில் தொடக்க விழா நடைபெற்றது.

மாண்புமிகு கேரள முதல்வர் திரு ஈ. கே. நாயனார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர், விழாவைத் தொடங்கி வைத்தார். விழா தொடர்பான மலரை மாண்புமிகு கேரள மாநிலப் பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு டி. கே. ராமகிருஷ்ணன் வெளியிட்டார்; முதல் மலரை கேரளத் திரைப்பட வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு பி.கோவிந்த பிள்ளை பெற்றுக் கொண்டார்.

மேதகு தமிழக ஆளுநரின் துணைவியார் திருமதி அக்கம்மா அலெக்சாண்டர் குத்து விளக்கேற்றி வைத்தார்.

மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் தமது தொடக்க உரையில் குறிப்பிட்டதாவது:

''தற்போதுள்ள சிக்கலான சூழ்நிலையில் இருந்து தமிழ்த் திரைப்பட உலகை மீட்டுப் பாதுகாக்க, அரசு தன்னால் இயன்ற அனைத்து உதவிகளையும் செய்யும்; குறிப்பிட்ட துறைகளில் தமிழ்த் திரைப்படத்துக்கு உதவும் வகைபற்றித் தீர்மானிக்கும்படி அதில் நிபுணத்துவம் பெற்றவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

''அதே நேரத்தில் அந்தத் துறையிலே இருப்பவர்கள் கடந்த காலத்தில் அதற்கு ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கான வழி வகைகள் பற்றி ஆராய வேண்டும். பெருமளவில் வேலைவாய்ப்பு தரும் துறை திரைப்படத்துறை; அதனாலேயே இத்துறைக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினையில் அரசு தனிக்கவனம் செலுத்தி வருகிறது.

''தமிழ்த் திரைப்பட உலகம் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளது. இதற்கு அரசு எந்த வகையில் உதவ முடியும் என்பது பற்றி திரையுலகப் பிரதிநிதிகளுடன் ஆலோசித்தேன். இதுபோன்ற நேரத்தில் படங்களின்

தயாரிப்புச் செலவைக் குறைக்க வேண்டும். நடிகர் நடிகைகளுக்குக் கொடுக்கப்படும் தொகைக்குக் கட்டுப்பாடு வேண்டும். மற்றதுறை நிபுணர்களுக்குக் கிடைக்கும் வருமானத்திற்குச் சமமாகத் திரைப் படக் கலைஞர்களுக்கும் சம்பளம் தரும் நிலை வரவேண்டும்.

''ஒரே சரித்திரமும் பண்பாடும் படைத்த தமிழ்நாடு-கேரளம்ஆகிய இரு மாநில மகக்ளிடையே உணர்வு பூர்வமான பண்பாட்டு உறவை வளர்க்க இப்படிப்பட்ட விழாக்கள் பயன்படும்.

''இந்திய சரித்திரத்தில் இது ஒரு புது அத்தியாயம். மொழி, கலாச்சாரம், நாட்டியம் போன்ற எல்லா வகையிலும் மூவேந்தர்கள் காலம் முதலே மாநிலங்களுக்கிடையே தொடர்பு இருந்து வருகிறது. தமிழ் நாட்டில் இருந்து இவ்விழாவை இங்கு நடத்த ஒப்புதல் கேட்ட போது, முதலமைச்சர் நாயனார், கலாச்சார அமைச்சர் இராம கிருஷ்ணன் ஆகியோர் இதற்கு ஒத்துழைப்புக் கொடுத்தனர். இந்த விழா நடைபெறத் திருவனந்த புரம் தமிழ்ச்சங்கம் எடுத்துக் கொண்ட முயற்சியும் பாராட்டுக் குரியது.''

—இவ்வாறு மேதகு தமிழக ஆளுநர் பேசினார்.

மாண்புமிகு கேரள மாநில முதல்வர் திரு ஈ. கே. நாயனார் பேசுகையில் ''மாநிலங்களுக்கிடையே இத்தகைய விழாக்கள் மூலம், பண்பாட்டுப் பரிவர்த்தனையைப் பிரித்தாளும் சக்திகளை அகற்றமுடியும். தமிழ்ப்பட உலகம் தரமான படங்கள் தயாரித்து வருவதைப் பாராட்டுகிறேன்.'' என்று குறிப்பிட்டார்.

இந்த விழாவில்—மாண்புமிகு கேரள பண்பாட்டுத்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. டி. கே. இராமகிருஷ்ணன், கேரள திரைப்பட வளர்ச்சிக்கழகத் தலைவர் திரு பி. கோவிந்தபிள்ளை, திரு டி. ராமானுஜம், திரு. ஏ. எஸ். பிரகாசம், நடிகை செல்வி ராதா, மலையாளப்பட இயக்குநர் திரு கே. ஆர். மோகனன், மலையாள நடிகை ஆமுரளா பொன்னம்மாள், கேரளத் தமிழ்ச் சங்கப் புரவலர் திரு பி. இரத்தினசாமி திரு பாரதி ராஜா ஆகியோரும் பேசினார்கள்.

விழாத் தொடக்கத்தில் -செய்தி சுற்றுலாத் துறை சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் திரு செ. ராம்தாஸ் வரவேற்புரையாற்றினார். விழா முடிவில் செய்தித் துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ண பாரதி நன்றி கூறினார்.

விழா நிறைவின் பின் நடிகை மனோரமா கலைநிகழ்ச்சி, செல்வி



ரம்யா கிருஷ்ணன் நடன நிகழ்ச்சி, தமிழ்நாடு திரைப்படக் கல்லூரி மாணவர்கள் ஓரங்க நாடகம், கேரள கலாச்சாரக் குழுவினரின் மோகினியாட்டம் ஆகியவை நடைபெற்றன.

14, 15 ஆகிய தேதிகளில் கனகக்குன்று அரண்மனையில் தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத்துறைச் செயலாளர் டாக்டர் அவ்வை நடராசன் தலைமையில் திரைப் படக் கருத்தரங்கு நடைபெற்றது. கவிஞர் இரா. வைரமுத்து, வலம்புரிசோமநாதன், முக்தா சீனிவாசன், நிர்மலா சுரேஷ் முதலானோர் கலந்து கொண்டனர்.

தமிழ்த் திரைப்பட வாரத்தின் முதல்நாள் '16 வயதினிலே' படம் திரையிடப்பட்டது.

**திரையிடப்பட்ட தமிழ்ப்படங்கள்**

14-11-88 முதல் 19-11-88 முடிய திருவனந்தபுரத்தில் உள்ள தாகூர், தம்பானூர் கைரளி, ஸ்ரீ கலாபவன், நிஷாகாந்தி ஆகிய திரையரங்குகளில் திரையிடப்பட்ட தமிழ்த் திரைப் படங்களின் விவரம் வருமாறு:

ஹரிதாஸ்
ஆர்யமாலா
தியாகபூமி
நல்லதம்பி
நாம் இருவர்
சந்திரலேகா
ஔவையார்
வேலைக்காரி
அந்தநாள்
பராசக்தி
வீரபாண்டிய கட்டபொம்மன்
கப்பலோட்டிய தமிழன்
சிலநேரங்களில் சில மனிதர்கள்
ரிக்ஷாக்காரன்
பதினாறு வயதினிலே
காதல் ஓவியம்
மீண்டும் கோகிலா
அந்த ஏழு நாட்கள்
சம்சாரம் ஒரு மின்சாரம்
மூன்றாம் பிறை
அன்னக்கிளி
தண்ணீர் தண்ணீர்

அன்புள்ள ரஜினிகாந்த்
புவனா ஒரு கேள்விக்குறி
தில்லானாமோகனாம்பாள்
ராஜபார்வை
சிந்துபைரவி
பசி
வேதம்புதிது
நாயகன்
எச்சில் இரவுகள்
ஒரு வீடு ஒரு உலகம்

தமிழ்நாடு, கேரள மாநில அரசுகளின் கூட்டுமுயற்சியாக நடைபெற்ற இந்தத் திரைப்பட விழாவில் நான்கு திரையரங்குகளில் நாள்தோறும் இரண்டு காட்சிகள் நடைபெற்றன. ஏறத்தாழஇரண்டு இலட்சம் பேர் தமிழ்த் திரைப் படங்களைக் கண்டுகளித்துள்ளனர். இதில் ஐம்பது சதவீதத்திற்கு மேலானோர் கேரள மாநில மக்கள் ஆவார்கள்.

தமிழ்த் திரைப்படங்களைப் பார்த்தவர்கள் அனைவரும் ஒருமனதாகப் பாராட்டினார்கள். தங்களுக்கு ஒரு பொன்னான வாய்ப்பு இந்தத் திரைப்பட விழா மூலம் கிடைத்தது என்று பெரிதும் மகிழ்ந்தனர்.

இந்தத் திரைப்படங்களுக்கு அழைப்பாளர் அனுமதி, இலவச அனுமதி என்று அனுமதிகள் வழங்கப்பட்டன. திருவனந்தபுரத்தில் நவம்பர் 18, 19 தேதிகளில் கடுமையாக மழைபெய்தது ஆனாலும் கேரள மாநில சுற்றுலாத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கனகக் குன்றில் நிஷாகாந்தி திறந்தவெளித் திரையரங்கத்தில் படம் திரையிடப்படுவது பாதிக்கப்படவில்லை. குடைபிடித்துக் கொண்டு மக்கள் திரைப்படங்களைப் பார்த்தனர்.

மொத்தத்தில் திருவனந்தபுரம் தமிழ்த் திரைப்பட விழா, தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்கு ஓர் அரிய வாய்ப்பு என்பதை உறுதிப்படுத்தியது.

**- நமது செய்தியாளர்**

# அச்சமும் வெறுப்பும் அறவே இல்லாத மனிதர்



சி. ஆர். நரசிம்மன்
முன்னாள் எம்.பி;
(மூதறிஞர் ராஜாஜியின் புதல்வர்)

ஜவகர்லால் நேரு அவர்கள் தீர்க்கதரிசனம்வாய்ந்த பெருமகன். தீர்க்கதரிசனம் என்பது கற்பனைத் திறன் வாய்ந்த உள்ளுணர்வு, ராஜதந்திரிக்கே உரிய முன்னோக்கும் கண்ணோட்டம், விசாலமான அரசியல் ஆய்வு ஆகிய பொருள்களைக் கொண்டதாகும். ஜவகர்லால் நேருவிடம் மேலே குறிப்பிட்ட தன்மைகள் அனைத்தும் இருந்தன. வேறு பல குணநலன்களும் விஞ்சி இருந்தன. கவர்ந்திழுக்கும் வெற்றித் திருவுருவும், மாறாத புன்சிரிப்பும் கொண்டு விளங்கினார். அவ்வப்போது திடீர்க் கோபம் காணப்பட்டாலும், வெகு விரைவில் அமைதி அடைந்து விடுவார்.

ஜவகர்லால் நேருவைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் அவரது தந்தை மோதிலால் நேருவின் நினைவு வந்தே தீரும். மோதிலால் நேரு தமது வாழ்நாளில் தேசத்தின் விடுதலைப் போராட்டத்தில் பிரதானமான பங்கு ஆற்றியவராவார்.

விடுதலைக்கு முந்திய காலத்தில் அதிகாரத்தில் இல்லாத ஒரு குடிமகனுக்கு அளிககப்படக்கூடிய மிக உயர்ந்த கவுரவம் இந்திய தேசிய காங்கிரசின் தலைமைப் பதவியில் அமர்த்துவதுதான். இந்த உயர்ந்த பதவியில் அமரும் வாய்ப்பு விடுதலைக்கு முன்பும் பின்னரும் மோதிலால் நேரு, ஜவகர்லால் நேரு, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோருக்குக் கிட்டியது. விடுதலைக்கு முந்திய காலத்திலும், பிந்திய காலத்திலும் நேரு குடும்பத்தின் புகழ்த் தோற்றம் உயர்ந்தே இருந்தது.

மோதிலால் நேருவின் கம்பீரத் தோற்றத்தின் நினைவு இன்னும் என் மனத்தில் பசுமையாக இருந்து வருகிறது. 1920ஐ ஒட்டிய ஆண்டுகளில் காக்கிநாடாவில் காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் நடந்தபோது அதில் மோதிலால் நேரு கலந்து கொண்டார். அவருக்கும், சேலம் விஜயராகவாச்சாரியாருக்கும் இடையே கருத்து மோதல் ஏற்பட்டது. எனது தந்தையார் ராஜாஜி அப்போது தலையிட்டு மோதிலால் நேருவை மேடையினின்று அழைத்துச் சென்றார். அதனால் நிலைமை சீரடைந்தது.

மோதிலால் நேரு அலகாபாத்தில் புகழ்மிக்க வழக்கறிஞராக விளங்கினார். அதேபோல கல்கத்தாவில் சிறப்போடு விளங்கியவர் சித்தரஞ்சனதாஸ். இவர்கள் இருவருமே மகாத்மா தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றுச் சிறை சென்றனர். முப்பது வயதான ஜவகர்லாலும் இந்த இயக்கத்தில் பங்கேற்றுச் சிறை சென்றார். இதனால் நேரு குடும்பத்தின் மதிப்பு உயர்ந்தது. இளம் நேருவின் புகழும் ஓங்கியது. ஜவகர்லால் நேரு தேசத்தின் கண்மணியாக மதிக்கப்பட்டார். செல்வச் செழிப்பில் மிதந்த குடும்பத்தைச் சேர்ந்த நேரு, வலிய தியாகம் செயயத்துன்பம ஏற்றது நாட்டைப் பெரிதும் கவர்ந்தது. அவர் தேசத்தின் வீரராக ஆவதற்கு, இந்த நிலை பெரிதும் உதவியது. இதில் எவ்வித முறைகேடும் இல்லை. எந்தச் சமுதாயமும் வீரர்களை நாடுவது இயற்கை. அத்தகைய ஜவகர்லால் நேரு பிறகு மகாத்மாவின் அகிம்சை ராணுவத்தில் எளிய சிப்பாயாக விளங்கினார். இளவரசனான சித்தார்த்தன்-உலகத் துயர்கண்டு புத்தனாக மாறியது போன்றே, ஜவகர்லாலின் மாறுதலும் விளங்கியது எனலாம்.

லட்சுமணபுரியில் 1928ஆம் ஆண்டு சைமன் கமிஷன் வருகையை எதிர்த்து ஜவகர்லால் நேரு ஆர்ப்பாட்டம் நடத்தினார். போலீசின் கடுமையான தடியடிக்கு ஆளானார். இச்செய்தியைக் கேட்டதும் மகாத்மா காந்தி பின்வரும் கடிதத்தை நேருவுக்கு எழுதினார்: ''என் அன்புக்குரிய ஜவகர்லால்! நீங்கள் காட்டியதுதீரமிக்க எதிர்ப்பு. இன்னும் தீரமிக்க செயல்கள் காத்திருக்கினறன. அடிமைத் தளையிலிருந்து நாட்டை விடுவிக்க இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட சாதனமாக நீங்கள் விளங்கிட, இன்னும் பல்லாண்டு வாழ, இறைவன் அருள வேண்டும்'' என்று மகாத்மா எழுதினார்.

ஜவகர்லால் நேருவைப் பற்றி மகாத்மா காந்தி முன்கூட்டியே எப்படி மதிப்பீடு செய்தார் என்பதை, மேலே கண்ட கடிதம் சுட்டிக் காட்டும். வருங்காலம் ஜவகர்லால் நேருவை நவீன இந்தியாவின் சிற்பி என்று அழைத்தது.

சுயாட்சி (ஹோம் ரூல்) என்கிற வரம்புக்குட்பட்ட குறிக்கோளோடு நின்றுவிட ஜவகர்லால் நேரு விரும்பவில்லை. 'முழு சுதந்திரம் படைத்த மாபெரும் தேசமாக இந்தியா விளங்கவேண்டும்' என நேரு கனவு கண்டார். 'மனிதகுலம் முழுவதற்கும் சமாதானமும் சுபிட்சமும் ஏற்பட வழிகாட்டும் ஒளிவிளக்காக இந்தியா திகழவேண்டும்' என ஆசைப்பட்டார். இந்தச் சீரிய இலட்சியத்துக்காகவே நேரு வாழ்ந்து மறைந்தார் என்பதை அவரது வாழ்வு பறைசாற்றும்.

விடுதலை இயக்கத்தில் பங்கேற்றது எதற்காக என்பதைப் பற்றி ஒரு வழக்கு விசாரணையின் போது ஜவகர்லால் குறிப்பிட்டதைப்பார்த்தால் அவருடைய நம்பிக்கைகள் தெரியவரும். அவர் கூறுகிறார்:

''பல சாம்ராஜ்யங்கள் சரிந்தது போன்றேபிரிட்டிஷ் சாம்ராஜ்யமும் சரியப்போகிற நிலையில் நமது போராட்டம் இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கிறது. மிக நீண்ட காலமாக கீழ்நோக்கிச்சென்று கொண்டிருக்கிறது. இதை இனியும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. தங்களைச் சமமாக நடத்துகிற - தங்களுடைய உரிமையில் தலையிடாத - யாருடனும் நண்பர்களாக இருக்க இந்திய மக்கள் என்றும் தயார். இதை இங்கிலாந்தும், உலகமும் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் கனவு காண்கிற இந்தியாவை உருவாக்குவதில் வெற்றி பெறுகிறவரை தொய்வில்லாது நமது நாட்டு மக்கள் தொடர்ந்து போராட வேண்டும் என நான் வேண்டிக் கொள்கிறேன்'' என்று நேரு குறிப்பிட்டார். இது இந்தியாவின் எதிர்

காலம் பற்றி அவர் கொண்டிருந்த நம்பிக்கையைக் காட்டுகிறது.

இவ்வாறு கூறிய பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் தலைமையிலேயே சுதந்திர இந்தியா அமைந்தது. அன்று அவர் நீதிமன்றத்தில் சொன்னதெல்லாம் தீர்க்கதரிசனமாக அமைந்தது. அந்தச் சீரிய கனவு நனவாவதை நமது வாழ்வில் கண்டோம்.

ஜவகர்லால் நேரு அமைத்த மந்திரி சபையில் பழுத்த அரசியல்வாதிகள் இருந்தனர். அவர்களில் சிலர் பொதுவாழ்வில் நேருவை விட மூத்தவர்கள். சர்தார் படேல், மவுலானா ஆசாத், ராஜேந்திரப் பிரசாத், ராஜாஜி ஆகியோரைச் சொல்லலாம். அவர்களோடு ஜவகர்லால் நேரு நல்லுறவுடன் பணியாற்ற முடிந்தது.

''இளமைக் காலத்தில் இந்தியா பற்றி பல கனவுகள் கண்டேன். அவற்றில் சில கனவுகள் நடைமுறையில் நிகழ்ந்தன என்றாலும், நான் விரும்பியதுபோல அமையவில்லை. இன்னும் ஏராளமானவை செயல் வடிவம் பெறவேண்டும்'' என்று 1947-இல் அலகாபாத்தில் கல்லூரி மாணவர்களிடையே பேசுகையில் நேரு குறிப்பிட்டார்.

நேரு அவர்கள் பிரதமராக இருந்த காலத்தில் ஒரு பத்தாண்டுகள் நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தேன். அது ஒரு அருமையான வாய்ப்பு. சபை நடக்கும் பொழுது அவர் எப்போதும் அதில் பிரசன்னமாயிருப்பார். அனைவரிடமும் பரிவு காட்டுவார். கட்சிக் கூட்டங்களில் கூட தங்கள் கருத்துக்களை வலியுறுத்த முடியும். பாராளுமன்றக் கூட்டத்திலேயே நட்பு முறையில் அரசை விமரிசிக்க முடிந்தது.

இந்த மகத்தான மனிதருக்கு என் புகழ்மாலையைச் சூட்டும் வகையில் கீர்த்தி வாய்ந்த பத்திரிகையாளரான திரு. பி.சிவராஜ் அவர்கள் எழுதிய ஒரு மேற்கோளைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

''நீண்ட பொது வாழ்வில் ஜவகர்லால் நேரு அவர்களைப்போல பொது வாழ்வில் திருப்பங்களுக்கும் விவாதங்களுக்கும் வேறு யாரும் ஆட்பட்டிருக்க முடியாது. என்றாலும் ஜவகர்லால் நேருவின் கணிப்பே சரியானது, வீழ்த்த முடியாதது என்பதை வரலாறு உணர்த்தியது. இத்தகைய செயல் திறனும் மனிதாபிமானமும் கொண்ட ஒரு மாமனிதரைப்பற்றி பல மதிப்பீடுகள் இருக்கலாம். அத்தகைய மதிப்பீடுகளில் மிகச் சிறந்ததாகவும், என்றும் நிலைத்திருப்பதும் எது என்றால், "இந்த மனிதர் அச்சமும் வெறுப்பும் அறவே இல்லாதவர்'' என்று வின்ஸ்டன் சர்ச்சில் கூறியது தான்.

## கொடிய நோய்



**வெ**குநாட்பட்ட நோயாளி அந்த நோய்க்குப் பழக்கப்பட்டவனாகிவிடுகிறான். அந்த வியாதியையே தனது உடலின் இயற்கை நிலை என்று கருதி விடுகிறான். தாய்மொழியுடன் ஆங்கிலத்தைக் கலந்து பேசுவது என்பது அதேபோல் நாள்பட்ட நோயாகிவிட்டது. இந்த ஆபத்தான நோயை உடனே குணப்படுத்திக் கொண்டாக வேண்டும். தமிழில் பேசும்போது கண்டபடி அந்நியச் சொற்களைக் கலந்து பேசுவது ஆபாசமாகும்.

—மூதறிஞர் ராஜாஜி

## தமிழர்களின் பெருமை



**த**மிழர்கள், பெருமைமிக்க தங்களுடைய கடந்தகால வரலாற்றினும் சிறந்ததோர் வளமான எதிர்காலத்தை உருவாக்குவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். நம் திட்டங்களும் பணிகளும் செம்மையாகச் செயல்படுத்தப்படுவதன் வாயிலாக வளமான கிராம மறுமலர்ச்சிக்கு வழி ஏற்படுவதுடன் தொழில் வளர்ச்சியும் நன்முறையில் சிறந்தோங்கி வருகிறது. நாம் ஒற்றுமையாக இருந்தால்தான், வெளிநாடுகளில் தொல்லைகளுக்கும் துன்பங்களுக்கும் உட்பட்டிருக்கும் நமது சகோதர மக்களுக்கு உதவி செய்ய முடியும். நம்முடைய ஒற்றுமையும் ஒருமைப்பாடும் உறுதிப்படாத நிலையில் நாம் என்ன செய்தாலும் எந்த நடவடிக்கை மேற்கொண்டாலும் அது வெற்றி அளிக்காது.

—இந்திரா காந்தி

## ஜாதி வேற்றுமைகள் வேண்டாம்!



**த**மிழா, பயப்படாதே, ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களையெல்லாம் தமிழில் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய். ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே. ''ஜாதி இரண்டொழிய வேறில்லை'' என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள். பெண்ணை அடிமை என்று கருதாதே. முற்காலத்துத் தமிழர், மனைவியை 'வாழ்க்கைத் துணை' என்றார். ஆத்மாவும் சக்தியும் ஒன்று. ஆணும் பெண்ணும் சமம்.

—பாரதியார்



# மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

## வாழ்க்கைக் குறிப்பு

**1882—**
சிதம்பரனார் மாவட்டம், எட்டையபுரத்தில் சின்னசாமி அய்யர், லட்சுமி அம்மாள் தம்பதியருக்கு 11.12.1882 (சித்திரபானு ஆண்டு கார்த்திகை 27 மூலம்) மகனாகப் பிறந்தார்.

**1887—**
இவரது ஐந்தாம் வயதில் தாயார் மறைவு.

**1893—**
பதினோரு வயதுப் பாலகன் சுப்பிரமணியன் ஆசுகவிக்காகப் புலவர் பெருமக்களால் பாரதி (கலைமகள்) என்று பட்டம் சூட்டப்பட்டது.

**1894—**
பாரதியார் திருநெல்வேலி இந்துக்கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் மூன்றாண்டுகள் மூன்று, நான்கு, ஐந்தாம் படிவங்களில் பயின்றார்.

**1897—**
கடையம் செல்லப்பா அய்யரின் மகள் 7 வயதுடைய செல்லம் மாளுக்கும் 14 வயதான பாரதிக்கும் கடையத்தில் திருமணம்.

**1898—**
இவரது பதினைந்தாவது வயதில் தந்தை மறைவு. அத்தை குப்பம்மாளின் அழைப்பின் பேரில் காசிக்குச் சென்று, ஜெய் நாராயண பள்ளியில் படிப்பைத் தொடர்ந்து, இந்தியிலும், சமஸ்கிருதத்திலும் நல்ல தேர்ச்சி பெற்றார்.

**1899—**
காசியில் அலகாபாத் பல்கலைக் கழகத்தின் என்டிரான்ஸ் தேர்வில் முதல் வகுப்பில் தேறினார்.

**1902—**
எட்டையபுரம் அரசவையில் மூன்றாண்டுகள் பாரதியார் வேலை பார்த்தார்.

**1904—**
ஆகஸ்ட் முதல் மூன்று மாதங்கள் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பணி. சென்னை வந்து, 'சுதேச மித்திரன் உதவி ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார்.

**1905—**
மூத்த பெண் தங்கம்மாள் பிறப்பு. வங்கப் பிரிவினையை எதிர்த்து பாரதியார் பாடிய **'வங்கமே வாழிய'** என்ற பாடல் செப்டம்பர் 15 மித்திரனில் முதன்முதலாக வெளியிடப்பட்டது. காசியில் கோகலே தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்பு.

**1906—**
டிசம்பரில் கல்கத்தாவில் தாதாபாய் நௌரோஜி தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்பு. கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டு விட்டுத்திரும்பும்போது டம்டம் நகரில் சகோதரி நிவேதிதா தேவியைச் சந்தித்து ஆசி பெற்றார். 'இந்தியா' வார ஏட்டிற்குப் பாரதியார் ஆசிரியர் ஆனார்.

**1907—**
சூரத்தில் நடந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, மராட்டிய மாவீரர் லோகமான்ய திலகரின் தீவிரவாதக் கொள்கையைப் போற்றினார்.

**1908—**
லாலா லஜபதிராய் நாடு கடத்தப்பட்டதைக் கண்டித்துச் சென்னையில் நடந்த கூட்டத்தில் பாரதியார் உணர்ச்சிமிகு பாடல்களைப் பாடினார். வ.உ. சிதம்பரனாரின் தன்னலமற்ற நாட்டுப் பணியைப் போற்றியும், சுதேசிக் கப்பல் கம்பெனிமுயற்சியை ஆதரித்தும் பத்திரிகையில் எழுதினார். செப்டம்பரில் 'இந்தியா' ஏட்டிற்குத் தடை. பாரதியார் மீது காவல் துறை நடவடிக்கை எடுக்கக் கூடும் என்ற நிலையைக் கருதி, நண்பர்கள் ஆலோசனைப்படி புதுச்சேரி போய்ச் சேர்ந்தார்.

**1909—**
இரண்டாவது மகள் சகுந்தலா பிறப்பு

**1910—**
அரவிந்தர் 'கர்மயோகின்' என்ற ஆங்கில ஏட்டை நடத்தி வருவதைக் கண்ட பாரதியார், அதன் கருத்துக்களைத் தமிழில் தெரிவிக்க விரும்பி, ஜனவரி முதல் 'கர்மயோகி' என்ற திங்கள் ஏட்டை ஆரம்பித்தார்.

**1913—**
புதுவையில் தம் நண்பரும், அரிஜனச் சீடருமான ரா.கனகலிங்கத்திற்குப் பூணூல் அணிவித்துப் புரட்சி செய்தார்.

**1918—**
நவம்பர் 20-ல் பாரதியார் புதுவையை விட்டு பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வந்தார். வில்லியனூருக்கு அருகில் பாரதியார் கைது செய்யப்பட்டு, கடலூரில் சிறை வைக்கப்பட்டார். டிசம்பர் 14-ல் பாரதியார் விடுதலையானார். மனைவியின் ஊரான கடையத்தில் தங்கினார்.

**1919—**
மார்ச்சு சென்னை கதீட்ரல் சாலையில் இராஜாஜி அவர்களின் இல்லத்தில் காந்தியடிகளைச் சந்தித்தார்.

**1920—**
ஆகஸ்டு மித்திரனில் மீண்டும் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்.

**1921—**
ஜூன் மாதம் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில்யானை 'அர்ச்சுனன்' பாரதியார் போர்த்தியிருந்த மேலாடையைத் துதிக்கையால் பிடித்திழுத்து அவரைக் கீழே தள்ளியது. குவளை கிருஷ்ணமாச்சாரி ஓடிவந்து யானையின் காலடியிலிருந்து பாரதியாரைக் காப்பாற்றினார். காயங்களுக்காக இராயப்பேட்டை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

ஆகஸ்டு 23-தீராதவயிற்றுப் போக்குடன் மித்திரன் அலுவலகப் பணியிலிருந்து ஒரு வாரம் விடுப்பில் சென்றார்.

செப்டம்பர் 11 ஞாயிறு இரவு தாண்டி (12-9-1921) திங்கட்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் தம் 39 வயது முடிவதற்குள் சென்னை திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு, 67-ஆம் எண் வீட்டில் இயற்கை எய்தினார்.

**தொகுப்பு: வ. இரா**




# மூதறிஞர் இராஜாஜி வாழ்க்கைக் குறிப்பு

**1878-**

ஓசூருக்கு அருகில் உள்ள தொரப்பள்ளி கிராமத்தின் முன்சீப்பாக இருந்த சக்கரவர்த்தி வேங்கடார்யா, சிங்காரம்மா தம்பதியருக்கு 10-12-1878 செவ்வாய்க் கிழமை மூன்றாவது மகனாகப் பிறந்தார்.

**1898**

சித்தூர் திருமலை சம்பங்கி அய்யங்கார் மகள் அலர்மேலு மங்கம்மாளை(மங்கா)மணந்தார். மூன்று ஆண்கள், இரண்டு பெண்கள் பிறப்பு.

**1900**

வழக்குரைஞர் பட்டம்— வழக்குரைஞர் பணி சேலத்தில் துவக்கம்.

**1906**

சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞராகப் பதிவு செய்தல். தாயார் மறைவு.

**1907**

சூரத் காங்கிரஸ் மாநாட்டிற்குச் சென்றார்.

**1909**

கவிஞர் சுப்பிரமணிய பாரதியாருடன் சந்திப்பு.

**1910**

கர்நூல் சமூக சீர்திருத்த மாநாட்டில் கலந்து கொண்டு கலப்புத் திருமணத்தை ஆதரித்துப் பேசினார் - காந்தியடிகளுடன் சந்திப்பு - காந்தியடிகளின் நூல்களைப் படித்து மகிழ்ந்தார்.

**1911**

சேலம் நகராட்சி உறுப்பினர்.

**1915**

மனைவி மறைவு.

**1917**

நகராட்சி உறுப்பினராக இல்லாமலேயேசேலம்நகராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வைதிகர் எதிர்ப்புக்கிடையே ஆதிதிராவிடர்களைப் பணியில் சேர்த்தார்.

**1919**

சேலம் நகராட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார்.

**1920**

திருநெல்வேலி தமிழ் மாகாண மாநாட்டில் பங்கேற்பு.

**1921**

ஒத்துழையா இயக்கப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு முதன் முறையாக வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டார்.

மூத்த சகோதரரும், தந்தையாரும் மறைவு.

**1922**

'யங் இந்தியா', 'லீடர்' 'நோசேஞ்ச்' ஆகிய ஏடுகளின் ஆசிரியர் பொறுப்பு.

**1925**

திருச்செங்கோட்டை அடுத்துள்ள புதுப்பாளையத்தில் காந்தி ஆசிரமம் துவக்கம். 'புரொகிபிஷன்' என்ற ஆங்கில ஏட்டிற்கும், 'விமோசனம்' என்ற தமிழ் ஏட்டிற்கும் ஆசிரியராக இருந்தார்.

**1929**

மதுவிலக்குப் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டார்.

**1930**

வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு, 9 மாத சிறைத்தண்டனை.

**1932**

அரிசனங்கள் ஆலயப் பிரவேச இயக்கத்தில் தீவிரம்.

**1933**

மகள் லட்சுமிக்கும், காந்தியடிகள் மகன் தேவதாசுக்கும் திருமணம்.

**1937**

பிரிக்கப்படாத சென்னை மாநிலத்தின் பிரதம அமைச்சரானார். வெள்ளையர் நீல் துரையின் உருவச்சிலை அகற்றப்பட்டு மியூசியத்தில் வைக்கப்பட்டது.

**1939**

பிரதம அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.

**1946**

பண்டித நேருவின் தலைமையில் அமைந்த இடைக்கால அமைச்சரவையில் அமைச்சர் ஆனார்.

**1947**

ஆகஸ்டு-15, இந்தியா விடுதலை- மேற்கு வங்காளத்தில் ஆளுநர் பொறுப்பு.

**1948**

இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பு ஏற்றார்.

**1952**

சென்னை மாநில முதலமைச்சர் ஆனார்.

**1954**

பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. மாநில முதலமைச்சர் பொறுப்பிலிருந்து விலகினார்.

**1960**

சுதந்திராக் கட்சியை உருவாக்கினார். 'சுயராஜ்யா' என்ற ஆங்கிலப் பத்திரிகையை நடத்தினார்.

**1972**

அக்டோபர் 8 அன்று, சென்னை கிண்டி காந்தி மண்டபத்தில் காந்தி பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு பேசினார். அது தான் அவரது கடைசி உரை. டிசம்பர் 25 - சென்னையில் மறைவு.

தொகுப்பு: வ. இரா

# தொழிற்சாலைத் தொழிலாளர் வருங்கால வைப்புநிதி

எஸ். இராசரெத்தினம், இ.ஆ.ப.
இயக்குநர்,
கருவூல கணக்கு இயக்ககம்.

தமிழக அரசு, ''தமிழ்நாடு அரசு தொழிற்சாலைத் தொழிலாளர் உதவித்தொகையுடன்கூடிய வருங்கால வைப்புநிதி'' என்ற திட்டத்தினை 1.4.1970 முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் 1952ஆம் வருடத்திய வருங்கால வைப்புநிதி மற்றும் பல்வகைச் சட்டத்தினை (மத்திய அரசு) அடிப்படையாகக் கொண்டதாகும். இத்திட்டம் தமிழ்நாடு அரசு தொழிற்சாலைகளிலும் மற்றும் இதர துறைகளிலும் பணியாற்றும் தினக்கூலிகளின் நன்மைக்காக அமல்படுத்தப்பட்டதாகும். ஓய்வூதியம் மற்றும் இதர விதிகளின்கீழ் பயன்பெறாத தொழிலாளர்களுக்கே இத்திட்டம் உரியதாகும். கருவூலக் கணக்கு இயக்குநர் இத்திட்டத்தின் தலைமை நிர்வாகி ஆவார். கணக்கு அலுவலர் (நிதி) அவர்கள் இத்திட்டத்தினை நிறைவேற்றுவதில் கருவூலக் கணக்கு இயக்குநருக்குத் துணை புரிகிறார்.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

**தொழிலாளர்களைச் சேர்த்தல்**

ஒரு நிறுவனத்தில் தினக்கூலி பெறும் தொழிலாளி பணியில் சேர்ந்த நாளிலிருந்து 90 நாட்களில் 60 நாட்கள் தொடர்ந்து பணிபுரிந்திருந்தால் அவர் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார். ஒவ்வொரு அலகு அலுவலரும் இத்திட்டத்தில் சேர்ந்து கொள்ள வேண்டிய தொழிலாளர்களின் பட்டியலை, கணக்கு அலுவலர் (நிதி) சென்னை-4 அவர்களுக்கு அனுப்ப வேண்டும். அவர் தொழிலாளர்களுக்குக் கணக்கு எண்கள் வழங்கி அலகு அலுவலருக்குத் தெரிவிப்பார்.

**சந்தாத் தொகை பிடித்தம் செய்தல்**

கணக்கு எண்கள் வழங்கப்பட்ட ஒவ்வொரு தொழிலாளியும் தன்னுடைய மாத ஊதியத்தில் 8 விழுக்காட்டிற்குக் குறையாமல் வருங்கால சேமிப்பு நலத் திட்டத்திற்குத் தனது பங்குத் தொகையாகச் செலுத்த வேண்டும். ஒவ்வொரு தொழிலாளியிடம் பிடித்தம் செய்யப்பட்ட 8 விழுக்காடு தொகையில் 6-5/6 விழுக்காடு தொகையினைக் கணக்கு அலுவலர் (நிதி) அவர்களுக்குச்செலுத்த வேண்டும். எஞ்சிய 1-1/6 விழுக்காடு தொகையினை குடும்ப ஓய்வூதியத் திட்டத்திற்குச் சந்தாவாக சம்பந்தப்பட்ட மண்டல வருங்கால வைப்புநிதி ஆணையருக்கு பாரத வங்கியிலுள்ள செலுத்துச் சீட்டு எண் 10 மூலமாக செலுத்தப்படல் வேண்டும்.

**அரசுப் பங்குத் தொகை**

அரசும் அதன் பங்குத் தொகையைத் தொழிலாளரின் ஊதியத்திற்கு 8 விழுக்காட்டிற்கு அதிகமில்லாமல் அதன் பங்காகச் செலுத்தும். இத்தொகையினை கணக்கு அலுவலர்(நிதி) அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட மண்டல வருங்கால வைப்புநிதி ஆணையர் அவர்களுக்கும், தொழிலாளரின் சந்தா தொகையினைச் செலுத்தும் முறைப்படி செலுத்த வேண்டும்.

**தொழிலாளர் பங்குத் தொகை மற்றும் அரசுப் பங்குத் தொகை செலுத்துவதற்காக உரிய நாள்**

ஒரு மாதத்தில் பிடித்தம் செய்யப்பட்ட தொழிலாளர் பங்குத் தொகையும் அதற்கான அரசுப் பங்குத் தொகையும் அடுத்து வரும் மாதம் 15-ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டும். கணக்கு அலுவலர் (நிதி) சென்னை-4 அவர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகையினைக் கேட்பு வரைவோலை மூலமோ, காசோலை மூலமோ செலுத்தப்படல் வேண்டும். கேட்பு வரைவோலை காசோலையுடன் தொழிலாளர்களின் பெயர், அவர்களது கணக்கு எண், மாதத்தில் வழங்கப்பட்ட ஊதியம், 8 விழுக்காடு ஊதியம் மேலும் 8 விழுக்காட்டினை 6-5/6 விழுக்காடு மற்றும் 1-1/6 விழுக்காடாக பிரிக்கப்பட்ட விபரம் அடங்கிய விவரப் பட்டியலினை அனுப்ப வேண்டும்.

**வட்டி கணக்கிடுதல்**

ஒவ்வொரு ஆண்டும் தொழிலாளரின் கணக்கில் உள்ள தொகைக்கு அரசு அறிவிக்கும் வட்டி விகிதத்தின்படி வட்டி கணக்கிட்டு தொழிலாளர்களின் கணக்கில் சேர்க்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் மார்ச் திங்கள் 31ம் நாளில் உள்ள இருப்புத் தொகையினைப் பற்றிய கணக்குச் சீட்டு அலகு அலுவலர் மூலமாக தொழிலாளருக்கு அனுப்பப்படும்.

**முன்பணம்**

தொழிலாளியின் கணக்கில் இருக்கும் இருப்புத் தொகையிலிருந்து மருத்துவச் செலவு, திருமணம், உயர் கல்வி மற்றும் வீடுகட்ட முன்பணம் வழங்கப்படும்.

**இறுதி இருப்புத் தொகை வழங்குதல்**

ஒரு தொழிலாளி ஒரு நிறுவனத்தை விட்டுச் சென்றுவிட்டாலோ அல்லது இறந்து விட்டாலோ அவரது கணக்கில் இருக்கும் தொகை அவருக்கோ அல்லது உறுதி நியமனப் படிவத்தின்படி அவரது வாரிசுதாரருக்கோ வழங்கப்படும். ஒரு தொழிலாளி முறையான அரசு ஊழியராக நியமிக்கப்பட்டால், அவரது கணக்கில் இருக்கும் தொகை பொது வைப்புநிதியில் அவரது கணக்கில் சேர்க்கப்படும்.

**குடும்ப ஓய்வூதியத் திட்டம்**

குடும்ப ஓய்வூதியத் திட்டத்திற்கு ஒரு தொழிலாளி ஓராண்டு தொடர்ந்து சந்தாத் தொகை செலுத்தியிருந்து, பணியில் இருக்கும் பொழுதே இறக்கநேரிட்டால் அவரது குடும்பத்திற்கு மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகை ஓய்வூதியமாக வழங்கப்படும். எனவே இத்திட்டம் பாதிக்கப்பட்ட தொழிலாளியின் குடும்பத்திற்கு மிக்க பயன் அளிக்கக்கூடிய திட்டமாகும்.

**வைப்புத் தொகையுடன்கூடிய ஈட்டுறுதித் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் பணியிலிருக்கும் போதே இறந்துவிட்ட ஒரு தொழிலாளியின் குடும்பத்திற்கு ஈட்டுறுதித் தொகை விதிகளின்படி வழங்கப்படும். இத்தொகையானது தொழிலாளியின் 3 வருடக் கணக்கில் இருக்கும் சராசரி தொகைக்கு சமமாக வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் காப்புறுதி ஈட்டுத் தொகை ரூ. 10.000 க்கு மிகைப்படாது. இத்தொகையானது குடும்ப ஓய்வூதியத் தொகையைத் தவிர வழங்கப்படும் ஒன்றாகும்.

இதுவரை, 306 அரசு நிறுவனங்களிலுள்ள 20,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். அனைத்து அரசு நிறுவனங்களில் பணியாற்றும் தினக்கூலி மற்றும் இதுபோன்ற ஏனைய பிற தொழிலாளர்களும் மிகுதியான எண்ணிக்கையில் இத்திட்டத்தில் சேர்ந்து பயன் அடைய வேண்டும் என்பதே அரசின் முக்கியக் குறிக்கோளாகும்.

பின்பக்க அட்டையில்...

# போர்முரசு கொட்டிய கவிமுரசு

—வ. இராச மனோகரன்



தமிழிசையால் பக்திநெறி பரப்பிய நாயன்மார்கள், ஆழ்வார்கள் வழியில், தமிழிசையைக் கருவியாகக் கொண்டு, தேசிய உணர்வு ஊட்டும் பாடல்களைப் பாடி, மக்களிடையே விழிப்புணர்ச்சி ஊட்டிய சீரிய சிந்தனையாளர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

கர்ணனுடன் கொடை போயிற்று, உயர் கம்பனுடன் கவிதை போயிற்று என்று தமிழ் மக்கள் ஏங்கியிருந்த காலத்தில், ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர், வாராது போல் வந்த மாமணியாய் தமிழ் நாட்டில், எட்டையபுரத்தில் தோன்றி, தாய்மொழிக்கும், தாய்த் திருநாட்டிற்கும் அளப்பரிய தொண்டாற்றி, உலகளாவிய புகழ் எய்திய உலக மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

இவர் தம் ஏழாவது வயதிலேயே அருமையான தமிழ்க் கவிதைகளை விளையாட்டாக விரைந்து இயற்றும் ஆற்றலைப் பெற்றிருந்தார். குழந்தைப் பருவத்திலேயே பெரிய கிழவர்களுடன் அமர்ந்து, உயர்ந்த வேதாந்தத் தத்துவங்களை ஆராயத் தொடங்கினார். இவரது பதினோராவது வயதில் இவரது கவி புனையும் ஆற்றலைக்கண்ட புலவர் கொடுத்த 'பாரதி' எனும் பட்டமே இவர் பெயருக்கு மகுடமாக இன்னும் நின்று நிலவுகிறது.

பாரதியார் இளம்பருவத்திலேயே கம்பரையும், வள்ளுவரையும், இளங்கோவடிகளையும், தாயுமானவரையும், இராமலிங்க வள்ளலாரையும் அறிந்து, கவிதை ஆற்றலையும், சிந்தனை ஆற்றலையும் வளர்த்துக்கொண்டார். இந்நாளில் இவர் பாடிய காவடிச்சிந்து புலவர்களின் பாராட்டைப் பெற்றது.

பிற்காலத்தில் பாரதியார் ஆங்கிலம், தமிழ் மட்டுமல்லாமல், பிரெஞ்சு, சமஸ்கிருதம், இந்தி, உருது, வங்காளி, தெலுங்கு, கன்னடம், ஆகிய மொழிகளையும் அறிந்துகொண்டார். ஷேக்ஸ்பியர், ஷெல்லி, கீட்ஸ், பைரன், விக்டர் யூகோ முதலிய உலகப் பெருங் கவிஞர்களின் கவிதைகளைப் படித்து அறிவை விரிவாக்கிக்கொண்டார்.

சங்க இலக்கியங்கள், வேதங்கள், உபநிடதங்கள், கீதை முதலிய நூல்களில் பயிற்சியும், சங்கரர், இராமானுசர், புத்தர், ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலானோர் பக்தி நெறிகளில் ஆர்வமும், பைபிள், குர்ஆன் போன்ற சமய நூல்களில் ஈடுபாடும் சகோதரி நிவேதிதா தேவி, அரவிந்தர், குள்ளச்சாமி, கோவிந்தசாமி, கோவிந்தஞானி, யாழ்ப்பாணத்து அடிகள் போன்றோர் தொடர்பும், பாரதியாரின் விரிந்த மனத்திற்கு வேதாந்த அறிவுக்குப் பெரிதும் உதவின.

வேத ரிஷிகளின் கவிதைகள் என்ற தலைப்பில் சில உபநிடதங்கள், பதஞ்சலியோக சூத்திரம், பகவத்கீதை ஆகியனவற்றுக்குப் பாரதியார் செய்த மொழிபெயர்ப்பும், முன்னுரையும் தத்துவ அறிஞர்களின் பாராட்டைப் பெற்றன.

தாய்மொழிமீது இவருக்கிருந்த ஈடுபாடு ஈடு இணையற்றது.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்
மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்''

—என்றும்,

''யாமறிந்த புலவரிலே கம்பனைப்
போல்
வள்ளுவர்போல் இளங்கோ
வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே
பிறந்ததிலை''

—என்றும் பெற்ற தாய்மொழியை நினைந்து பெருமிதம் அடைகிறார்.

''வாழிய செந்தமிழ்'' என்று பெற்ற மொழியையும், ''வாழிய பாரத மணித்திரு நாடு'' என்று பிறந்த பொன்னாட்டையும் போற்றி, அவர் பாடிய நாட்டு வாழ்த்தை அறியாதார் உண்டா?

''பாரத பூமி பழம்பெரும் பூமி
நீரதன் புதல்வர்; இந் நினை
வகற்றாதீர்''

''ஒன்றுபட் டாலுண்டு வாழ்வு-
நம்மில்

ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே''

''முப்பது கோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்- இவள்
செப்பு மொழிபதி னெட்டுடை யாள்-எனிற்
சிந்தனை யொன்றுடையாள்''

''எப்பதம் வாய்த்திடு மேனும் நம்மில்
யாவர்க்கும் அந்த நிலைபொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம்- வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்''

என்று பாரதியார் ஒருமைப்பாட்டை வலியுறுத்தி இயற்றிய பாடல்கள் என்றும் நமக்கு ஒற்றுமையின் வலிவை உணர்த்திக் கொண்டே இருப்பவை.

'எழுதுகோல் தெய்வமிந்த எழுத்துந் தெய்வம்'

என்று எழுத்துப்பணியைப் புனிதப் பணியாகக் கருதிய பாரதியார், 'நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்குழைத்தல், இமைப் பொழுதுஞ் சோரா திருத்தல்' என்ற கொள்கை உறுதியோடு பதினேழு ஆண்டுக் காலம் சுதேசமித்திரன், இந்தியா, சக்கரவர்த்தினி, பாலபாரதா போன்ற பல பத்திரிகைகள் மூலம் நெருப்பு மழை பொழியும் கட்டுரைகளையும், கனல் தெறிக்கும் கவிதைகளையும் எழுதி, மக்கள் மத்தியில் தேச பக்தியை வளர்த்தார்.

வாழ்க்கையில் இன்பத்தையும் வசதியையும் பெறுவதற்காக, சுதந்திர வாழ்வை இழந்து, அடிமை மோகம் கொண்டிருந்த மக்களைப் பார்த்து,

''மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பா ரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினாற்
கைகொட்டிச் சிரியாரோ''

—என்று எள்ளி நகையாடினார்.

தாய்த்திருநாடு விடுதலை பெற வேண்டும் என்பதற்காக 1905ஆம் ஆண்டிலிருந்தே காங்கிரஸ் மாநாடுகளில் கலந்துகொண்டார். திலகரின் புதிய கட்சியான தீவிரவாதக் கட்சியின் பிரச்சாரகராக இருந்து, ஆவேசச் சொற்பொழிவுகள் செய்தார். சுயராஜ்யம் நமது பிறப்புரிமை என்று முழங்கினார். வங்க மாநிலத்தைத் துண்டாட ஆங்கில வைசிராய் கர்சன்பிரபு முடிவு செய்ததை எதிர்த்து நாடு முழுவதிலும் வங்கப் பிரிவினை எதிர்ப்புக் கிளர்ச்சி நடந்தபோது, சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற தேசிய மாணவர் கூட்டத்தில் 'வங்கமே நீ வாழிய' என்ற எழுச்சிமிகு பாடலை பாரதியார் பாடி, வீர முரசு கொட்டினார்.

பங்கிம்சந்திரர் வங்க மொழியில் பாடிய வந்தே மாதர கீதத்தைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதி, காங்கிரஸ் கூட்டங்களில் பாடினார். விபின்சந்திரபாலைச் சென்னைக்கு வரவழைத்து ஊர்வலமாகக் கடற்கரைக்கு அழைத்துச் சென்று, சொற்பொழிவாற்றச் செய்து, மக்களிடையே சுதந்திரப் போராட்ட உணர்வைத் தூண்டிவிட்டார்.

திலகரையும், தாதாபாய் நௌரோஜியையும், லாலா லஜபதி ராயையும், அண்ணல் காந்தியடிகளையும், வ.உ.சிதம்பரனாரையும் குருகோவிந்தரையும், வீர சிவாஜியையும் போற்றிப் புகழ்ந்து பாடி, மக்கள் உள்ளங்களில் தேசபக்தி வளரச் செய்தார்.

இத்தாலியில் மாஜினி என்ற மாவீரனின் உழைப்பால் எழுச்சி பெற்ற மக்கள் நடத்திய உரிமைப் போர், புரட்சிக்குப்பின் உருவான பிரான்சு, யுகப்புரட்சி நடத்தி, ஜாரின் தலைகளைத் தகர்த்து, வீறுடன் எழுந்து நின்ற புதிய ருஷ்யா, சுதந்திர பெல்ஜியம், பிற நாடுகளில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டங்கள் -இத்தகு சொற்சித்திரங்களைத் தீட்டி, நாட்டு மக்களிடையே சுதந்திர தாகத்தை எழுப்பினார்.

அரசியல் விடுதலையைப் போலவே, சமுதாய விடுதலைக்காகவும், அவர் பாடிய பாடல்கள் சாகாவரம் பெற்றவை.

''சாதி மதங்களைப் பாரோம்'' என்றும்

''வேதியராயினும் ஒன்றே-அன்றி
வேறு குலத்தின ராயினு மொன்றே''

★ நம்முடைய தேகமும், உள்ளமும் ஆண்டவனுடைய கோயில். அதைச் சுத்தமாக வைத்துக் காப்பது நம் கடமை.

★ எவ்வளவு கல்வியும் செல்வமும் இருந்தாலும், அடக்கம் இல்லாவிடில் பண்பாடென்பது இல்லை.

★ தீண்டாமை என்பது நமது சமூகத்தில் ஒரு மாசு. தீண்டாமை ஒரு விஷப் பாம்பு. அதைக் கொன்றாக வேண்டும்.

★ பள்ளிக்கூடங்கள் தேசத்தில் எத்தனை இருந்தாலும், பண்பாட்டுக்குப் பள்ளிக்கூடம் வீடேயாகும்.

★ வாழ்க்கையில் தைரியமாக இருப்பதைவிட மகிழ்ச்சி அளிக்கக் கூடிய விஷயம் வேறு என்ன இருக்க முடியும்!

★ ஞானமும், பக்தியும் அனைவருக்கும் உரித்தான பெருஞ் செல்வம்.

★ கோபம் கூடாது. அது முகத்தின் அழகைக் கெடுத்து விடுகிறது. சாந்தமே முகத்திற்கு அழகு தருகிறது.

★ ஒழுக்கத்துடனும், நாணயத்துடனும் ஒவ்வொருவரும் நடந்து கொண்டால், எல்லோருக்கும் நன்மை விளையும்.

★ நம்முடைய சமூகம் சுதந்திர வாழ்க்கை அடைந்து விட்டது. சுதந்திரத்துடன் சுகமும் பெற வேண்டுமானால், மக்கள் அறவழியில் நிற்கவேண்டும்.

— இராஜாஜி



என்றும் பாடி, சாதிப்பிரிவினைகளுக்கு இடம் தராத சமுதாயத்தைக் காண விரும்பினார்.

'வயிற்றுக்குச் சோறிடவேண்டும் இங்கு வாழும் மனிதர்க்கெல்லாம்,' சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம் வெறும் சோற்றுக்கோ வந்ததிந்தப் பஞ்சம்,' 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் சகத்தினை அழித்திடுவோம்.' என்பன போன்ற பாடல்களால் பொருளாதார விடுதலையை வலியுறுத்துகிறார்.

'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்றும்,

''பெண்ணுக்கு விடுதலைநீ ரில்லை
யென்றால்
பின்னிந்த வுலகினிலே வாழ்க்கை
யில்லை''

என்றும்,

''கற்பு நிலை யென்று சொல்ல
வந்தாரிரு
கட்சிக்குமஃது பொதுவில் வைப்
போம்''

என்றும் பெண் விடுதலைக்காக எழுச்சிமிகு பாடல்களைப் பாடி, பெண்ணுரிமை காத்திடப் போர் முரசு கொட்டினார்.

''தமிழ் நாட்டில் மாத்திரமேயல்லாது, பூமண்டல முழுவதிலும், பெண்ணைத் தாழ்வாகவும், ஆணை மேலாகவும், கருதி, நடத்தும் முறை ஏற்பட்டிருப்பது, முற்றிலும் தவறு. அது துன்பங்களுக்கெல்லாம் அஸ்திவாரம், அநீதிகளுக்கெல்லாம் கோட்டை. கலியுகத்திற்குப் பிறப்பிடம்'' என்ற அவரது சொற்கள் பெண்களை அடிமைப்படுத்தும் கண்மூடிப் பழக்கத்தை மாய்க்க வல்லவை.

தேடிச் சோறு நிதம் தின்று, பல சின்னஞ்சிறு கதைகள் பேசி, மனம் வாடித் துன்பத்தில் உழன்று, பிறர்வாடப் பல செயல்கள் செய்து, நரைகூடிக் கிழப்பருவம் எய்தி, கொடுங்கூற்றுக்கு இரையாக மாயும் வேடிக்கை மனிதர்களைப்போல நிலச்சுமையாக இராமல், உயர்ந்த வாழ்வு வாழ வேண்டும், உண்மை வாழ்வு வாழ வேண்டும் என்பதே பாரதியாரின் ஆசை.

தாம் எவ்வளவு துன்பப்பட்டாலும், மக்களுக்கு நன்மை உண்டாக வேண்டும் என்ற கொள்கை உடையவர் பாரதி. யார்க்கும் எதற்கும் எங்கும் எப்பொழுதும் அவர் அஞ்சியதே இல்லை.

அறியாத வயதில் தாயை இழந்தார். அனுபவம் இல்லாத வயதில் தந்தையை இழந்தார். இளம் பிராயத்திலேயே மணம் புரிந்து குடும்பச் சுமையைத் தாங்கினார். சொத்து இல்லை. கொள்கை உறுதி, துரைத்தனத்தாரின் அடக்குமுறை தர்பார் எனினும், வஞ்சகக் கவலைக்கு அவர் என்றும் இடம் கொடுத்ததில்லை. அவருக்குச் சூதுவாது தெரியாது. கையிலிருப்பதைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுத்துவிடுவார்.

> * நீ எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யத் தீர்மானம் செய். நீ எதைத் தீர்மானம் செய்கிறாயோ அதைத் தவறாமல் செய்துவிடு.
>
> — பிராங்ளின்

'கடமை யாவன தன்னைக்
கட்டுதல்
பிறர்துயர் தீர்த்தல் பிறர்நலம்
வேண்டுதல்
உலகெலாம் காக்கு மொருவனைப்
போற்றுதல்
இந்நான் கேயிப் பூமியி லெவர்க்கும்
கடமை னெயப்படும்''

என்று பாரதியார் மனித வாழ்வின் குறிக்கோளை அழகுபட வரையறுத்துக் கூறுகிறார்.

பக்தியால் சித்தம் தெளியும்; செய்கை அனைத்திலும் செம்மை பிறந்திடும்; விந்தைகள் சேரும்; நல்ல வீரர் உறவு கிடைக்கும்; மனத்திடைத் தத்துவம் உண்டாகும்; நெஞ்சிற் சஞ்சலம் நீங்கி, உறுதி விளங்கிவிடும்; இதுவே பாரதியின் திட நம்பிக்கை.

அவரது தோத்திரப் பாடல்களின் சாரமே, மக்கள் தொண்டேதான் மகேசன் தொண்டு என்பது.

''வல்லமை தாராயோ -இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே''

என்று சிவசக்தியையும்

''அசையா நெஞ்சம் அருள்வாய்-
உயிரெலாம்
இன்புற் றிருக்க வேண்டி''—

என்று விநாயகரையும் வேண்டுகிற பாடல்கள் பாரதியாரின் அருள் நெஞ்சத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

கற்றாரும், மற்றாரும் தாமாகவே உதடசைத்தும் பாடக் கூடிய வகையில் எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பாமரரும் விரும்பும் மெட்டு, இவற்றைக் கையாண்டு, பாரதியார் பாடிய பாடல்களைக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை,

''பாட்டுக்கொரு புலவன் பாரதி
யடா-அவன்
பாட்டைப் பண்ணோடொருவன
பாடினானடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனே
னேயடா''

என்று நயம்படச் சுவைபடப் போற்றி மகிழ்ந்ததை எவராலும் மறக்க இயலாது.

எட்டையபுரத்தில் 1882- டிசம்பரில் பிறந்து பதினாறு ஆண்டுக் காலம் எட்டையபுரத்திலும், மூன்றாண்டுக் காலம் காசியிலும், மூன்றாண்டுக் காலம் எட்டையபுரம் அரசவைப் பணியிலும், சில மாதங்கள் மதுரையிலும், 1904ஆம் ஆண்டு நவம்பரில் சென்னை வந்து 'சுதேசமித்திரன்' உதவி ஆசிரியர் பொறுப்பேற்றது முதல் நான்காண்டுகள் சென்னையிலும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறை காரணமாக 1908 செப்டம்பர் முதல் 1918 நவம்பர் வரை பத்து ஆண்டுகள் புதுச்சேரியிலும், சில மாதங்கள் மனைவி"யின் ஊரான கடையத்திலும், 1920ஆம் ஆண்டு முதல் 1921 செப்டம்பர் வரை மீண்டும் சென்னையிலும் வாழ்ந்து நாட்டிற்காக மக்கள் சமுதாய ஏற்றத்திற்காக, தாய்த் தமிழின் உயர்வுக்காக, அறநெறிக்காக, அருந்தொண்டாற்றி 39 வயது முடிவதற்குள்ளாகவே அழியாப்புகழை நிலை நாட்டி விட்டுச் சென்ற பாரதியாரின் வாழ்க்கையை ஓர் இலட்சியவாதியின் வீர வரலாறாக உலகம் போற்றுகிறது.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த புரட்சிக் கவிஞர் பாரதி தாசன்—

''பைந்தமிழ்த் தேர்ப்பாகன்;
அவனொரு
செந்தமிழ்த் தேனீ; சித்துக்குத்
தந்தை;
குவிக்கும் கவிதைக் குயில்; இந்
நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும்
கவிமுரசு;
நீடு துயில் நீக்கப் பாடிவந்தநிலா
காடு கமழும் கற்பூரச் சொற்கோ
கற்பனை ஊற்றாம் கதையின்
புதையல்;
திறம்பாட வந்த மறவன்; புதிய
அறம்பாட வந்த அறிஞன்;
நாட்டில்
படரும் சாதிப் படைக்கு மருந்து;
மண்டும் மதங்கள் அண்டா
நெருப்பவன்;
அயலார் எதிர்ப்புக் கணையா
விளக்கவன்''

என்று பாரதியாருக்குச் சூட்டிய புகழாரம், நம் நெஞ்சில் நிலைத்து விட்ட மணி ஆரம். பாரதியார் பாக்களைத் தமிழர் மறந்தாலும் தமிழ் மறவாது.




"என் பம்ப் செட்டை
இன்ஷூர் செய்ய நான்
மிகச் சிறிய தொகை
செலுத்தினேன்."

# "அது கெட்டுபோன போது வேறொன்றை வாங்க யுனைடெட் இந்தியா உதவியது-விரைவாக !"

உங்கள் பகுதியில் உள்ள யுனைடெட் இந்தியா அலுவலகத்தையோ ஏஜன்டையோ அணுகுங்கள். ஒரு பம்ப் செட் இன்ஷூரன்ஸ் பாலிசி எடுப்பது எவ்வளவு சுலபம் என்பதையும் எவ்வளவு செலவு குறைவு என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.
தீயினாலோ மின்னலினாலோ, இயந்திர அல்லது மின்சார கோளாறினாலோ

உங்கள் பம்ப் செட் கெட்டுப்போனால் அல்லது திருடு போனால் உங்கள் இழப்பிற்கு யுனைடெட் இந்தியா ஈடு செய்யும் — விரைவாக.
உங்கள் குடும்பத்தின் நல்வாழ்வையோ அல்லது உங்களது நல் வாழ்வையோ விதியிடம் விட்டு விடாதீர்கள். உடனே யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் பாலிசி எடுத்துக் கொள்ளுங்கள்; முழு பாதுகாப்பு பெறுங்கள்.

UNITED INDIA

யுனைடெட் இந்தியா விவசாய பம்ப்செட் இன்ஷூரன்ஸ் பாலிசி

**யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.**

*(ஜெனரல் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)*

**தலைமை அலுவலகம்: 24 ஒயிட்ஸ் ரோடு, சென்னை - 600 014.**

இன்றே எங்களது 1000' க்கும் மேற்பட்ட அலுவலகங்களில் ஏதாவது ஒன்றுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

स्वतंत्रता के चालीस वर्ष
FORTY YEARS OF FREEDOM

HTA 7027

# தமிழகத்தில் சர்க்கரைத் தொழில்

ச. மெய்கண்டதேவன், இ.ஆ.ப.
சர்க்கரைத்துறை இயக்குநர்.

சர்க்கரைத் தொழில் குறித்த கொள்கை முடிவுகள் மத்திய அரசால் எடுக்கப்படுகின்றன. புதிய சர்க்கரை ஆலைகள் நிறுவ உரிமம் வழங்குதல், லெவி மற்றும் வெளிச் சந்தை சர்க்கரையை விடுவித்தல், கரும்புக்குக் குறைந்த பட்ச விலை நிர்ணயம் செய்தல், லெவி சர்க்கரைக்கு விலை நிர்ணயம் செய்தல் மற்றும் இது குறித்து அனைத்துக் கொள்கை முடிவுகளும் மத்திய அரசால் மேற்கொள்ளப்படுகின்றன. இக்கொள்கை முடிவுகளுக்கு உட்பட்டு மாநில அரசு, திட்டமிடுதல் மற்றும் செயலாக்கல் போன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றன.

தற்போது தமிழகத்தில் மொத்தம் 25 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 12ஆலைகள் கூட்டுறவுத் துறையிலும், 3 ஆலைகள் பொதுத் துறையிலும், 10 ஆலைகள் தனியார் துறையிலும் இயங்கி வருகின்றன. இவ்வாலைகள் நாள் ஒன்றுக்கு 48,900 கரும்பு அரவை செய்யும் அரவைத் திறன் கொண்டவை. இவை சராசரியாக நாள் ஒன்றுக்கு 50,000 டன்னும், மாதம் ஒன்றுக்கு 14.7 இலட்சம் டன்னும் கரும்புஅரவைசெய்கின்றன.

தமிழகத்தில் 1.80 இலட்சம் எக்டேர்களில் கரும்பு பயிரிடப்பட்டு, ஆண்டொன்றுக்கு 199 இலட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்யப்படுகின்றது. நம் நாட்டிலேயே தமிழகத்தில்தான் ஒரு எக்டேருக்கு அதிகப்படியான கரும்பு மகசூல் செய்யப்படுகிறது. இம்மாநிலத்தில் உற்பத்தியாகும் கரும்பில் ஏறக்குறைய 50 விழுக்காடு சர்க்கரை ஆலைகளால் பயன்படுத்தப்படுகிறது. தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் பதிவு செய்த கரும்பின் மொத்தப் பரப்பில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் 45 முதல் 46 விழுக்காடுகள் வரை பதிவு செய்துள்ளதோடு, ஆண்டுதோறும் இவற்றின் அளவு அதிகரித்துள்ளது.

தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் நிலையான அளவில் சர்க்கரை உற்பத்தி செய்து வருகின்றன. தமிழகத்தின் சர்க்கரை ஆலைகளில் சர்க்கரை உற்பத்தி நம் நாட்டின் சர்க்கரை உற்பத்தியில், 9 முதல் 11 சதவீதமாக உள்ளது. ஒரு ஆண்டில் மற்ற மாநிலங்களிலுள்ள சர்க்கரை ஆலைகளின் அரவை செய்யும் நாட்களைவிட, தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளின் அரவை செய்யும் நாட்கள் மிகவும் அதிகம். கரும்பு ஆணையினரின் ஒருங்கிணைந்த நடவடிக்கையால், கரும்பு அரவை மற்றும் சர்க்கரை உற்பத்தி ஆகியவை ஆண்டுதோறும் மேம்பாடு அடைந்துள்ளன.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் மேம்பட்ட பல நடவடிக்கைகளால் இவ்வாலைப் பகுதிகளில் கரும்பு உற்பத்தி அதிகரித்ததுடன், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் ஆண்டுதோறும் அரவையை அதிகரித்துள்ளன. மேலும், தமிழகத்தில் உற்பத்தியாகும் சர்க்கரையில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் பங்கு 43 முதல் 45 விழுக்காடுகளாகும். இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் மொத்தம் 1,92,000கரும்பு சாகுபடியாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் ஆணடொன்றுக்கு ரூ. 204-





கோடி மதிப்பிற்கு, கரும்பைப் பெறுகின்றன. இதனால் மாநில அரசுக்கு ஆண்டு ஒன்றுக்குச் சுமார் ரூ. 25 கோடி வருமானம் கிடைக்கிறது.

கரும்பிற்குக் குறைந்த பட்ச விலை மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்படுவதால், கரும்பு விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க சர்க்கரைத்துறை இயக்குநரால் கரும்பு ஆணையர் என்ற முறையில் தக்க பரிந்துரைகள் செய்யப்படுகின்றன. சர்க்கரைத்துறை இயக்குநர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் பதவி வழிக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளராகவும் பணியாற்றி வருகிறார்.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அதன் திட்ட மூலதனச்செலவுகளை சரிகட்ட அதன் அங்கத்தினர்களான கரும்புச் சாகுபடியாளர்களிடமிருந்தும், அரசிடமிருந்தும் பங்கு முதலீட்டைப் பெறுகின்றன. 1987-88-ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலுள்ள மொத்த பங்கு மூலதனம் ரூ.3531.05 இலட்சங்களாகும். இதில் ரூ. 1344.45 இலட்சம் அரசின் பங்கு மூலதனமாகும்; ரூ.2186.60 இலட்சம் விவசாய அங்கத்தினர்களின் பங்கு மூலதனமாகும். 1987-88ஆம் ஆண்டில் அனைத்துக் கூட்டுறவு ஆலைகளும் இலாபத்தை ஈட்டியுள்ளன.

தமிழகத்தில் 9 புதிய சர்க்கரை ஆலைகள் (4 கூட்டுறவுத் துறையிலும், 5 தனியார் துறையிலும்) நிறுவ மத்திய அரசு உரிமம் வழங்கியுள்ளது. இப்புதிய ஆலைகளின் அனுமதிக்கப்பட்ட கரும்பு அரவைத் திறன் நாள் ஒன்றுக்கு 22,500 டன்களாகும். மேலும் மத்திய அரசு, தமிழகத்திலுள்ள 12 சர்க்கரை ஆலைகள் தங்களின் அரவைத் திறனை மேலும் விரிவாக்கம் செய்ய அனுமதி வழங்கியுள்ளது. இவை நாளொன்றுக்கு 13,000 டன்கள் அதிகமான அரவைத் திறன் உடையனவாக விளங்கும். இவற்றில் 8 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் தங்கள் அரவைத் திறனை 8750 டன்கள் விரிவாக்கம் செய்கின்றன. மேலும் இரண்டு சர்க்கரை ஆலைகள் தங்கள் அரவைத் திறனை 2500 டன்கள் விரிவாக்கம் செய்ய அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன. இவையனைத்தும் நடைமுறைப் படுத்தப்பட்டால், தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளின் மொத்த அரவைத் திறன், நாளொன்றுக்கு 86,900 டன்களாக உயரும்.

இரண்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் கரும்பு சக்கையினைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி (Co-Generation Plant) செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்படி சர்க்கரை ஆலைகளில் உயர் அழுத்தக் கொதிகலன்களைப் பொருத்தி, தற்போது எரிபொருளாக உபயோகப்படுத்தும் அதே அளவு கரும்பு சக்கையைப் பயன்படுத்தி, மின்சாரம் தயாரித்து, ஆலையின் தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை மின்சார வாரியத்திற்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 430 இலட்சம் ஆகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் நாம் நாட்டிலேயே கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலேயே இது ஒரு முன்னோடித் திட்டமாகும். இத்திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளது.

கரும்பு பயிரிடும் நிலத்திலிருந்த சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பை எளிதாகவும் விரைவாகவும் எடுத்துச் செல்ல சர்க்கரை ஆலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் புதிய சாலைகள் அமைப்பதுடன், பழைய சாலைகளை மேம்படுத்தவும், கரும்பு சாலை மேம்பாட்டுத் திட்டம் சர்க்கரைத் துறையின்கீழ் இயங்கி வருகிறது. சர்க்கரை ஆலைகள் தாம் அரவை செய்யும் கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் கரும்பு மீதான அரசுக்குச் செலுத்தும் மேல் வரி இத்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

சர்க்கரைத் தொழிலில் பொறியியல் மற்றும் அதனைச் சார்ந்த துறைகள் மேலும் மேம்பாடு அடையும் பொருட்டு, புதிய வழிமுறைகளைக் கண்டறியும் பொருட்டு, சர்க்கரை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (Sugar Research Foundation) ஒன்றினை நிறுவ தமிழக அரசால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1988-89 அரவைப் பருவத்தில் தமிழகத்திலுள்ள அனைத்துச் சர்க்கரை ஆலைகளும் 90 இலட்சம் டன்கள் கரும்பு அரவை செய்து 9.16% சர்க்கரைக் கட்டுமானத்தில் 8.24 இலட்சம் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சர்க்கரைத் தொழில் கிராமப் பகுதியில் வாழும் பெரும்பாலான மக்களுக்கு நேரடி வேலை வாய்ப்பையும், ஆயிரக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பையும் அளித்து வருகிறது. இதில் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் பெரும் பங்கு வகிப்பது குறிப்பிடத்தக்கதாகும்.



## நமது செய்தியாளர் பெற்ற பரிசு

"தமிழரசு" செய்தியாளர் திரு பி. வி. கிரி அவர்கள், குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய குழந்தை இலக்கியப் போட்டியில், "இணையிலா மனிதர் ஏவி. எம்." என்னும் வாழ்க்கை வரலாற்றுக் கையெழுத்துப் பிரதிக்கு, ஏவி. எம். அறக்கட்டளையின் இரண்டாவது பரிசு-வெள்ளிப் பதக்கம் பெற்றுள்ளார்.

திரு பி. வி. கிரி, ஏற்கெனவே குழந்தை இலக்கியத்துக்காக 'யுனெஸ்கோ மன்றத்தின் சான்றிதழும், ஏவி. எம். அறக்கட்டளையின் தங்கப் பதக்கமும், தமிழக அரசின் முதற் பரிசும், மத்திய அரசின் பரிசும், சிறந்த பத்திரிகையாளருக்கான வி.ஜிபி. அறக்கட்டளையின் சிறப்பு விருதும், 'மழலைக் கவிஞர்' விருதும் பெற்றுள்ளார்.

**கடினமான நிலத்தில் ஏர்கட்டி உழுவோரிடமும், சாலை அமைக்கச் சரளைக்கல் உடைப்போரிடமும் அவன் இருக்கின்றான். அவர்களோடு அவன் மழையில் நனைகின்றான்; வெயிலில் உலர்கின்றான்! அவனைப் போல நீங்களும் புழுதியில் இறங்கி வாருங்கள்; நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து உங்கள் இறைவனைக் கண்டுகொள்ளுங்கள்!**

**—தாகூர்**

# உழைக்கும் மகளிர்க்கு உதவும் சங்கம்



சொந்த வீடு இல்லை, பாதையோரமே படுக்கையிடம், போதிய கல்வியறிவு இல்லாமை, சமுதாய விழிப்புணர்ச்சி இல்லாதது, சுற்றுப் புறச் சூழலின் அருமை தெரியாது, இப்படிப் பலவகையிலும் இன்னலுக்கு உள்ளாகி ஒரு குறுகிய வட்டத்துக்குள் வாழும் மக்கள்...

இவர்கள் தொழில் பூ விற்பது, மீன் விற்பது, இட்லி விற்பது, பீடி சுற்றுவது, கூடை முடைதல் இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். இவர்களை நம்பி யார் கடன் கொடுப்பது!ஒரு வேளை கடனைப் பெற்றுக்கொண்டால், அதை முறையாகத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்கிற பொறுப்புணர்வைத் தூண்டுவது யார்?

இக்கேள்விகளுக்கு விடையளிக்க 1978இல் தோற்றுவிக்கப்பட்டதே, உழைக்கும் மகளிர் கூட்டுறவுச் சங்கம்.

இந்தக் கூட்டுறவுச் சங்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

1981ஆம் ஆண்டு இச்சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொடங்கி வைத்தவர் நாடாளுமன்றச் சபாநாயகர் திரு. பல்ராம் ஜாக்கர் அவர்கள்.

ஏழ்மையில் இருக்கும் பெண்களை, குறிப்பாகக் கைவிடப்பட்ட சமுதாயத்து மக்களை உயர்த்த வேண்டும் என்கிற நோக்கத்தில், அவர்களை ஒருங்கிணைந்த ஒரு சக்தியாக உருவாக்கி அவர்களின் நிலையை உயர்த்துவதே இச்சங்கத்தின் நோக்கம்.

சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்குகிறார், இச்சங்கத்தின் தலைவர் திருமதி ஜெயா அருணாசலம்.

"முதலில் ஏழ்மையில் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகள் எவை எவை என்று ஆய்வு செய்து தீர்மானிக்கிறோம். பிறகு அந்தப் பகுதிக்குச் சென்று, அங்குள்ள பெண்களை அழைத்துப் பேசுகிறோம். சங்கம் எப்படி இயங்குகிறது, எப்படி உதவி செய்கிறது, கடனைப் பெறுவது, கடனைத் திருப்பிச் செலுத்துவது எப்படி, என்பது போன்ற செய்திகளை விரிவாக எடுத்துக் கூறுகிறோம்.

இதன் பின் விருப்பம் தெரிவிக்கும் பெண்களை ஒரு குழுவாக உருவாக்கி, அந்தக் குழுவிற்கு ஒரு தலைவரையும் அவர்களின் விருப்பத்தின் பேரிலேயே தேர்வு செய்து அவர்களைச் சங்கத்தின் உறுப்பினராக்கிக் கொள்கிறோம். உறுப்பினரான பின்பு சிறிது காலம் அவர்கள் கடன்பெறக் காத்திருப்பார்கள். அந்தச் சமயத்தில் அவர்களைப் பற்றி நாங்கள் முழுமையாக அறிந்து கொள்கிறோம்.

பின்னர் அவர்களை அழைத்து குழுத் தலைவருக்கு ரூ.400. குழு உறுப்பினருக்குத்தலா ரூ. 200 கடனுதவி அளிக்கிறோம். திருப்பிச் செலுத்தும் காலம் பத்து மாதங்கள்; கடனைச் செலுத்தும் பொறுப்பை அந்தக் குழுத் தலைவரே ஏற்பார். கடனைத் திருப்பிச் செலுத்திய பின்பு தொகை அதிகமாக்கப்படும்.பிறகு மீண்டும் கூட்டித் தருவோம். இப்படி அவர்களின் நாணயத்தைப் பொறுத்து கடனுதவி அதிகரிக்கும். இதற்கு 18 சதவீதம் வட்டியும் உண்டு.

நிதி உதவி எங்கிருந்து வருகிறது?

இதற்கு முழு நிதியுதவியும் ஒர்க்கிங் உமன்ஸ் ஃபாரம் எனப்படும் உழைக்கும் மகளிர் சங்கம் வழங்குகிறது. சங்கம் தமிழ்நாடு முழுமையும் உள்ளது. இதன் தலைமையகம் சென்னை மயிலாப்பூரிலுள்ள பீமசேனா தெருவில் இருக்கிறது. இதன் கிளைகள், தஞ்சாவூர், வடஆர்க்காடு, அண்ணா மாவட்டங்களில் இருக்கின்றன. இது தவிர மற்ற இடங்களிலும் கிளைகள் திறக்க ஆய்வு செய்து வருகிறோம்.

இதேபோல், ஆந்திரா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் கூட்டுறவுச் சங்கங்களை அந்தந்த மாநிலத்தில் கூட்டுறவுச் சட்டத்திற்கு உட்பட்டுத்தொடங்கி நல்ல முறையில் நடத்தி வருகிறோம்.

சென்னையில் 12,425 பேரும், அதிராமபட்டினத்தில்3,415 பேரும், திண்டுக்கல்லில் 3,251 பேரும், வேலூரில் 3,395 பேரும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

குடிசைப்பகுதியாக வாழ்ந்து கொண்டு, வறுமையில் வாடிக் கொண்டு சுய தொழில் புரியும் அல்லது புரிய நினைத்திடும் அனைத்துப்பெண்களுமே உறுப்பினராகத் தகுதியானவர்கள்தான்.

கடன் வழங்குவது தவிர, சுகாதாரம், சுற்றுச்சூழல் குறித்த அறியாமையைப் போக்குதல், தொழிற் பயிற்சி தருதல், அவர்களுக்குள்ளே தலைமைப் பொறுப்பை ஏற்படுத்துதல், குடும்ப நலம் பற்றி எடுத்துரைத்தல், இவர்களுக்கு ஏற்படும் பொதுப் பிரச்சனைகள், குடும்பப் பிரச்சினைகள் இவற்றைத் தீர்க்க உதவி செய்தல், இப்படிப் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்.

எங்கள் அமைப்பு சமுதாயத்தில் புழு, பூச்சியாக மதிக்கப்பட்ட ஓர் இனத்தைத் தத்து எடுத்து உதவி செய்து, அவர்களும் மனிதர்கள் தான் என்கிற அந்தஸ்துக்கு உயர்த்துகிற நிலையில் பாடுபடுகிறது.

பெண்களின் உரிமைக்கும், உயர்வுக்கும் நல்வழி காட்டும் பாதையில் நல்ல முறையில்-அதுவும் விளம்பரமில்லாமல் உழைத்து வருகிறது, உழைக்கும் மகளிர் கூட்டுறவுச் சங்கம்.

# தமிழ்நாட்டில் பிரதமர் சுற்றுப் பயணம்

10, 11, 12-11-1988



விமான நிலையத்தில் வரவேற்பு



பீடி சுற்றும் சிறுவனிடம் கவனிப்பு (வேலூர்)






ஆதிதிராவிடர் குடியிருப்பு குடிநீர்த் திட்டம் தொடக்கவிழா (ஸ்ரீபெரும்புதூர்)



சர்க்கரை ஆலைக்கு அடிக்கல் நாட்டுவிழா (வந்தவாசி)



வேர்க்கடலை விவசாயியோடு (செங்கற்பட்டு)






மகளிர் தேசிய தொலைநோக்குத் திட்ட விழா (காஞ்சிபுரம்)

# அதிகமகசூல் பெற ஆடுதுறை 5 உளுந்து

தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை மற்றும் மன்னார்குடி போன்ற புதுப்பாசனப் பகுதிகளில், நெல், நிலக்கடலைக்குப்பின், கோடையில் நிலங்கள் நன்கு பண்படுத்தப்பட்டு, சித்திரைப் பட்டத்தில் (ஏப்ரல்-மே) இறவையில் சுமார் 20,000 ஏக்கரில் உளுந்து பயிரிடப்பட்டு வருகிறது. டி. 9 உளுந்துதான் பெரும்பாலும் இங்கு பயிரிடப்பட்டு வருகிறது. டி. 9 தவிர டிஎம்வி. 1, கே.எம். 2, கோ. 5 போன்ற இரகங்களும் ஆங்காங்கே சாகுபடி செய்யப்படுகின்றன. உழவர்கள் சாதாரணமாக 10-12.5 குவிண்டால் வரை மகசூல் பெற்று வருகிறார்கள்.

ஆராய்ச்சிகளின்படி புதுப்பாசனப் பகுதியைப்போல் பழைய பாசனப்பகுதிகளிலும் உளுந்தை வெற்றிகரமாகப் பயிரிட முடியுமெனக் கண்டறியப்பட்டு உள்ளது. பருத்தியைப் போலன்றி, உளுந்துக்குக் குறைவான தண்ணீரே போதுமானது. களிமண் பாங்கான நிலங்களில் நீர்பிடிப்புத் தன்மை அதிகமிருப்பதால், முதல் நீர்ப் பாசனம் விதைத்ததிலிருந்து 20 நாட்களுக்கு போதுமானதாகும். மீதமுள்ள நாட்களுக்குக் கோடை மழை போதுமானதாகும். கோடை மழைபெய்யவில்லையெனினும், ஒன்றோ இரண்டோ தெளிநீர் பாசனம் (Splash) போதுமானதாகும். மேலே குறிப்பிடப்பட்ட அனுகூலங்களால் பழைய பாசனப்பகுதிகளில் கோடையில் (சித்திரைப் பட்டம்) இரண்டாம் முறையும் உளுந்து சாகுபடிக்கான வாய்ப்புகள் உள்ளன.




ஏபி 920 என்ற இரகம் 'கான்பூர்' உளுந்திலிருந்து தனி வழித்தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்டதாகும். இது தஞ்சையின் புதிய பாசனப்பகுதிகளுக்கும் இறவைப் பயிராய் கோடையில் பயிரிட ஏற்றது. ஆடுதுறை மற்றும் பட்டுக்கோட்டை ஆராய்ச்சி நிலையங்களில் நடத்தப்பட்ட இரகப் பரிசோதனைகளில் ஏபி 980 எக்டேருக்கு சராசரியாய் முறையே 1593, 1497 கிலோ மகசூல் தந்தது. இது டி9ஐவிட முறையே 28,30 சதவீதம் அதிக மகசூல் ஆகும். தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை மற்றும் மன்னார்குடிப் பகுதிகளில் நடத்தப்பட்ட அனுசரணை ஆராய்ச்சியில் எக்டருக்கு சராசரியாய் 1320 கிலோ மகசூல் கிடைத்தது. இது டி9 இரகத்தைவிட 14 சதவீதம் கூடுதல் மகசூலாகும். உயர் விளைச்சல் திறனுடனும், வயல் நிலையில் மஞ்சள் தேமல் வைரஸ், இலைமுரணை வைரஸ் மற்றும் வேர் அழுகல் நோய்களை வாங்கும் சக்தி உடையதாக இருப்பதும் இதன் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சங்களாகும். இந்த இரகம் 70 நாட்கள் வயதுடையது, செடிகள் கரும்பச்சையாய், அடர்ந்து, குட்டையாய் (20-25 செ. மீ.) செங்குத்தாய் இருக்கும். ஒரே நேரத்தில் சீராய் முற்றிடும் தன்மை கொண்டது. இரண்டாம் அறுவடைக்கும் ஏற்றது. இதனால் இதன் வயது மேலும் 15 நாட்கள் கூடுதலாகும். செடியின் இலைகளிலும் கால்களிலும் அடர்த்தியாய் ரோமங்கள் இருக்கும். ஆயிரம் விதைகளின் எடை 35.6 கிராம், புரதச் சத்து 23.5 சதவீதமாகும்.

உயர் விளைச்சல் திறனும், வயல் நிலையில் மஞ்சள் தேமல் வைரஸ் மற்றும் வேர் அழுகல் நோய்களைத் தாங்கும் சக்தியும் கொண்ட இந்த இரகம், தஞ்சை மாவட்டத்தில் புதிய பாசனப்பகுதிகளுக்கு மிகவும் ஏற்றதாய் அமைந்திருப்பதால் இப்பகுதிகளில் விரைவில் இந்த இரகம் பரவிப் பிரபலமடையும் என்பது திண்ணம்.

**ஆடுதுறை 5 உளுந்து கட்டுக்கோப்புச் சாகுபடிக் குறிப்புகள்.**

**வயல்** —வயலை நன்கு உழுது, புழுதி செய்து பாத்திகளும் வாய்க்கால்களும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

**பருவம்** —சித்திரைப்பட்டம் (ஏப்ரல்—மே)

**விதைநேர்த்தி**— கீழ்க்காணும் ஏதாவது ஒருமருந்தினைக் கொண்டு டிரம்களிலோ அல்லது பாலிதீன் பைகளிலோ போட்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

1. பெவிஸ்டின் 2 கிராம்/ஒரு கிலோ விதைக்கு
2. திரம் 2 கிராம்/ஒரு கிலோ விதைக்கு
3. பிரசிகால் 2 கிராம்/ஒரு கிலோ விதைக்கு.

பூஞ்சானக்கொல்லி மருந்துகளால் விதை நேர்த்தி செய்தபின் 24 மணி நேரம் கழித்து விதையுடன் நுண்ணுயிர் வைக்க வேண்டும்.

**விதை அளவு**—20 கிலோ/எக்டேருக்கு

**விதைப்பு** —வரிசைக்கு வரிசை 30 செ.மீ; செடிக்குச் செடி 10 செ. மீ, இடைவெளியில் விதைகளை 2-3 செ. மீ. ஆழத்தில் ஊன்றி விதைக்க வேண்டும்.

**உர அளவு** —விதைப்பதற்கு முன் அடியுரமாய் எக்டருக்கு 25 கிலோ தழைச்சத்தும், 50 கிலோ மணிச்சத்தும் இடவேண்டும்.

**நீர்ப்பாசனம்**— விதைத்தவுடன் ஒரு முறையும், மூன்றாம் நாள் 'உயிர்' தண்ணீரும், அதற்குப் பிறகு 10-15 நாட்கள் இடைவெளியில், மண் மற்றும் தட்பவெப்ப நிபந்தனைகளுக்குட்பட்டு நீர்பாய்ச்ச வேண்டும்.

**டிஏபி இலை வழியூட்டல்** —2 சதம் டைஅமோனியம் பாஸ்பேட் கரைசலை, பூக்கும் தருணத்தில் ஒரு முறையும், 15 நாட்களுக்குப்பின் மீண்டும் ஒருமுறையும் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும்.

**களைஎடுப்பு** — விதைத்ததிலிருந்து 20-25-வது நாள் ஒரு களை எடுக்க வேண்டும்.

**பயிர்ப் பாதுகாப்பு** இளம்பயிரில் இலைதின்னும் புழுக்களைக் கட்டுப்படுத்த பிஎச்சி 10 சதம் தூள் எக்டேருக்கு 20 கிலோ தூவ வேண்டும்.

# நூல் நயம்

**வீரமும் காதலும்**

ஆசிரியர் : ஆனைவாரி ஆனந்தன்

வெளியீடு: நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
41-பி,சிட்கோஎஸ்டேட்,
சென்னை-600 098.

விலை ரூ. 9. பக்:112.

மரபுக் கவிதை மலர்களால் உருவாக்கப்பட்ட கதைப் பாடல்கள் ஏழு கொண்ட நூல் இது. அனைத்துக் கதைப் பாடல்களும் இனிமையாக இருக்கின்றன.

'வீரமும் காதலும்' என்னும் கதைப் பாடலில் பொங்கல் திருநாளும், அதன் தொடர்பாக நாட்டில் நடைபெறும் ஏறு தழுவும் காட்சியும் நல்ல முறையில் சித்திரிக்கப்பட்டுள்ளன. கதையின் முடிவு சோக ராகத்தை எழுப்பினாலும், கவிதை அமைப்பு நம்முள்ளத்தில் ஆனந்தவாரியை ஏற்படுத்தி விடுகிறது.

'பூலவனும் புத்துலகும்' என்னும் கதைப்பாடல், அறிவியல் முன்னேற்றத்தினால் சமுதாயத்துக்கு ஏற்படுகின்ற அழிவுகளைச் சான்றுகளுடன் எடுத்துக் கூறுகிறது— இனிமையான கவிதைப் பின்னணியின் துணையோடு!

கதைப் பாடல்கள் அனைத்துமே சோக விருந்து படைக்கின்றன. அவலமும் ஒருவகைச் சுவைதானே!

தமிழ்ப்பித்தன்.

**மணமகள் யாரோ?**

ஆசிரியர்: மு.சாயபுமரைக்காயர்

விற்பனை உரிமை:
வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு,
தியாகராயநகர்
சென்னை-600 017

விலை: ரூ.12 பக்கம்: 152

இன்றைய வாழ்வின் வெளிப்பாடுகள், இந்நூலில் அடங்கியுள்ள சிறு கதைகளில் பளிச்சிடுகின்றன. ஆசிரியரது நடை, எளிய, இனிய நல்ல தமிழில் சுவையாக அமைந்துள்ளது. பல அறிஞர்களும், அரசாங்கமும் வற்புறுத்தி வருகின்ற வரதட்சிணை ஒழிப்பு, விதவை மறுமணம் போன்ற நல்ல பல கருத்துக்கள் ஆங்காங்கே புகுத்தப்பட்டுள்ளன. சிறுகதைகளில், இஸ்லாமியப் பின்னணியைக் கையாண்டுள்ளார் ஆசிரியர். இப்படைப்பு, சமுதாய மறுமலர்ச்சிக்குப் பெரிதும் உதவும் என்றால், அது மிகையல்ல.

—அ.மருதவிநாயகம்

**மலேசியத் தமிழ் நாவல்கள்-ஓர் அறிமுகம்**

ஆசிரியர் : டாக்டர் ம. மதியழகன்
வெளியீடு: ப்ரீத் வெளியீட்டகம்,
1. புதுத் துறைச் சாலை
காரைக்கால்-609 602.

பக்: 212. விலை ரூ. 40.

மலேசியா வாழ் தமிழர்களின் கைவண்ணங்கள் பற்றிய ஆய்வு நூலாகும் இது. மலேசியாவில் படைக்கப்பட்ட தமிழ் இலக்கியங்கள், அவ்விலக்கியங்கள் எப்படித் தோன்றின, அங்குள்ள புதினங்கள் எத்தன்மையுடையன, மலேசியத் தமிழர்களின் கதை புனையும் ஆற்றல் எப்படிப்பட்டது, என்பவைகளுக்கான விளக்கம் போல் நூல் உருவாக்கப்பட்டிருக்கிறது.




மலேசிய நாட்டிற்கே சென்று பல எழுத்தாளப் பெருமக்களைச் சந்தித்துக் கேட்டறிந்து இதனை அரிய முயற்சியோடு ஆக்கியிருக்கிறார் ஆசிரியர். அதனடிப்படையிலேயே டாக்டர் பட்டமும் பெற்றிருக்கிறார்.

ஆய்வு பற்றிய கட்டுரைகளின் கீழே, அதற்கு அடிப்படையான புதினங்கள் பற்றிய அடிக்குறிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

மலேசியத் தமிழாக்கங்கள் பற்றி வேறு சில நூல்கள் வந்திருந்த போதிலும் இந்நூல் அவற்றுக்கெல்லாம் மேலாகக் குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குகிறது.

—ராஜு'

**கவிதை ஏன்?**

ஆசிரியர் : வே. இரா. சிவஞான வள்ளல

வெளியீடு: திம்மல்பேட்டைஅஞ்சல்
(வழி) அம்பலூர்,
வாணியம்பாடி வட்டம்
(வ.ஆ.மா.)

விலை : ரூ. 6.50. பக். 67

அனைத்துக் கலைகளும் இணையானவையே. இவை, ஆர்வமும், ஈடுபாடும் முயற்சியும் உள்ளவர்களால் வளர்க்கப் பெறும்.

கவிதைக் கலையின் சிறப்பு இந்நூலில் குறிக்கப்படுகின்றது. உண்மைக் கவிஞர்கள், நாட்டுக்கேற்ற நல்ல குடிமக்களை உருவாக்கும் பொறுப்புள்ள சிறந்த தாய் போன்றவர்கள் என்பது ஆசிரியர் கருத்து.

நாடு செழிக்க, நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிட, மக்கள் மனத்தில் நலம் சேர்க்கச் சிறந்த கவிதைகள் வழிகாட்டும்.

பெண்ணுக்கும் கவிதைக்கும் ஒப்புமை சொல்லும் ஆசிரியர், நீர்நிலைகளையும் கவிதைகளோடு ஒப்பிட்டுப் பேசுகின்றார்.

நீர்,குடிப்பதற்கு-பாசனத்துக்குப் பயன்படுகின்றது. கடல் நீரில் முத்தெடுக்கின்றோம். அதுபோல், கவிதைகளும் மக்கள் மனத்தை மகிழ்விக்கின்றன. உணர்வால், அறிவால் மனத்தைத் தெளிவைக்கின்றன, தூய்மை செய்கின்றன, என்பதைப் புலப்படுத்தும் முறை பாராட்டத்தக்கது.

கவிதைக் கடலில் தோய்ந்தெடுத்த ஆசிரியரின் கவிதை உள்ளம், இந்நூலின் வழி புலனாகின்றது.

—டாக்டர் சிவ அரசி
முத்துக்காளத்தி.

**ஜன கண மன**

ஆசிரியர் : ஹெச்.ஜி. ரசூல்,
வெளியீடு: நியூ செஞ்சுரி புத்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ இன்டஸ்ரியல் எஸ்டேட், சென்னை-400 098.

பக்: 128. விலை ரூ. 12.

இந்நூல் ஒரு கவிதைத்தொகுப்பு. மரபுக் கவிதைகளோ, புதுக்கவிதைகளோ அல்ல; 'ஹைக்கூப் என்னும் புதுரகக் கவிதைகளின் கதம்பச் சரமாகத் திகழும் நூல் இது. கவிதைகள் தோறும் சொற் சிக்கனம் தெரிகிறது. அதுமட்டுமல்ல, நூலாசிரிர் ஒரு முற்போக்குச் சிந்தனையாளர் என்பதும் தெளிவாகிறது.

'எங்கள் தேசத்தின்
தேசியப் பறவை
மயில்; எங்கள் தேசத்தின்
தேசிய கீதம்
ஜனகனமன; அங்கிங்கெனாதபடி
எங்கும் பிரசன்னமான
எங்கள் தேசத்தின்
தேசிய வியாதி-
லஞ்சம் மட்டும்தான்!'

—இது போன்ற கவிதைகளே யாவும்.

அமெரிக்க உளவு நிறுவனமான சி. ஐ. ஏ., யூத இனவெறி இயக்கமான ஜியோனிசம் ஏவுகணைகளை அழிக்கும் லேசர் பீம் போன்றவைகளும் கவிஞரின் பார்வைக்குத் தப்பவில்லை. புதுவகைக் கவிதை விரும்பிகள் படித்து மகிழலாம்.

—'முடிகொண்டான்.

**உலக சிந்தனையாளர் டாக்டர் அம்பேத்கார்**

ஆசிரியர் : சோ. சேசாசலம்,
வெளியீடு: குமரிப் பதிப்பகம், 15, நீலா தெற்கு வீதி நாகப்பட்டினம்-611001

விலை: ரூ. 10. பக்: 116.

தீண்டாமை ஒழியப் பாடுபட்டவர்-இந்திய அரசியல் சட்டம் ஆக்கியவர் - சிறந்த பகுத்தறிவாதி என மக்களால் போற்றிப் புகழப்படும் டாக்டர் அம்பேத்காரின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துக்காட்டுகிறது இந்நூல்.

நூலில், அவரது கொள்கைகள்—குறிக்கோள்கள் - கருத்துக்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. மாணவர்கள் மட்டுமல்ல; பெரியவர்களும் படித்துப் 'பயன் பெற வேண்டிய நூல்.

**உலக சிந்தனையாளர் கார்ல் மார்க்ஸ்**

ஆசிரியர் : சோ. சேசாசலம்
வெளியீடு: குமரிப் பதிப்பகம் 15, நீலா தெற்கு வீதி நாகப்பட்டினம்-611 001

விலை : ரூ. 10. பக்:108.

உலக சிந்தனையாளர் வரிசையிலே சிறப்பிடம் பெறுபவர் கார்ல் மார்க்ஸ். அவர் ரஷ்ய நாட்டின் புரட்சித் தலைவர்களிலே ஒருவர். பாட்டாளிகளின் தோழராக விளங்கிய மார்க்ஸின் வாழ்க்கை வரலாற்றில் சில ஏடுகளை இந்நூல் மூலம் நாம் படித்துத் தெரிந்து கொள்கிறோம். எல்லாத் திறத்தாரும் எளிதில் படித்துத் தெரிந்து கொள்ளும் வகையில் எளிய இனிய நடையில் எழுதியுள்ளார் ஆசிரியர்.

நூலில், கார்ல் மார்க்ஸின் சிந்தனைத் துளிகளும், அவரின் தத்துவங்களும் இடம் பெற்றுள்ளன. பத்திரிகைகள் பற்றிய அவர் தம் கருத்துக்கள் சிந்தனையைத் தூண்டுவன. படிக்க வேண்டிய நூல்.

—பி.வி.கிரி.

**வரப்பெற்றோம்;**

**நல்வாழ்வு வாழ!**

ஆசிரியர்: சி.யு.நஞ்சப்பா
வெளியீடு: முருகானந்த நிலையம்
விலை ரூ.3 பக்கம்: 52

சிங்காரம்பாளையம் அஞ்சல்,
காரமடை வழி-641104
கோயம்புத்தூர்.

கீழ்க்காணும் மூன்று நூல்கள், தமிழ்நாடு இயற்கை மருத்துவச் சங்கம், (தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, மதுரை -62020) வெளியிட்டவை.

1. **நெல்லிக்கனி**

ஆசிரியர்:வித்துவான் வீ.ஞானவான்
விலை: ரூ. 2.50. பக்கம்: 42

2. **எலுமிச்சம் பழம்**

ஆசிரியர்: கொ.ரா.வேலாயுதம்
விலை: ரூ. 2.50 பக்கம்: 44

3. **நோயற்றுவாழ ஐந்து வழிகள்**

விலை: ரூ. 2 பக்கம்: 40

## புத்தகங்களைப் பாதுகாக்கப் புதிய வழி

உலகெங்கிலுமுள்ள நூல்நிலையங்கள், ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான புத்தகங்களையும், பத்திரிகைகளையும் வாங்கிச் சேகரித்துவருகின்றன. உலகின் கலாசாரப் பெருமையானது, இந்த நூலகங்களிலுள்ள புத்தகங்களிலே புதைந்து கிடைக்கின்றது என்று சொல்லலாம்.

ஆனால், பெரும்பாலான இந்தப் புத்தகங்கள் சரிவரப் பாதுகாக்கப் படாததால், அழிந்து வருவது மிகவும் வருத்தத்திற்குரிய விஷயமாகும். பல்வேறு நூல்நிலையங்களில் இலட்சக்கணக்கான புத்தகங்களும், அரிய ஆவணங்களும், ஏட்டுச் சுவடிகளும் காலப்போக்கிலே சிதைந்து உதிர்ந்து வருகின்றன. இதனால், அவற்றில் பொதிந்துள்ள செய்திகளும் நமக்குக் கிடைக்காமல் போகக்கூடும்.

காகிதத் தாள்களிலே எவ்வளவுக்கெவ்வளவு அமிலத்தன்மை அதிகமாக உள்ளதோ, அவ்வளவு சீக்கிரத்தில், அத்தாள்கள் சிதைந்து பொடிப்பொடியாகி உதிர்ந்துவிடும்.

அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனில் உள்ள ''லைப்ரரி ஆஃப் காங்கிரஸ்'' என்னும் அமெரிக்க நாடாளுமன்ற நூலகத்தில் உள்ள 1 கோடியே 40 இலட்சம் புத்தகங்களில் தொட்டால் உதிர்ந்துவிடக் கூடிய அளவுக்குப் பழமையாகிச் சிதையும் நிலையில் 30 இலட்சம் புத்தகங்கள் உள்ளன.

இந்தப் புத்தகங்களைப் பாதுகாப்பதற்குப் புதிய திட்டமொன்றை அந்த நூலகம் துவக்கியுள்ளது. புத்தகக் காகிதங்களில் உள்ள அமிலத்தன்மையை அகற்றும் ஆலை ஒன்றை அது நிறுவி வருகிறது. இந்த ஆலை 1991ஆம் ஆண்டு வாக்கில் இயங்கத் துவங்கும். இந்த ஆலையானது ஆண்டுதோறும் 10 இலட்சம் புத்தகங்களின் அமிலத்தன்மையை நீக்கும் திறன் கொண்டதாகும். இதன் மூலம் புத்தகங்கள் சிதைந்து விடாமல் காக்க முடியும்.

# ஆதிதிராவிடர்க்கான குழும வீடுகள்




**புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், வாண்டாக் கோட்டையில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர்க்கான குழும வீடுகள்.**

---

*16.10.88* இதழ் அட்டைப்படம் போற்றிப் பாதுகாக்கப்படும் வகையில் அமைந்துள்ளது. ஆளுநரின் ரூ. 15 கோடி வரிச் சலுகை ஏழை, எளியோரை மகிழ்வித்தது.

எஸ். கதிர்காமன்
பி. வேலங்குளம்,
(பசும்பொன்முத்துராமலிங்கம் மாவட்டம்)

நாமக்கல் கவிஞரைத் தமிழன் மறக்கவில்லை என்பதை 'தமிழரசு' எடுத்துக்காட்டிவிட்டது.

ஆர். அத்தியப்பன்,
மூனுசாவடி
(சேலம் மாவட்டம்)

'என் கணவர்-சில நினைவுகள்' என்னும் கட்டுரை மிக அருமை.

— தொ. மு. மோகன்,
வையப்பமலைத்தொட்டிபட்டி,
சேலம் மாவட்டம்

தமிழ்நாட்டில் பிரதமரின் சுற்றுப் பயணத்தை நேரில் காண்பதுபோல் படம் பிடித்துக் காட்டிவிட்டீர்கள். மற்றும் 'முகத்தில் குறை போக்கலாம்!' என்ற மகிழ்ச்சியான செய்தியை வெளியிட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

— எல். முத்து
ஊத்தங்கரை
(தருமபுரி மாவட்டம்)

நாமக்கல் கவிஞர் வாழ்க்கைக் குறிப்பு, அவரது கடைசிக் கவிதை மிக அருமை.

—எஸ். ராஜேந்திரன்,
நம்புரான்பட்டி
புதுக்கோட்டை மாவட்டம்

முத்துராமலிங்கத் தேவரின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தவுடன், அவரது நாட்டுப்பற்றை அறிந்து கொண்டேன்.

—எஸ். நாகரத்தினம்
படமாத்தூர்.
(பசும்பொன் முத்துராமலிங்க மாவட்டம்)

தமிழ்நாட்டில் பிரதமர் சுற்றுப் பயணக்கட்டுரை, ஒரு நேரடி ரிப்போர்ட்

கே. எம். ஷம்மிகுமார்
வேலூர், (வ. ஆ)

## பார்த்தோம் - படித்தோம்

'மக்கள் தலைவர்,' 'தேசத்தலைவர்' என்ற கட்டுரைகள், பெருந்தலைவர் காமராஜர் மக்கள் மீது கொண்டிருந்த அன்பைக் காட்டுகின்றன.

— ஆர். மதியழகன்
நம்புரான்பட்டி
(புதுக்கோட்டை மாவட்டம்)

அன்னை நாட்டின் அரசவைக் கவிஞர் கட்டுரை அருமை. 'முகத்தில் குறை போக்கலாம்!' அறிய வேண்டிய ஒன்று.

— ஜி. டி. ராஜா, பிரபு, சத்யா,
கிழப்பழுவூர்
திருச்சிமாவட்டம்

பெரியவர் பக்தவத்சலம் பற்றி அவரது புதல்வி எழுதிய கட்டுரை மிக அருமை.

ஆர். ஜி. துரைராஜ்
கீழப்பழுவூர்
(திருச்சி மாவட்டம்)

நாமக்கல் கவிஞர் தேசியப்பணியும், குடும்ப வாழ்க்கை பற்றிய குறிப்புகளும் விவரமாக உள்ளன.

ப. அ. சண்முகம்,
காராம்பூர், (வ. ஆ)

அரசின் திட்டங்களும், பிரதமரின் தமிழக வருகைக் கட்டுரையும், விளக்கப்படங்களும் நன்றாக இருந்தன.

மு. வேதபுரி
கோட்டுப்பாக்கம்(வ. ஆ.)

*1.11.88* சிறப்பிதழ் கண்டேன். அன்னை இந்திராவின் அழகிய புகைப்படம் அட்டையில் அலங்கரித்தது. கற்கண்டு நிகர் கட்டுரைகளும் இனித்தன.

—ப. முருகேசபாண்டியன்
கரப்பாடி
கோவை மாவட்டம்

அன்னை இந்திராவின், இறுதிச் சொற்பொழிவைப் படித்ததும், என் கண்கள் பனித்தன.

எஸ். ஏ. மயில்சாமி
சூலூர்.

காந்தியடிகள், பண்டித நேரு ஆகியோரின் பொன்மொழிகள் பயனுள்ளவை.

வி. கே. வீரசேகரன்
விக்கிரமபாண்டியம்

இந்திரா காந்தியின் முகப்பு என்னைக் கவர்ந்துவிட்டது.

எம். குமார்.
போத்தம்பட்டி புதூர்.

# மரம் வளர்ப்போம்

**துரை. சுந்தரேசன், இ.ஆ.ப.,**
**ஆணையர் மற்றும் செயலர், சுற்றுப்புறச்சூழல் வனத்துறை.**

கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் அடிப்படைத் தேவைகளை, காடு, பல வழிகளில் பூர்த்தி செய்கின்றது. அன்றாடம் சமைப்பதற்கு வேண்டிய எரிபொருளான விறகு, வீடு கட்டுவதற்கு வேண்டிய மரச்சாமான்கள், கால்நடைகளுக்குத்தேவையான தீவனம், விவசாயக் கருவிகள், எருத்தழை உரம் ஆகியவற்றுக்குக் காடு வழி செய்கிறது. கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், நகர மக்களின் தேவைகளான வீடு கட்டுவதற்கு வேண்டிய மரச் சாமான்கள், மேசை, நாற்காலிகள், காகிதம், (ரையான்) செயற்கை நூல், ஒட்டுப் பலகை உற்பத்தி செய்யும் பெரும் ஆலைகளுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் இப்படிப் பலப் பல உபயோகங்களைக் காடு அளிக்கின்றது.

**காட்டின் பெருமை**

நாகரிகத்தின் விளைவாகப் பெரும் நகரங்களும், தொழிற்சாலைகளும் உருவாக்கப்பட்டுள்ளன. இவைகளிலிருந்து வெளிப்படும் நச்சுப்புகை, தூசி, நச்சுப் பொருட்கள் நிரம்பிய காற்று, பேரிரைச்சல், வெப்பம் ஆகியவற்றின் கடுமைகளிலிருந்தும் காத்துக் கொள்ளவும், சுற்றுப்புறச் சூழ்நிலையைச் சுத்தப்படுத்தவும் காடு பேருதவி செய்கின்றது. இதோடல்லாமல் வளமில்லா மண்ணை வளப்படுத்தவும், பொங்கும் உவர் நிலத்தை உகந்ததாக்கவும், கல்லாகும் களர் நிலங்களைக் கரைத்திடவும், விவசாயத்திற்கு அளிக்கப்படும் செயற்கை உரங்கள் மண்ணில் நீடித்து நிலைத்திடவும், நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்கவும் காடுகள் பெரும்பங்கு வகிக்கின்றன. எனவேதான் திருவள்ளுவர்,

'மணிநீரும், மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்.''

என்று காட்டின் பெருமையைப் போற்றுகிறார்.

**சமூகக்காடுகள் திட்டம்**

நாட்டிலுள்ள மக்கள் நல்ல சுற்றுப்புறச் சூழல்களுடன் வாழ, நாட்டின் நிலப் பரப்பில் குறைந்தது மூன்றில் ஒரு பங்கு வனமாக இருக்க வேண்டும் என்று வல்லுஞானிகள் கருதுகிறார்கள், நம் நாட்டில் இது ஒரு தேசிய கொள்கையாகும். தற்சமயம் இந்தியாவின் நிலப் பரப்பில் காடுகள் 20.36 விழுக்காடும், தமிழ்நாட்டின் நிலப் பரப்பில் காடுகள் 15.75 விழுக்காடும் உள்ளன. நம் தமிழ்நாட்டில் உள்ள குறுகிய வனப் பரப்பை விரிவு படுத்தவும், நமது அரசின் பொறுப்பில் இருக்கும் குறுகிய வனப்பரப்பிலிருந்து மக்களின் மரத் தேவைகள் முழுவதையும் ஈடு செய்ய முடியாத சூழ்நிலையை அகற்றவும், வனங்களை நாடி மக்கள் செல்வதை மாற்றி, வனங்களை மக்களுக்கு அருகில் கொண்டு வரவும், உருவானதே சமூகக்காடுகள் திட்டமாகும்.

1960-ஆம் ஆண்டு முதல், தமிழ்நாட்டில் பண்ணைக் காடுகள் திட்டத்தை வனத்துறை செயல்படுத்தத் துவங்கியது. இத்திட்டம் காப்புக் காடுகளுக்கு வெளியில் சமுதாய நிலங்களில், குறிப்பாக ஏரி, கண்மாய் நீர் பிடிப்புப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டன. இத்திட்டம் செயல்பட்ட இருபதாண்டுகளில் 1,33,000 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் எழுப்பப்பட்டன.

1981-ஆம் ஆண்டு முதல் சுவீடனில் பன்னாட்டு மேம்பாட்டுச் செயலாண்மைக் குழுவின் ஆதரவுடன் சமூகக் காடுகள் திட்டம் மிகப் பெரிய அளவில் துவங்கப்பட்டது. ஆரம்பத்தில், இத்திட்டம் 10 வருடங்களில் ரூ. 108 கோடி குறியீட்டுடன், ஐந்து வருடங்களுக்கு ஒரு கட்டமாக, இரண்டு கட்டங்களில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டது. முதல் கட்டத்தில் நிதிக் குறியீடு ரூ. 45 கோடி எனவும் வரையறுக்கப்பட்டது. 1981-இல் துவங்கப்பட்ட 'சீடா' திட்டத்தின் முதல் கட்டம் ஊரக மக்களுக்கு விறகு, சிறு மரங்கள், கால்நடைத் தீவனம், பழங்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் இதர காடுபடு சிறு பொருட்கள் தொடர்ந்து கிடைத்து வர வழி செய்வதை நோக்கமாகக் கொண்டிருந்தது. முதலாவது கட்டத்திட்டம் கீழ்க் காணும் நோக்கங்களைக் கொண்டதாக இருந்தது.

1. காப்புக் காடுகளுக்கு வெளியில் எழுப்பப்பட்ட சமுதாயக்காடுகளை காலக் கிரமத்தில் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு மாற்றுதல்,

2. பொருளாதாரத்தில் பின் தங்கிய பிரிவினர் தங்களுக்குச் சொந்தமான விவசாயத்திற்குப் பயனற்ற நிலத்தில் மரத் தோட்டங்கள் எழுப்ப உதவி செய்தல்,

3. மரத்தோட்டங்களிலிருந்து கிடைக்கக்கூடிய பொருள்கள் தேவையான அளவில் கிராமப்புறங்களுக்குக் கிடைக்க வகை செய்தல்,

4. கிராம மக்கள் தங்களுக்குத் தேவையான மரங்களை பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து கிடைக்கச் செய்வதற்குத் தகுந்த இடங்களில்



எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் மரத் தோட்டங்கள் உண்டாக்குவது மற்றும் அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவது,

காடுகள் திட்டம் இரு அங்கங்களாகச் செயல்படுத்தப்பட்டது. 1.சமுதாயக் காடுகள், 2.பண்ணைக் காடுகள்.

**1. சமுதாயக் காடுகள்**

(அ) தொகுப்பு நடவு முறையில் ஏரிப்படுகைகளின் எதிர்வாய்கள், புறம்போக்கு சமநிலங்கள், சிறு குன்றுகள் போன்ற சமுதாய நிலங்களில் தொகுதி தொகுதியாக எழுப்பப்படும் மரத் தோட்டங்கள்,

(ஆ) சாரி நடவு முறையில் சாலையோரங்கள், இருப்புப்பாதை இருமருங்கிலும் வாய்க்கால் கரைகள் மற்றும் பாசன ஏரிகளில் கரையோரங்களில்சாரிசாரியாகஎழுப்பப்படும் மரத்தோட்டங்கள்.

**2. பண்ணைக் காடுகள்**

(அ) <u>மரவளர்ப்பு</u> ஊக்குவிப்புத் திட்டம்: சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளிகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைகிறார்கள். தலா 500 மரக் கன்றுகள் வரை இலவசமாக வழங்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் முடிவில் வளர்ந்துவரும் மரக்கன்று ஒவ்வொன்றுக்கும் ரூ. 2.50 வீதம் ஊக்கத் தொகையும் அளிக்கப்படுகிறது.

(ஆ) <u>மரவளர்ப்பு விரிவாக்கத் திட்டம்:</u> விவசாயத்திற்கு ஒவ்வாத சொந்த நிலங்களை உடைய நடுத்தர மற்றும் பெரிய விவசாயிகளுக்கு இத்திட்டத்தின் கீழ், அடக்கவிலைக்கே மரக்கன்றுகளை எண்ணிக்கை வரம்பு ஏதுமின்றி விற்பனை செய்து, அவர்கள் நிலங்களில் மரத் தோட்டம் வளர்க்க ஊக்குவிப்பது.

**சமுதாயத்திற்கு நன்மைகள்**

எழுப்பப்பட்ட மரத் தோட்டங்களில் தோட்ட அறுவடையைச் செய்ய முதலில் பஞ்சாயத்துக்களே கோரப்படும். அவை முன் வரவில்லையெனில், அதன் பிறகே பகிரங்க ஏல விற்பனைக்குக் கொண்டு வரப்படும்; இதுவரை அறுவடை செய்யப்பட்ட மரங்களில் மொத்த எடை 4,56,772,31 மெட்ரிக் டன்கள், விற்பனையின் மூலம் கிடைத்த வருவாயை 50 : 50 என்ற விகிதத்தில், வனத்துறையும், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தும் பகிர்ந்து கொள்ளும். இதுவரை இம்மாநிலத்தில் 17 மாவட்டங்களிலிருந்து பல்வேறு பஞ்சாயத்துக்களுக்கு ரூ. 3.8 கோடி 50சதவிகிதத் தொகையாகப் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது.

> **எ**ல்லாத் துறைகளிலும் நாட்டை முன்னேற்றப் பாதையில் வேகமாகச் செலுத்துவது தான் தலைசிறந்த பாதுகாப்பு. ஒற்றுமை, கட்டுப்பாடு, ஆக்கச் செயல்களையும், நாட்டு நலனுக்கு உகந்தவை எவை. அவற்றை எப்படிப் போற்றிப் பாதுகாப்பது என்றெல்லாம் ஆய்ந்தோய்ந்து முடிவெடுத்துச் செயல்படல் வேண்டும்.
>
> -இந்திரா காந்தி

**சமூகக்காடுகள் திட்ட முதல் கட்டச் சாதனைகள்**

1. <u>சமுதாயக் காடுகள்</u>

தொகுப்பு நடவு :

| | எக்டேர் |
|---|---|
| சமநிலம் : | 1,48,091 |
| குன்றுகள் | 26,449. |

சாரி நடவு: 10,184 கி. மீட்டர்.

2. <u>பண்ணைக்காடுகள்</u>

மரவளர்ப்பு ஊக்குவிப்புத்திட்டம்
இலவச விநியோகம் : 508.5 லட்சம் மரக் கன்றுகள்

<u>மரவளர்ப்பு விரிவாக்கத் திட்டம்</u>
விநியோகம் : 1298.6 லட்சம் மரக்கன்றுகள்.

சமூகக் காடுகள் திட்ட முதல் கட்டம் 1987-88 வரை நீட்டிக்கப் பட்டது.

**இரண்டாவது கட்டம்**

இரண்டாவது கட்ட மதிப்பிடப் பட்ட திட்டம் தற்போது தமிழ் நாடு அரசாலும், இந்திய அரசாலும் அங்கீகரிக்கப்பட்டு,1988-89லிருந்து அமலுக்கு வந்துள்ளது. இரண்டாவது கட்ட திட்ட வேலைகள் ஐந்தாண்டுக் காலங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் எந்த ஒரு தனித்துறைக்காக மட்டுமின்றி, தமிழ்நாட்டிற்கே பொதுவான திட்டமாக, தமிழக அரசின் வனம், ஊரக மேம்பாடு மற்றும் விவசாயத் துறைகளால் செயல்படுத்தப்படுவதால், பல மாறுதல்களுடன் வரையப்பட்டுள்ளது.

**இரண்டாவது கட்டக் கொள்கை அம்சங்கள்**

1. நிலமில்லா கிராமப் பெண்களைஇலக்குதாரர்களாகக்கொண்டு அவர்களைச் சென்றடையும் ஊரக வளர்ச்சித் துறையால் நிறைவேற்றப்படும்-மரப்பட்டா திட்டம்.

2. ஏழை விவசாயிகளை இலக்குதாரர்களாகக் கொண்டு, அவர்களைச் சென்றடையும், விவசாயத் துறையால் நிறைவேற்றப்படும் — வேளாண் காடுகள் திட்டம்.

3. வனத்துறை தனது பங்கிற்கு நிறைவேற்றும் ஆதாய வன்மையுள்ள மற்றும் ஆதாய வன்மையற்ற தோட்டங்கள் எழுப்புதலைக் கொண்ட சமுதாய தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், மற்றும் புதிய அங்கமாகச்சேர்க்கப்பட்டுள்ள இடைப்படு காடுகள் திட்டம்,

**சமுதாயத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்**

ஏற்கெனவே வனத்துறையால் தோற்றுவிக்கப்பட்ட 3 இலட்சம் எக்டேர் பரப்பிற்கும் மேலான தோட்டங்கள் தக்க நிர்வாகத் திட்டத்துடன் விஞ்ஞான ரீதியாகப் பராமரிக்கப்படும். புதிய நிலங்களிலும், அவைகள் கிடைக்கும் அளவில், தோட்டங்கள் எழுப்பப் படும். 50,000 எக்டேர் ஏரிப் படுகைத் தோட்டங்களில் மறுநடவு செய்யப்படும். அதற்குத் தேவையான நாற்றுகளில் 80 விழுக்காடு உழவர் நாற்றங்கால்களிலிருந்து பெறப்படும்.

சமுதாயத்தின் நன்மைக்கானஇத் தோட்டங்கள் பொருளாதார ஆதாய வன்மையுள்ள தோட்டங்கள் எனவும், பொதுமக்கள் உபயோகத்திற்காக நீண்ட கால அடிப்படையில்குன்றாத வனஆதாரங்கள் கொண்ட தோட்டங்கள் என்றும் பிரிக்கப்பட்டுள்ளன.

**புஞ்சை நிலங்களில் வேளாண் காடுகள்**

இந்த அங்கம் விவசாயத்துறையால் செயல்படுத்தப்படும். முதல் திட்டக் காலத்தில் மர வளர்ப்பு ஊக்குவிப்புத் திட்டமாக சமூகக் காடுகள் பிரிவில் செயல்படுத்தப் பட்டு வந்ததையே, இன்றைய இரண்டாம் கட்ட திட்ட காலத்தில் விவசாயத் துறை அதன்கீழ் நன்கு செயல்பட்டு வரும் பயிற்சி வழித் தொடர்புப் பிரிவின்மூலம் சிறு,குறு விவசாயிகள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் முதலியோரை அணுகிச் செயல்படுத்த உள்ளது. முதல் கட்ட திட்ட காலத்தில் கொடுக்கப்பட்டதுபோலவேஊக்கத் தொகையும் கொடுக்கப்படும்.

இரண்டாம் கட்ட திட்டக்காலத்தில் 350 இலட்சம் மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இம்மாநிலத்தில் 4 அல்லது 5 மாவட்டங்களில் வேளாண்காடுகள் சோதனை நிலக்கூறுகள் தேர்ந்



தெடுக்கப்பட்டு வேளாண் காடுகள் எழுப்பப்படும்.

**மரப்பட்டா திட்டம்**

இத்திட்டம் ஊரக வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்படும். நிலமற்ற கிராமப் பெண்கள், அட்டவணை இனத்தவர்/மலை ஜாதியினர்களுக்கு பஞ்சாயத்து நிலம் 1 ஏக்கர் அல்லது 1 கி. மீட்டரில் மரங்கள் வளர்க்க மரப்பட்டா உரிமம் வழங்கப்படும். மரங்கள் நடுவதற்காக, பயனடைவோர்களுக்கு மத்திய அரசு உருவாக்கியுள்ள ஊரக நிலமற்றோர் வேலை உத்திரவாதத்திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ் ஊதியம் கொடுக்க வகை செய்யப்படும். ஆனால் 'சிடா' உதவியுடன் கூடிய சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள், மரப்பட்டா திட்டத்தில் பயனடைவோர் மற்றும் வீட்டைச் சுற்றி மரம் வளர்ப்பில் பயன் பெறுவோர் ஆகியோருக்கு மர வளர்ப்புத் தொழில் நுட்பங்களில் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை 451.25 இலட்சம் நாற்றுகளை உழவர் நாற்றங்கால் மூலம் உற்பத்தி செய்யும். ஒவ்வொரு வட்டாரத்திலும் 125 பயனடைவோர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். பயனடைவோர் ஒவ்வொருவருக்கும் அந்தந்த இடத்திற்குப் பொருத்தமான பலவித வகைகளில் நாற்றுகள் வழங்கப்படும். இதற்கு, தரமான விதைகள் வனத்துறையில் சமூகக் காடுகள் பிரிவினால் உழவர்களுக்கு வழங்கப்படும்.

**இடைப்படு காடுகள் திட்டம்**

இது ஒரு புதிய நோக்குடன் இரண்டாவது கட்ட தமிழ்நாடு சமூகக் காடுகள் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம். இதன் கீழ் கிராமங்களை ஒட்டி அமைந்துள்ள இடைப்பட்ட காப்புக் காட்டுப் பகுதிகளை மறு உற்பத்திக் காடுகளாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. காட்டை அடுத்த கிராம மக்களுக்கு நேர்முக மற்றும் மறைமுகப் பயன்கள் அளிக்கும் விதத்தில் இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

காப்புக் காட்டுக்கும், கிராமத்துக்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள தனியார் நிலங்கள் மற்றும் அரசுரிமையான நிலங்களும் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும், தோட்ட அமைப்புப்பணி, நீர் நிர்வாகம் மற்றும் மறு உற்பத்தி உத்திகளால் நுண் நீர்ப்பிடிப்பு வட்டாரம் முழுவதிலும் செயல் ஆற்றப்படும். காப்புக் காட்டுக் குன்றுகளின் தரம் குன்றிய பகுதிகளில் மேல் சரிவு சுற்றுப்புறச் சூழல்களை மேம்படுத்தும் நோக்கில் இயற்கை வளங்களை ஸ்திரப்படுத்துதல, நடுப்பகுதி மற்றும் கீழ்ப்பகுதிச் சரிவுகளிலும் அதனை அடுத்த இடைப்பகுதிகளிலும் நிலையான தாவரச் சொத்துக்களை ஏற்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும். கிராம மக்கள் உபயோகத்திற்கு அதாவது விறகு, தீவனம், பசுந்தாள் உரம், குடிசை கட்டத் தேவையான உபகரணங்கள், சிறு மரங்கள் மற்றும் காடுபடு பொருள்களைத் தரும் மரவகைகளும், குடிசைத் தொழில்களுக்கு உதவும் மூங்கில், கத்தாழை முதலியனவும் வளர்க்கப்படும். காப்புக் காட்டுக் குன்றுகளின் மேல், இடை, கீழ் ஆகிய மூன்று பகுதிகளும் ஒரு நுண நீர்ப்பிடி வட்டாரமாக்கப்பட்டு, வளமண்ணைப் பாதுகாப்பு மற்றும் நீர்நிர்வாக உத்திகள் ஒருங்கிணைந்த முறையில் செயற்படுத்தப்படும். இத்திட்டம் பயனடையும் கிராமத்தாரர்களின் பங்கு, ஆதரவு மற்றும் ஒத்துழைப்பு போன்ற பல்வேறு பல்நோக்கு அணுகுமுறைகளை எதிர் நோக்குகிறது. மேலும் இடைப்படுகாடுகளை ஒட்டியுள்ள கிராமங்களில் வசிக்கும் வறுமைக்கோட்டுக்குக் கீழ் நிலையிலுள்ள குடும்பங்களில், ஒரு குடும்பத்தில் ஒருவருக்காவது ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பளிக்க இத்திட்டம் வழி வகுத்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் இடைப்படுகாடுகளை அடுத்துள்ள கிராம மக்கள் அடையும் முக்கிய பலன்களாவன :—

1. அவர்களுக்குத் தேவையான விறகுகள், கால்நடைத் தீவனம், மற்றும் இதர காடுபடு பொருள்கள்.

2. இவை தவிர நிலத்தடி நீர் வன்மை அந்தப் பிரதேசங்களில் அதிகப்படுவதால் ஏற்படும் வேளாண் விளைச்சலில் அதிக மகசூல்.

இரண்டாம் கட்ட திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில் 4080 எக்டேர் நிலங்கள் மேற்கூறப்பட்ட முறையில் சீர் திருத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்து வரும் ஆண்டுகளில் இதில் ஏற்படும் அனுபவத்தைக் கொண்டு விரிவுபடுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**நாற்று உற்பத்தி மற்றும் விரிவாக்கு திட்டம்**

தரமான நாற்றுகளை உழவர் நாற்றங்கால்கள் மூலம் எழுப்புவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம். உழவர் நாற்றங்கால்தாரர்களுக்கு நாற்று உற்பத்திக்கு ஆகும் செலவுக்கு மேல் 25 விழுக்காட்டுத் தொகை ஊக்கத் தொகையாகவும் கணிக்கப்படும்.

**ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு**

இரண்டாவது கட்ட திட்டத்தில் தரக்கட்டுப்பாடு மிகவும் வலியுறுத்தப்பட்டுள்ளதால், சமூகக்காடுகள் பிரிவின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவில் விதை மரத்தோட்டங்கள் மற்றும் குறிப்பிடப்பட்ட விதை மரங்களிலிருந்து தரமான விதைகள் சேகரிக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும். மற்ற ஆராய்ச்சி மற்றும் நிறுவனங்களின் நெருங்கிய ஒத்துழைப்பும் பெறப்படும். ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மற்றும் இதர சார் நடவடிக்கைகள் செவ்வனே நடைபெற நான்கு வன அறிவியல் மையங்களும் முழுமையாக நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் வனம் வளர்ப்போம்; வளம் காப்போம்

# சேலம் மாவட்டம்: வளர்ச்சிப் பணிகள்



முன்னேற்றப்பாதையில் சாதனை புரிந்து வருகிறது சேலம் மாவட்டம்.

சேலம் மாவட்டமானது தொழில் வளம் நிறைந்த மாவட்டமாகும். நெசவுத் தொழிலில் ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உற்பத்தித் திறன் கொண்ட மாவட்டம். இதனைக் கருதியே சேலத்தில் விமான நிலையம் அமையவிருக்கிறது.

சேலத்தில் இருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள காமலாபுரத்தில் சேலம் விமான நிலையம் அமைக்க 150 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு உள்ளது. அதில் 5 ஆயிரம் அடி நீளமுள்ள விமான ஓடு பாதை அமைக்கப்பட இருக்கிறது. இந்த விமான நிலையம் போயிங் விமானமும் இறங்கும் வகையில் அமைக்கப்படுகிறது. ஆளுநரின் ஆலோசகராக இருந்த திரு எஸ்.எஸ்.சித்து இதற்கு அடிக்கல் நாட்டினார். இன்னும் ஒரு ஆண்டில் விமான நிலையம் செயல்படத்தொடங்கும்.

**பேருந்து நிலையம்**

முன்னேற்றப்பாதையில் முனைந்து நிற்கும் சேலம் மாவட்டத்தில் பேருந்து நிலையம் நீண்ட நாட்களாக நிறைவேறாமல் இருந்து வந்தது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எம்.எப். பாரூக்கி திறந்து வைத்த புதிய பேருந்து நிலையம் உலக வங்கி உதவியுடன் தமிழ் நாட்டிலேயே சிறந்த பேருந்து நிலையமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**மேம்பாலம்**

அரசினர் மருத்துவ மனைக்கு அருகில் ரயில்பாதை மூடப்பட்டு விட்டால் போக்குவரத்திற்குச் சிரமமாக இருக்கும். அதைத் தவிர்க்கும் பொருட்டு மேம்பால வேலை ஆரம்பமாகி செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் நிறைவேறும்பொழுது மக்கள் சிரமமின்றிப் பயணம் மேற்கொள்வர்.

**மருத்துவக் கல்லூரி**

சேலம் மருத்துவக் கல்லூரிக்கான கட்டடம் சேலம் இரும்பாலைக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட உள்ளது. விரைவில் பணி துவங்கும். அதற்குத் தேவையான நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுவிட்டது.

**இ.எஸ்.ஐ. மருத்துவ மனை**

இ.எஸ்.ஐ மருத்துவமனைக்காக ரூ. 1.11 லட்சத்தில் 55 படுக்கைகள் கொண்ட நான்கு அடுக்கு மாடிகள் கொண்ட கட்டடம் கட்டி மத்திய தொழில் துறை துணை அமைச்சர் திரு.ஆர்.கே.மாளவியா அவர்களைக் கொண்டு திறந்துவைக்கப்பட்டது. மேலும் ரூ. 67 லட்சம் செலவில் மருத்துவர், நர்ஸ் மற்றும் வேலை செய்யும் பணியாளர்களுக்கு தங்கும் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இந்த மருத்துவமனையை சேலம், மேட்டூர், ஈரோடு, பள்ளிப்பாளையம், ஆத்தூர், குமாரப்பாளையம், திருச்செங்கோடு ஆகிய பகுதிகளில் உள்ள தொழிலாளர்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

**பாதாளச் சாக்கடைத் திட்டம்**

சேலம் பாதாளச்சாக்கடைத் திட்டத்தை ரூ. 12 கோடியில் செயல்படுத்த அரசு அனுமதித்தும், சாக்கடை நீரைத் தேக்க சரியான இடம் இல்லாததால் திட்டம் செயல்படுத்தப்படாமல் இருந்தது. இப்போது பனமரத்துப்பட்டி ஏரியில் சாக்கடை நீரை விட முடிவாகி உள்ளது. எனவே விரைவில் இதற்கான பணிகள் துவங்கும்.

**குடிநீர்த் திட்டம்**

சேலம் ஆத்தூர் நகராட்சிகளுக்குக் குடிநீர் வழங்க உலக வங்கி உதவியுடன் ரூ. 29 கோடியே 39 லட்சம் செலவில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் 1990ஆம் ஆண்டுக்குள் முடிவடையும். இதன் மூலம் 11 பேரூராட்சி மற்றும் 254 ஊராட்சியைச் சேர்ந்த 5 இலட்சம் மக்கள் பயனடைவர்.

சேலம் மாவட்டம் இவ்வாறு பல்வேறு வளர்ச்சிப்பணிகளில் முன்னேற்றப்பாதையில் முனைந்து செயல்பட்டு வருகிறது.

**இரெ. மருதமுத்து,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சேலம்.**

## மாணவர் பக்கம்



# கயிறில்லாத பம்பரம்

**புலவர் வெற்றியழகன்**

கயிறில்லாத பம்பரம்
காலம் விட்ட பம்பரம்!
இயற்கை யான பம்பரம்
இன்றும் சுற்றும் பம்பரம்!

நம்மைத் தாங்கும் பம்பரம்
நாநிலத்துப் பம்பரம்!
செம்மை யான பம்பரம்
சிறப்பு மிக்க பம்பரம்!

தடைகள் கோடி நேரினும்
தலைகள் கோடி சாயினும்
கடமை சிறிதும் தவறிடாக்
கட்டுப் பாட்டுப் பம்பரம்!

நிறுத்தி னாலும் நின்றிடா
நிலைமை கொண்ட பம்பரம்!
பொறுமை யாகச் சுற்றிடும்
பூமி என்னும் பம்பரம்!

### கொல்லா விரதம்

"கொடுமையான நோன்பு இருப்பதைக் காட்டிலும், கொல்லாவிரதம் மிகமிகச் சிறப்புடையது"

இராமலிங்க அடிகள்

### சமுதாயம்

"தனக்கு வாழ்வளிக்கும் சொந்த மண்ணில் வேர்பிடிக்காத எந்தச் சமுதாயமும் நீண்டநாள் வாழ்வதோ, செம்மையான வாழ்வு வாழ்வதோ முடியாத காரியமாகும்."

— நேரு



விளையும் பயிர்..



# இளைய மிருதங்கக் கலைஞர்

கலைமாமணி மதுரை சோமு பாட்டுப்பாட, சிறுவன் ஒருவன் மிருதங்கம் வாசித்தான். இசைக் கச்சேரி களைகட்டியது. இசைமேதையின் பாட்டுக்கு, சிறுவனின் மிருதங்க வாசிப்பு அனைவரையும் கவர்ந்தது. அந்தச் சிறுவன் யார்? அவன் தான் பையூர் சி.கோபாலகிருஷ்ணன்.

1986இல் இச்சிறுவனின் மிருதங்க அரங்கேற்றம் நடந்தது. மாண்புமிகு சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் சிறுவனின் திறமையை வெகுவாகப் பாராட்டினார்.

தமது 9வது வயதிலிருந்து மிருதங்கம் வாசிப்பதில் பயிற்சி; இன்று சிறந்த இளம் கலைஞராக விளங்கும் பையூர் சி. கோபாலகிருஷ்ணன், தற்போது பி.காம்., இரண்டாம் ஆண்டு பயின்று வருகிறார். இம்மாணவன், பிரபல மிருதங்க வித்துவான் வைத்தீஸ்வரன் கோயில் வைத்தியநாதனின் மாணவன். மேலவைத் தலைவரின் முன்னாள் நேர்முக உதவியாளர் திரு சந்திரசேகரனின் மகன்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், செயற்படுத்தி வரும் தகுதி வாய்ந்த கலைஞர்களுக்குச் சபைகளின் வாயிலாக ஊக்கம் அளிக்கும் திட்டத்தின் கீழ், 1987-88ஆம் ஆண்டில் நடைபெற்ற நேர்முகத்தேர்வில் இவர் மிருதங்கக் கலைஞராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.—பி.வி.ஜி.



# காட்டுப் பன்றி

**கா**ட்டுப் பன்றி, காடுகளிலும் நாணல் புதர்கள் மண்டிய இடங்களிலும் வசிக்கின்ற ஒரு பிராணியாகும்.

காட்டுப் பன்றியின் கால்கள் ஒவ்வொன்றிலும் நான்கு விரல்கள் உண்டு. விரல் நுனி கொம்புப் பொருள் குளம்புகளால் மூடியிருக்கும். இரண்டு நடு விரல்கள் முழு வளர்ச்சி பெற்று உள்ளன. ஓரங்களில் உள்ள இரண்டு விரல்கள் முழு வளர்ச்சி அடையாதவை. இவை தரையின் மேற்பரப்பை எட்டுவதில்லை. மென்மையான சதுப்பு மண்ணில் நடு விரல்கள் சற்று அகன்று விலகுகின்றன. அப்போது ஓர விரல்களின் குளம்புகள் ஆதாரத்தின் மேற்பரப்பை அதிகப்படுத்துகின்றன. இந்தக் காரணத்தால் பன்றி சேற்று நிலத்தில் புதைந்து விடுவதில்லை.

காட்டுப் பன்றியின் கால்கள் ஓரளவு குட்டையானவை. எனவே, அதன் உடல் தரைக்கு மேலே சிறிதளவே உயர்ந்திருக்கிறது. ஆப்பு வடிவில் கூர்மையான தலை கொண்ட நீண்ட உடல் மிகஅடர்ந்த புதர்களுக்கு உள்ளேகூட அனாயாசமாகப் புகுந்து விடுகிறது.

புதர்கள் மண்டிய இடங்களிலும், ஈர நிலத்திலும் வாழ்ந்து வருவதன் விளைவாகக் காட்டுப் பன்றியின் தோல் போர்வையிலும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இதன் தடித்த தோல் கட்டை மயிர்கள் வடிவில் உரப்பான ரோமங்களால் மூடப்பட்டிருக்கிறது. பன்றி அடர் புதர்களின் ஊடாகச் செல்ல நேர்கையில் இந்த ரோமங்கள் கிளைகளில் சிக்கிக் கொள்வதில்லை. தண்ணீரிலும் இவை நனையா. ஆனால், அம்மாதிரி ரோமங்கள் உடலைக் குளிர்வதிலிருந்து சரியாகக் காக்கத் திறனற்றவை. பன்றியின் உடல் வெப்பத்தைத் தடித்த தோலடிக் கொழுப்பு அடுக்குதான் வெளிச் செல்லாதபடி காக்கிறது.

காட்டின் பன்றிகளுக்குப் போதிய உணவு கிடைக்கிறது. மற்றக் குளம்பிகளைப் போலன்றி, பன்றிகள் சர்வபட்சிகள், புல், கம்பு, கனிகள், தாவர வேர்கள், பூச்சிகள், அவற்றின் லார்வாக்கள், சுண்டெலிகள் முதலிய எல்லாவற்றையும் அவை தின்னும். அவற்றின் உணவுப் பொருள்களில் ஒரு பகுதி தரையின் மேற்பரப்பிலேயே கிடைக்கிறது. மற்றப் பகுதிகள் தரைக்குள் இருக்கிறது. பன்றியின் நீண்ட மூஞ்சியின் நுனியில் குருத்தெலும்பாலான சிறு வட்ட விளிம்பு மடிப்பு அமைந்திருக்கிறது. இதனால் மண்ணைக் கிண்டி, மோப்பத்தினால் உணவுப் பொருள் இருக்கும் இடத்தைக்கண்டு கொண்டு காட்டுப் பன்றி அதை அகழ்ந்து எடுத்துத் தின்கிறது. அதன் கனத்ததலையை வலிமை வாய்ந்த கழுத்துத்தசைகள் தாங்கிக் கொள்கின்றன.

பன்றியின் பற்கள் பல்வகைப் பொருள்களை உண்பதற்கு ஏற்றவை. தரையைக் கிண்டுவதற்கு இடையூறாயிருக்கும் தாவர வேர்களைப் பன்றி தன் பெரிய கோரப் பற்களால் துணித்து விடுகிறது. ஆண் பன்றிகளின் கோரப் பற்கள் மேல் நோக்கி வளைந்து வாயிலிருந்து வெளியே துருத்தியிருக்கின்றன. இவை தற்காப்பு ஆயுதங்களாகப் பயன்படுகின்றன. முன்னே நீண்டிருக்கும் மிகப் பெரிய வெட்டுப் பற்களால் பன்றி உணவைத் துண்டாக்கவும் தரைக்குள்ளிருந்து கவ்வி எடுக்கவும் செய்கிறது. கடைவாய்ப் பற்கள் புடைப்புகள் கொண்டவை. தாவர உணவையும் விலங்கு உணவையும் மென்று அரைக்க இவை வல்லவை. காட்டுப் பன்றிகள், தடவைக்கு நான்கு முதல் ஆறுவரை குட்டிகள் போட்டு இனப்பெருக்கம் செய்கின்றன.

(வ. ஷாலாயேவ், நி. ரீக்கல் எழுதிய 'விலங்கியல்' என்னும் நூலிலிருந்து)

**—கிருஷ்ண முத்துராமலிங்கம்**

## 'சாதாரணக் கைதியாக இருக்கிறேன்!'



எரவாடா சிறையில் அண்ணல் காந்தியடிகளை அரசியல் கைதியாக வைத்திருந்ததால், அவருடைய செலவுக்காக மாதம் 150 ரூபாய் வழங்க அரசு உத்தரவிட்டது. சிறை அலுவலர் காந்தியடிகளின் அறைக்குத் தேவையான மேசை நாற்காலி முதலான வசதிகள் செய்து கொடுத்தார். அதைப் பார்த்த காந்தியடிகள் ''இவை எதற்கு, எடுத்துச் செல்லுங்கள்'' என்று கூறினார்.



''எல்லாம் உங்களுடைய வசதிக்காகத்தான்!'' என்று சிறை அலுவலர் கூறினார். உடனே காந்தியடிகள்,

''என்னுடைய வசதிக்காகச் செலவிடப்படும் தொகை இந்திய அரசு கஜானாவிலிருந்துதானே வருகிறது? அது மக்களுடைய பணம்தானே? அதை வீணாக்க நான் விரும்பவில்லை. என்னைச் சாதாரணக் கைதியைப் போல் நடத்துங்கள், அது போதும்; அதற்காக மாதம் முப்பத்தைந்து ரூபாய் செலவழிக்கலாம் என்று நினைக்கிறேன்'' என்றார்.



சிறை அலுவலர் எவ்வளவோ கேட்டும் காந்தியடிகள் அதற்குச் சம்மதிக்கவில்லை. ஆகவே, அவருடைய விருப்பப்படியே, பித்தளைச் செம்பு, தட்டு முதலியவற்றை அண்ணலின் அறைக்கு அனுப்ப அவர் ஏற்பாடு செய்தார்.

# படமும் செய்தியும்



பண்டிதநேரு அவர்களின் நூற்றாண்டு விழா வையொட்டி, சென்னை-கத்திப்பாரா சந்திப்பில் உள்ள அன்னாரின் திருவுருவச்சிலைக்கு மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் 14.11.88 அன்று மாலையணிவித்தார்.



ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி.இராம கிருஷ்ணா சென்னைக்கு வருகைதந்த சீன நாட்டுக் குடும்ப நலத்துறை இணையமைச்சர் பேங் பெயுன் அம்மையாருக்கு 19.11.88 அன்று, வரவேற்பு விருந்தளித்து விருது வழங்கினார்.



மொரீஷியஸ் நாட்டு கவர்னர் ஜெனரல் திரு. வீராசாமி ரிங்காடோ 19.11.88 ல் சென்னைக்கு வருகைதந்தார். அவரை மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி.அலெக்சாண்டர், ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி. இராமகிருஷ்ணா, அரசு தலைமைச் செயலாளர் திரு எம்.எம்.இராசேந்திரன் ஆகியோர் விமான நிலையத்தில் வரவேற்றார்கள்.





நேரு நூற்றாண்டு விழாவையொட்டி 15.11.88ல் சென்னையில், பல்கலைக் கழக உள் அரங்கில் நடைபெற்ற குழந்தைகள் அணிவகுப்பு-கலை நிகழ்ச்சியை மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர், அவரது துணைவியார் திருமதி அக்கம்மா அலெக்சாண்டர் ஆகியோர் பார்வையிட்டனர்.

தென்மண்டல எண்ணெய்த்தொழிற்பிரிவின் சார்பில் 16.11.88ல் நடத்தப்பெற்ற நேரு நூற்றாண்டு மற்றும் நாற்பதாம் ஆண்டு விடுதலை நாள் விழாவை மத்திய அரசின் பெட்ரோலியம் இயற்கை எரிவாயுத்துறை இணையமைச்சர் திரு பிரேம்தத் சென்னையில் துவக்கிவைத்தார். விழாவிற்கு ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி. வி. இராம கிருஷ்ணா தலைமை தாங்கினார்.



சென்னையில் (30.10.88) நடைபெற்ற ஏழாவது அறிவியல் பேரரங்கு தொடக்க விழாவில் சென்னை வானொலி நிலைய இயக்குநர் திரு கோ. செல்வம், சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர் திரு ஏ.பால்ராஜ், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு வி.ஆர்.தீனதயாளு, பள்ளிக்கல்வி இயக்குநர் திரு கி.கோபாலன், அறிவியல் மன்றங்களின் கூட்டமைப்பின் புரவலர் திரு பாலசுப்பிரமணியன் ஆகியோர் பங்கேற்றனர்.





# நேரு நூற்றாண்டு விழா

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் நூற்றாண்டுத் தொடக்க விழா, தமிழநாடு அரசு சார்பில் 14.11.88 முதல் 18.11.88 வரை சென்னையில் நடைபெற்றது. இதையொட்டி கலைவாணர் அரங்கம், நேரு விளையாட்டரங்கம், கத்திப்பாராசாலை, தேவநேயப் பாவணர் நூலகம் போன்ற பல இடங்களிலும் இவ்விழா தொடர்பான நிகழச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

முதல்நாள் காலையில் கத்திப் பாரா சாலை சந்திப்பில் உளள நேரு சிலைக்கு மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி.அலெக்சாண்டர் ஆலோசகர் திரு ஜி.வி. இராமகிருஷ்ணா, அரசு தலைமைச செயலாளர் திரு எம்.எம.இராஜேந்திரன ஆகியோர் மாலையணிவித்தனர்.

காலை 10 மணியளவில் கலைவாணர் அரங்கில் குழந்தைகள் திரைப்படத்தொடக்க விழாநடைபெற்றது. செய்தித்துறை இணை இயக்குநர் திரு.வி.டி.வீரப்பன வரவேற்புரையுடன் தொடங்கிய அவ் விழாவிற்குக் கல்வித்துறைச் சிறப்பு ஆணையரும் செயலாளருமான டாக்டர் எச். பி. என். ஷெட்டி தலைமைதாங்கினார். குழநதைகளுக்கான திரைப்படங்களைத் தொடங்கி வைத்து அரசு தலைமை செயலாளர் திரு எம்.எம்.இராஜேந்திரன் உரையாற்றினார்.

அன்றுமாலை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் செய்தி சுற்றுலாத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் திரு செ.ராம்தாஸ் வரவேற்புரையாற்றினார்.

நேரு நூற்றாண்டு விழாவைத் தொடங்கி வைக்கும் வகையில் ஆளுநரின் துணைவியார் திருமதி அக்கம்மா அலெக்சாண்டர் குத்துவிளக்கேற்றிவைத்தார்.

மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி அலெக்சாண்டர் நேரு புகைப்படக் கண்காட்சியைத் தொடங்கிவைத்து தலைமையுரையாற்றினார்.

நேருவின் நிகரற்ற திறமைகளைப் பாராட்டி - தமிழ் வளர்ச்சி உயர் நிலைக் குழுத்தலைவர் டாக்டர் ம.பொ.சிவஞானம், திரு டி.செங்கல்வராயன், முன்னாள் மத்திய அமைச்சர் ஓ.வி. அளகேசன், டாக்டர் எச்.வி. ஹண்டே, திரு.அ.க.அ. அப்துல்சமது, திரு செ.மு. தமிழரசன், திரு.கே.சங்கர் ஆகியோர் பேசினார்கள்.

விழா முடிவில் செய்தித்துறை இயக்குநர் திரு நா.கிருஷ்ணபாரதி நன்றி கூறினார். விழா முடிவில் மாணவ மாணவிகள் சேர்ந்திசை நிகழ்ச்சி நடைபெற்றது.

14.11.88 அன்று மாலை தேவநேயப்பாவாணர் நூலகத்தில் ஒரு வாரகாலக் குழந்தைகள் புத்தகக கண்காட்சி தொடங்கியது.

பொது நூலகத்துறை இயக்குநர் திரு சி.பழனிவேலு வரவேற்புரையோடு தொடங்கிய அக் கணகாட்சியைக் கல்வித்துறைச் செயலாளர் திரு எச்.பி.என்.ஷெட்டி தொடங்கி வைத்தார். திருக்குறள் நெறிபரப்பு மைய இயககுநர் திருக்குறள் வீ. முனுசாமி சிறப்புரையாற்றினார்.

பல்கலைக் கழக உள்விளையாட்டரங்கில் 15.11.88 அன்று மாணவ மாணவியர் அணிவகுப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. பல்லாயிரக கணக்கான சிறுவர் சிறுமியர் கலந்து கொண்ட அந்நிகழ்ச்சியை மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டரும், அவரது துணைவியாரும் பார்வையிட்டார்கள்.

16.11.88 அன்று மாலை கலைவாணர் அரங்கில் 'ஒப்பற்ற திறமைகளின் உருவகம் பண்டித ஜவஹர்லால்நேரு' என்ற தலைப்பில் கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது.

செய்தித்துறை இயக்குநர் திரு. நா.கிருஷ்ணபாரதி வரவேற்புரையாற்றினார். டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் லலிதா காமேஸ்வரன் தொடக்கவுரையாற்றினார்.

சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி (பொறுப்பு) திரு எஸ்.ரத்தினவேல்பாண்டியன் தலைமையில் நடைபெற்ற அவ்விழாவில் காந்திகிராமம் கிராமியப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் தேவேந்திரகுமார் குப்தா, ஊரக வளர்ச்சித்துறை ஆணையர் திரு தி. சுந்தரம், டாக்டர் எஸ். விஜயலட்சுமி, பத்திரிகையாளர் சங்கத்தலைவர் டாக்டர் டி.ஆஞ்சநேயலு ஆகியோர் உரையாற்றினார்கள்.

விழா முடிவில், செய்தித்துறை இணை இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் நன்றி கூறினார்.

17.11.88 நடைபெற்ற கருத்தரங்கில் பேராசிரியர் பி.சிவலிங்கம், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஆ. ஞானம், கோவை அவிநாசிலிங்கம் மனையியல் பல்கலை கழகத் துணைவேந்தர் டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ், கல்லூரிக் கல்வித்துறை இயக்குநர் டாக்டர் சுப்பிரமணியம், பேராசிரியர் டாக்டர் ஹம்சப் பிரியா ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

18.11.88 அன்று கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நேருபிறந்த நாள் விழாவின் கடைசி நாள் நிகழ்ச்சி மகளிர் நாளாகக் நடைபெற்றது.

சமூக நலத்துறை இயக்குநர் திருமதி ஷீலாராணி சுங்கத்துறை வரவேற்புரையுடன் தொடங்கிய இவ்விழாவில் திருமதி மரகதம் சந்திரசேகர் தொடக்க உரையாற்றினார். திருமதி சரோஜினி வரதப்பன் தலைமைதாங்கினார்.

விழா முடிவில் சமூக நலத்துறை கூடுதல் இயக்குநர் திருமதி கிரிஜா வைத்தியநாதன் நனிறு கூறினார்.



## சென்னையில் நடந்த சீர்மிகு

# கூட்டுறவு வார விழா

ஆண்டுதோறும் கூட்டுறவு வார விழா அகில இந்திய அளவில் நவம்பர் 14 முதல் 20-ஆம் தேதி வரை கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டு 35-வது அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா சென்னை மாநகரில், சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

நவம்பர் 14ந் தேதி நேரு மற்றும் கூட்டுறவு ஜனநாயக நாளாக, தியாகராய நகர் வாணி மகாலில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு என்.பி. குப்தா தலைமை தாங்கினார். தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு எம். எம். ராஜேந்திரன் இ.ஆ.ப. கூட்டுறவு வார விழா நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில்,

''கூட்டுறவு வார விழாவின் போது பல நல்ல அறிவிப்புகள் கூட்டுறவுத் துறைக்குக் கிடைக்கலாம். கூட்டுறவுத்துறை அலுவலர்கள் அவற்றை முழுமையாக ஏற்றுக் கொண்டு நல்லமுறையில் ஊக்கத்துடன் செயலாற்ற வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் டாக்டர் சிலம்பொலி செல்லப்பனார் சிறப்புரையாற்றினார்.

விழாவில் 35வது ஆண்டு நிகழ்ச்சியைக் குறிக்கும் வகையில், எம்.சி.சி. வங்கி வழங்கிய இலவச நோட்டுப் புத்தகங்களை 35 ஏழைப் பள்ளிக் குழந்தைகளுக்குத் தலைமைச் செயலாளர் அவர்கள் வழங்கினார். மேலும் சிறு தொழில் கடனும் வழங்கப்பட்டது.

முன்னதாக எம்.சி.சி. வங்கித் தனி அலுவலர் திரு ஆர். வேலு அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

முடிவில் ரிசர்வ் வங்கிப் பணியாளர் கூட்டுறவு வங்கித் தலைவர் திரு அமல்ராஜ் நன்றி கூறினார்.

15.11.88 அன்று, விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி நாளாக, அயனாவரம் ஐ.சி.எப். அம்பேத்கார் கலையரங்கத்தில் நடந்தது. வீட்டு வசதிப் பதிவாளர் திரு. எஸ்.டி. வைத்தியலிங்கம் தலைமை தாங்கினார். செய்தி மற்றும் சுற்றுலாத் துறைச் சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் திரு செ. ராம்தாஸ், இ.ஆ.ப., கலந்து கொண்டு வங்கி வழங்கிய சிறுதொழில் கடன்களை வழங்கிப் பேசுகையில்:

''கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்படும் கடன் தொகைகளைக் கொண்டு கூட்டுறவு அங்காடிகளில் மட்டுமே பொருட்களை வாங்க வேண்டும். கூட்டுறவின் சேவை, அனைவருக்கும் விரிவாக்கப்பட வேண்டும்'' என்றார்.

முன்னதாக, திரு. எம். அமல்ராஜ் வரவேற்றுப் பேசினார். பாரத ஸ்டேட் வங்கிப் பணியாளர் சங்கத்

**ஆர். விஸ்வநாதன்,**
**உதவி மேலாளர்,**
**எம்.சி.சி. வங்கி.**



தலைவர் திரு. டி. இ. பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

16.11.88 அன்று, மாற்றி அமைக்கப்பட்ட 20 அம்சத்திட்ட நாளாக ராயபுரம் நாடார் உறவின் முறை மாளிகையில் கொண்டாடப்பட்டது. தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் அவ்வை நடராசன் தலைமை தாங்கினார். நாடாளுமன்ற உறுப்பினர் திரு. என்.வி.என். சோமு சிறப்புரையாற்றினார்.

விழாவில் சிறுதொழில் கடனும், 35 ஏழைப் பள்ளிக் குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகமும் வழங்கப்பட்டன. முன்னதாக, இணைப்பதிவாளர் திரு. தி. ந. கமலக்கண்ணன் வரவேற்றுப் பேசினார். அரசுத் தொலை தொடர்புப் பணியாளர் சங்கத் தலைவர் திரு ஏ.கே. வீரராகவன் நன்றி கூறினார்.

17.11.88 அன்று, தொழில் மற்றும் கைத்தறிக் கூட்டுறவு நாள் புரசைவாக்கம் மீனாட்சிக் கல்யாண மண்டபத்தில் நடந்தது. சர்க்கரைத் துறை இயக்குநர் திரு ச. மெய்கண்ட தேவன் இ.ஆ.ப. பேசுகையில்:

''கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி சர்க்கரை ஆலைகள் மின்சார உற்பத்தி தயாரிக்கத் திட்டமிடப்பட்டு சேத்தியாத்தோப்பு, செய்யாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் ஆயத்த வேலைகள் துவங்கிவிட்டன. இது அடுத்த ஆண்டு செயல்படத் தொடங்கும்'' என்றார். தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துகள் உற்பத்தியாளர் இணைய நிர்வாக இயக்குநர் திரு ஆர். பாலகிருஷ்ணன் பேசும் போது,

எம்.சி.சி. வங்கியின் லாபம் 83-84இல் ரூ.112 லட்சமாக இருந்தது இப்போது 270 லட்சமாக உயர்ந்துள்ளதைப் பெரிதும் பாராட்டினார்.

முன்னதாக, டி.யு.சி.எஸ். தனி அலுவலர் திரு ஆர்.எஸ். நடராஜன் வரவேற்றுப் பேசினார். பி&சி மில்ஸ் பணியாளர் சங்கத் தலைவர் திரு பி. கிருஷ்ணன் நன்றி கூறினார்.

18.11.88 அன்று அமைதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு நாளாக அசோக்நகர் இராணி அண்ணா கல்யாண மண்டபத்தில் நடந்தது. தமிழ்நாடு கிராமக் கைத்தொழில் வாரியத் தலைமை நிர்வாக அலுவலர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன் இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர் (நுகர்வோர்) திரு ஷஷிஷேகர், இ.ஆ.ப. ஆகியோர் பேசினார்கள்.

அசோக்நகர் பள்ளி ஒன்றுக்கு இரண்டு கரும்பலகைகள் வாங்க காசோலை வழங்கப்பட்டது. சிறுதொழில் கடனும் விழாவில் அளிக்கப்பட்டது.

முன்னதாக, கூட்டுறவுக் கவியரங்கம் நடந்தது. இதில் கவிஞர் ஈரோடு தமிழன்பன், கவிஞர் இளந்தேவன், திருமதி நிர்மலா சுரேஷ், கவிஞர் நா.சீ. வரதராஜன், கவிஞர் நாலூர் பாஸ்கரன், திருமதி அரசு மணிமேகலை ஆகியோர் கவிதை பாடினார்கள்.

முன்னதாக, 'சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பங்காடித் தனி அலுவலர் திரு ஆர். தங்கவேலு வரவேற்றுப் பேசினார்.

19.11.88 அன்று, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் நடத்திய மாநில விழா, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடந்தது.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு என்.பி. குப்தா இ.ஆ.ப. அனைவரையும் வரவேற்றார். கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு ஆர். சண்முக சிகாமணி இ.ஆ.ப. தலைமை வகித்தார்.

ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி. இராமகிருஷ்ணா அவர்கள் பாராட்டுக் கேடயங்கள், கடன்கள் வழங்கிச் சிறப்புரையாற்றுகையில்:

''கூட்டுறவு இயக்கம் உண்மையான மக்கள் இயக்கமாக வளர வேண்டும். 1930 முதல் 70 வரை தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் மிடுக்கு நடை போட்டது. அந்த நிலை மீண்டும் உருவாக வேண்டும். கடந்த ஆண்டு கூட்டுறவு அமைப்புகள் மூலம் விவசாயிகளுக்கு ரூ.750 கோடி கடன் வழங்கப்பட்டிருக்கிறது'' என்றார்.

திருக்குறள் நெறி பரப்பு மையத் தலைவர் திரு திருக்குறளார் முனிசாமி, உழைக்கும் மகளிர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திருமதி ஜெயா அருணாசலம் ஆகியோர் பேசினர்.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத் தனி அலுவலர் திரு ஏ.கே. சீனிவாஸ் நன்றி கூறினார்.

20.11.88 அன்று, கூட்டுறவு விற்பனை மற்றும் பொது விநியோக நாளாக, சென்னை ஆர்.ஆர். சபாவில் கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு விற்பனை இணையத் தனி அலுவலர் திரு எம். இராசராம் பாண்டியன் வரவேற்றுப் பேசினார்.

திரு அமல்ராஜ் தலைமை வகித்தார்.

வேளாண்மைத் துறை இயக்குநர் திரு வி. விஸ்வநாதன், இ.ஆ.ப. பேசுகையில், ''கூட்டுறவுத் துறையில் தமிழகம் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. கூட்டுறவு, கிராமப்புறங்களில் வாழ்வோருக்கு உற்ற நண்பனாக விளங்கிவருகிறது'' என்றார்.

விழாவில், திருமதி சரஸ்வதி சீனிவாசன், திரு எஸ். பாலசுப்பிரமணியம் ஆகியோர் பேசினர்.

இந்தக் கூட்டுறவு வார விழாவை எம்.சி.சி. வங்கி பொறுப்பேற்று, மிகச் சிறப்பாக நடத்தியது. ஒவ்வொரு நாளும் கலை நிகழ்ச்சிகள் நடந்தன.



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
100 சதவிகிதம் அசல் பட்டு
மற்றும் தங்க சரிகைகளைக்
கொண்டு நெசவு செய்யப்பட்ட
புதுமையான
பட்டுச்சேலைகளை
கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.
இந்தியாவின் மிகப்பெரிய
கைத்தறி கூட்டுறவு விற்பனை
நிறுவனம் கோ-ஆப்டெக்ஸ்.
அதற்குச் சொந்தமான
560 விற்பனைக்கூடங்கள்
மூலமாக கோடிக்கணக்கான
வாடிக்கையாளர்களின்
தேவைகளை பூர்த்தி செய்கிறது
DIPR: Efficient



# தமிழரசு



16-12-1988 ரூ. 1



புதுடெல்லியில்
நடைபெற்ற சர்வதேச
இந்திய வர்த்தகப்
பொருட்காட்சியில்
அமைக்கப்பட்ட
தமிழ்நாட்டு அரங்கத்தை
மேதகு ஆளுநர் டாக்டர்
பி.சி. அலெக்ஸாண்டர்
அவர்கள் 25.11.88 அன்று
பார்வையிட்டார்.



சியர்ஸ் எல்காட் நிறுவனத்
தின் முதல் இலாபப்
பங்குத் தொகையை,
நிர்வாக இயக்குநர்
திரு.ஏ.கே.பட்டாச்சாரியா,
மேதகு ஆளுநரின் ஆலோசகர்
திரு ஜி.வி. இராமகிருஷ்ணா
அவர்களிடம் 1.12.88 அன்று
வழங்கினார்



சென்னை நகரின் கூவம்,
பக்கிங்காம் கால்வாய்,
அடையாறு ஆறு ஆகிய
வற்றைத் தூய்மைப்
படுத்தும் திட்டத்தின்
தொடர்பாக இங்கிலாந்தி
லிருந்து வந்துள்ள
நிபுணர்குழுவினர் 1.12.88
அன்று தலைமைச்
செயலகத்தில் மேதகு
ஆளுநர் அவர்களின்
ஆலோசகர்
திரு ஆ. பத்மநாபன்
அவர்களைச் சந்தித்தனர்.



1985-87 ஆம் ஆண்டிற்
கான பாதுகாப்பு மற்றும்
உற்பத்தித் திறன் விருதுகளை
29-11-88 அன்று சென்னை
யில் நடைபெற்ற விழாவில்
தலைமைச் செயலாளர்
திரு எம்.எம். இராஜேந்திரன் இ.ஆ.ப.
அவர்கள் வழங்கினார்.




# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2019

• விபவ - மார்கழி 1

16-12-1988

மலர் : 19

இதழ் : 12


## கொடி நாள்



தாய்நாடு காக்கும் பணியில் வீர மரணம் அடைந்த படை வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நாள் கொடி நாள்.

வீர மரணம் அடைந்த படை வீரர்களின் குடும்பத்தினர்க்கும், முன்னாள் படைவீரர்களுக்கும் உதவும் பணிகளுக்காக ஆண்டு தோறும் டிசம்பர் 7-ஆம் நாளில் நிதிவசூல் நடைபெறும்.

மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள், 7-12-1988 அன்று ஆளுநர் மாளிகையில் கொடி நாள் நிதி வசூலைத்தொடங்கி வைத்தார். சென்னைக் கலைவாணர் அரங்கிலும் கொடி நாள் விழா கொண்டாடப் பட்டது.



# பிரதமரிடம் மக்கள் அளித்த முறையீடுகள் - கோரிக்கைகளுக்கு உடனடியாகத் தீர்வு

**குடியிருப்பு வீடுகள் புதுப்பிக்கப்படுகின்றன.**

**குடிநீர், மருந்தகம், கால்நடை மருத்துவமனை ஆகிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.**

**வேலை வாய்ப்பு, வீட்டு வசதி, சாலைப் போக்குவரத்து, விவசாயம், மின்வசதி ஆகியவை குறித்து விரைவான நடவடிக்கைகள்.**

**கல்வி உதவித் தொகை, நிலப்பட்டா, முதியோர் உதவித் தொகைகள் உடனுக்குடன் வழங்கப்படுகின்றன.**

**ஏழை, எளியோருக்கு உடனடியாகச் சிகிச்சைக்கு ஏற்பாடுகள் !**

**பேருந்து நிலையம், சிறப்பங்காடி, குழந்தைகள் பூங்கா போன்ற பலப்பல உதவிகள்.**

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு.ராஜீவ் காந்தி அவர்கள் இவ்வாண்டு 1988 ஏப்ரல் 22ஆம் நாள், ஜுன் 18 ஆம் நாள், ஆகஸ்ட் 4ஆம் நாள், அக்டோபர் 2 ஆம் நாள், அக்டோபர் 24ஆம் நாள் மற்றும் நவம்பர் 10ஆம் நாள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தபோது, மாவட்டந்தோறும், ஊர் ஊராகச் சென்று பொதுமக்களை நேரில் சந்தித்து, அவர்கள் குறைகளைக் கேட்டறிந்தார்.

சில சமயங்களில் ஏழை எளிய மக்களின் குடிசைகளுக்கும் தானே சென்று அங்குள்ளவர்களின் குறைகளை விசாரித்தார். அப்போது பொதுமக்கள் வாய்மொழியாகக் கூறிய கோரிக்கைகள் மீதும், மனுக்களாகப் பெறப்பட்டவை மீதும் உடன் நடவடிக்கை எடுக்குமாறும் ஆணையிட்டார்.

பிரதமரின் அனைத்து வருகைகளின்போதும் இவ்வாறு மனுக்களாகப் பெறப்பட்டவை மொத்தம் 2052 கோரிக்கைகள் ஆகும். இதில் இதுவரை 266 கோரிக்கைகள் உடன் அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளன. உதாரணமாக, தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டம், கக்கன் காலனி ஆதிதிராவிடர் மக்கள் தமது குடியிருப்பு வீடுகளைப் புதுப்பித்துத்தர, கோரியதையடுத்து, 1989-90இல் இதனைச் செய்து தர மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டம், சிக்கல் ஊராட்சிக்குக் குடிநீர் வசதி, மருந்தகம், கால்நடை மருத்துவமனை ஆகிய வசதிகள் உடன் செய்து தரப்பட்டன. மற்றும் பவானி விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, மேட்டூர் கால்வாய் திறந்து விடப்பட்டது. எஞ்சிய கோரிக்கைகள் அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளன.

பொதுமக்கள் நேரில் வாய்மொழியாகப் பிரதமர் அவர்களிடம் கூறிய குறைகள் மீது, சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு பெறப்பட்டவை 112 கோரிக்கைகள். இதில் 65 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. எஞ்சியவை மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுவாக, இக்கோரிக்கைகளில் வேலைவாய்ப்பு, வீட்டு வசதி, சாலைப் போக்குவரத்து மற்றும் மின்வசதி, நீர்ப்பாசன வசதி, விவசாயம் குறித்த குறைகள் நீங்க உதவி, நிலப்பட்டா, ஊரக வளர்ச்சிக்கான உதவி, முதியோர் உதவித் தொகை, மருத்துவ வசதி, பிரதமர் நிவாரண நிதியிலிருந்து உதவி, வரிப் பிரச்சினைகள் தீரவும், இன்னும் அவரவர் தனிப்பட்ட குறைகள் தீரவும் உதவி வேண்டி, பிரதமர் அவர்களிடம் பொதுமக்கள் வேண்டியிருந்தனர். அவரவர் தகுதி, பொருளாதார நிலை போன்றவற்றை ஆராய்ந்து குறைகள் தீர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழக மக்களை நேரில் சந்தித்து அவர்கள் வாழ்க்கைத் தரம், குறைகள் பற்றி அறிந்து கொள்வதற்காகப் பிரதமர் தாமே கிராமங்களுக்கும், அங்குள்ள ஏழை மக்களின் குடிசைகளுக்கும் சென்று அங்குள்ளவர்களின் குறைகளை விசாரித்தார்.

இவ்வாறு பிரதமர் அவர்கள் விசாரித்தறிந்த குறைகள் தீர எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரம் வருமாறு●

* திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவிலைச் சேர்ந்த மைதீன் என்பவரின் மகனின் பக்கவாத நோய்க்கு மருத்துவச் செலவிற்காகவும், திருநெல்வேலிஅச்சம்புதூர் கிராமம் திரு பக்கீர் மேத்தாவின் குழந்தைக்குச் செயற்கை உறுப்பு பொருத்துவதற்காகவும், பிரதமரின் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.15,000 அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

* பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்ட திருப்பத்தூர் நாட்றம் பள்ளியைச் சேர்ந்த 13 வயதுச் சிறுவன் மாஸ்டர் கோதண்டனுக்கு வரும் மாதம், மூன்று சக்கர சைக்கிள் ஒன்று வழங்கப்படும்.



திரு பக்கீர் மொய்தீன் அவர்கள் தனது 4 வயது மகன் சுலைமானுக்குச் செயற்கைக் கால்கள் பொருத்த மருத்துவ உதவி கோரினார் அவருக்கு ரூ.10,000 பிரதமர் நிதியிலிருந்து வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது

---

* பிரதமரிடம் முறையிட்ட மதுராந்தகம் ராமாபுரம் கிராமத்தைச் சார்ந்த காதிர் பாஷா எனும் உடல் ஊனமுற்றவருக்கு, மாவட்ட சமூகநல அலுவலர் மூலம் மூன்று சக்கரச் சைச்கிள் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

* மதுரை மாவட்டம் திருமங்கலத்தைச் சேர்ந்த பாண்டி என்னும் உடல் ஊனமுற்றவருக்கு மூன்று சக்கரச் சைக்கிள் மற்றும் இலவச பஸ் பாஸ் ஆகியன வழங்கப்பட்டுள்ளன.

* திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், செல்வராஜபுரம் கிராமத்தைச் சேர்ந்த ராமலட்சுமி என்னும் உடல் ஊனமுற்ற பெண்ணுக்கு மூன்று சக்கரச் சைக்கிள் வழங்கப்பட்டுள்ளது.

* சேலத்தைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவரின் பார்வையற்ற குழந்தைக்கு, கண்ணில் அறுவைச் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

* சேலம் மாவட்டம் பேளூரைச் சேர்ந்த சண்முகம் என்பவர் தான் செய்து கொண்ட புற்று நோய் அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு தனக்கு மருத்துவ உதவி அளிக்க வேண்டும் என்று பிரதமரிடம் கோரியதையடுத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

* பக்கவாத நோயால் தாக்கப்பட்டு இருந்த சேலம் மாவட்டம் திருச்செங்கோட்டைச் சேர்ந்த திரு. தங்கம் என்பவரின் குழந்தைக்கும், அதே ஊரைச்சேர்ந்த திருமதி பாவை என்னும் பெண்ணுக்கும் அரசு மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை மூலம் மருத்துவ உதவி அளிக்கபட்டது.

* சேலத்தைச் சேர்ந்த திருபெரியசாமி என்பவர் தனக்கு மருத்துவ உதவி அளிக்க வேண்டும் என்று பிரதமரிடம் வேண்டிய தன் பேரில் அவருக்குத் தேவையான சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

* சேலத்தைச் சேர்ந்த திருமதி, கன்னிமங்கா என்னும் வயதான பெண்மணிக்கு முதியோர் உதவித் தொகை வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

* திருச்சி மாவட்டம் சமயபுரத்தைச் சேர்ந்த திருமதி, ரஹமத் பீவி எனும் மூதாட்டிக்கும் முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

* பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தைச் சார்ந்த கண் பார்வையற்ற திருமதி ராமாயி என்னும் வயதான பெண்மணிக்கு முதியோர் உதவித் தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

* அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. சினியம்மாவுக்கு, அவர் பிரதமரிடம் நேரில் கோரியபடி வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. உள்ளூர் வங்கி மூலம் அவருக்குக் கடனுதவி வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

* பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தைச் சேர்ந்த வம்ரம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திருமதி. பி. ஜானகி என்பவர் பிரதமரிடம் கோரிக்கை விடுத்ததையடுத்து, அவருக்குப்புஞ்சை நிலம் 0.52 எக்டேர் நிலத்திற்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

* சேலம் மாவட்டம், மேட்டுப்பாளையத்தைச் சேர்ந்த திரு எம். சதாசிவம் எனும் மாணவர் இ.ஆ.ப., தேர்வுக்குப் பயிற்சி பெற, ஆதிதிராவிடர் நலத்துறை உறுதியளித்துள்ளது.

மதுரையைச் சேர்ந்த சங்கிலிக் கருப்பன் என்பவரின் குழந்தையின் கல்விச் செலவிற்காக, பிரதமர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 2,000 வழங்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டையைச் சேர்ந்த சிறுமி, கிறிஸ்டி ரோஸலின் பிரதமரிடம் நேரில் வேண்டிக் கொண்டதை அடுத்து, பிரதமர் அவர்களின் ஆணையின் பேரில், தமிழக அரசு, அச்சிறுமியின் தாய் திருமதி சாந்தாவை கருணை அடிப்படையில் காவல் துறையில் இளநிலை உதவியாளர் பணியில் அமர்த்தியுள்ளது. திருமதி சாந்தாவின் மற்றொரு குழந்தை மற்றும் சிறுமி ரோஸலின் ஆகியோரது கல்விக்கும் உதவி அளிக்க பரிசிலிக்கப்பட்டு வருகிறது.

சேலத்தைச் சேர்ந்த துரைசாமி என்பவருக்குச் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மானியத்துடன் கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டம், பகலஹள்ளி கிராமத்தைச் சேர்ந்த சக்கன் என்பவருக்கு ஒருங்கிணைந்த ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 7,000 கடனுதவி வழங்கப்பட்டது.

சிதம்பரத்தை அடுத்து மஞ்சக்குளி கிராமத்துப் பொதுமக்கள் பிரதமரிடம் வேண்டிக்கொண்டதற்கிணங்கி, அக்கிராமத்தில் காமராஜா வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், வரும் ஆண்டு வீடுகள் கட்டித் தரப்படும்.

திருச்சியை அடுத்த அசூர் கிராமத்தில் உள்ள நரிக்குறவர் குடியிருப்பின் அனைத்து 146 குடும்பத்திருக்கும் குடும்ப அட்டை உடன் வழங்கப்பட்டது.



திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தைச் சேர்ந்த திரு ஆறுமுகம் உடல் ஊனமுற்றவர் – பல சரக்குக் கடை வைக்க ரூ. 5000/- நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

* திருச்சியை அடுத்த காரைவெட்டி கிராமத்திற்கு வேண்டிய வசதிகள், கோரி பிரதமரிடம் முறையிட்டதால், அவ்வூருக்குப் புதிதாகப் பேருந்து வசதி, நீர்ப்பாசன வசதி, வீட்டு வசதி ஆகியன செய்து தரப்பட்டன.

* காமராஜர் மாவட்டம் கீழ அழகியநல்லூர் கிராமத்தின் ஏழை மக்களுக்கு 'தாட்கோ' நிறுவனத்தின் மூலம் 12 வீடுகள் கட்டித் தர அனுமதிக்கப்பட்டுள்ளது.

* சென்னையை அடுத்த மறைமலை நகரில் பொதுமக்கள் பிரதமரிடம் நேரில் விடுத்த கோரிக்கையை ஏற்று, மறைமலை நகரில் பேருந்து நிலையம், சிறப்பங்காடி, குழந்தைகள் பூங்கா ஆகியவை அமைக்க நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

* காஞ்சிபுரம் ரயில்வே நிலையத்திலிருந்து திருமதி, விஜயலட்சுமி பிரதமரிடம் தன் சொந்த ஊரான கோயம்புத்தூர் செல்ல பண உதவி கேட்டதால், பிரதமர் அவர்கள் தாமே ரூ. 100 அப்பெண்ணிடம் கொடுத்ததையடுத்து அவர் சொந்த ஊருக்குச் சென்றார்.

பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டதல்லாமல், எஞ்சியவை அனைத்தின் மீதும் அரசால் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசால் அளிக்கப்படும் சலுகைகள், உதவிகளைப் பற்றிச் சரிவரத் தெரியாமல் அவற்றைப் பெறவும் வாய்ப்பில்லாமல் கிராமங்களிலுள்ள ஏழை மக்களுக்கும் பாரதப் பிரதமரின் தமிழக வருகை நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளது.

## முகப்பு அட்டையில்...

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்களின் தமிழகச் சுற்றுப்பயணத்தின்போது அவரிடம் அளிக்கப்பட்ட முறையீடுகள்-கோரிக்கைகள்மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வகையில் செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தாலுகா ராமாபுரம் கிராமத்தைச் சேர்ந்த உடல் ஊனமுற்ற சிறுவனுக்கு, செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சமீர் வியாஸ், மூன்று சக்கர வண்டி வழங்குவதை முகப்பு அட்டை சித்திரிக்கிறது.



# பண்டித ஜவஹர்லால் நேரு - சில நினைவுகள்

ஏ. வி. அளகேசன்

பூர்ண சுதந்திரத் தீர்மானம் நிறைவேற்றிய 1929-ஆம் ஆண்டு லாகூர் காங்கிரசுக்குத் தலைமை வகித்தவர் நேரு. இது முதல் தடவை - மீண்டும் இரண்டாம் முறையாக 1936-ஆம் ஆண்டு காங்கிரசின் தலைவர் ஆனார். காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் நாட்டின் எல்லா மாகாணங்களிலும்-இப்போது பிரதேசம், ராஜ்யம், மாநிலம் என்கிறோம்-சுற்றுப் பயணம் மேற்கொண்டார். இரவு பகல் பார்க்கமாட்டார். வேளை நேரம் கிடையாது. பொதுக் கூட்டங்களில் 'மைக்' இல்லாமல் பேசுவார். காங்கிரஸ் கொள்கைகளை விளக்குவார். ஆவேசமாகப் பேசுவார். பாரத மாதா ஏழ்மைக் கோலத்தில் - வேலையில்லாத் திண்டாட்டத்தில் துன்புறுவதை நம் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்துவார். அவருடைய கூட்டங்களுக்கு மாணவர்களும் இளைஞர்களும் திரண்டு வருவார்கள். அதற்குமுன் இவ்வாறு அரசியல் சுற்றுப்பயணம் மேற்கொண்டவர்கள் இல்லை. அதற்கு 'சூறாவளி' என்னும் அடைமொழி முற்றிலும் தகும்.

1936-ல் தமிழ்நாட்டுக்கும் வந்தார். அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தவர் சத்தியமூர்த்தி அவர்கள். சென்னை கடற்கரையில் திலகர் கட்டத்தில் பிரமாண்டமான பொதுக் கூட்டம் நடைபெற்றது. நேரு இரண்டு மணி நேரத்துக்கு மேலாக ஆங்கிலத்தில் 'கடல்மடை திறந்தாற்போல்' பேசினார். கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய சத்தியமூர்த்தி தமது முடிவுரையில் நேருவின் அபாரமான பேச்சை வியந்து பாராட்டினார். அவர் ஆங்கிலத்தில் கூறிய வார்த்தைகள் வருமாறு: ''For over two hours, we have been treated to a feast of reason and flow of soul.'' அதைத் தமிழில் சொல்வதானால், 'இரண்டுமணி நேரத்துக்கு மேலாக நேரு தமது உள்ளத்தைக் குழைத்து ஓடவிட்டு நமது அறிவுக்குப் பெருவிருந்து படைத்தார்' என்று கூறலாம். கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் உள்ளூர உணர்ந்த ஒன்றை சத்தியமூர்த்தியின் வாக்கு பிரதிபலித்தது.

சென்னைப் பட்டணத்தில் நேருவுடன் சுற்றியதிலேயே சத்தியமூர்த்தி களைப்படைந்து விட்டார். அவருக்கு உடல்நிலையும் சரியில்லை. அதற்குப் பிறகு நேரு மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செல்லத் திட்டமிட்டிருந்தார். அவருடன் மாவட்டங்களில் கிராமங்கள் தோறும் சிறிய பெரிய நகரங்கள் தோறும் சுற்றுவதற்குத் தமது உடல்நிலை இடம்தராது என்று கண்ட சத்தியமூர்த்தி, அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் உபதலைவராக இருந்த பக்தவத்சலம் அவர்களைப் பார்த்து ''பக்தவத்சலம், இவரோடு ஊர் ஊராகச் சுற்றுவதற்கு என் உடம்பில் சக்தி இல்லை. நீங்கள்தான் கூட போக வேண்டும்'' என்று பரிதாபமாகச் சொன்னார். பிறகு எல்லா மாவட்டங்களிலும் பக்தவத்சலம்தான் நேருவுடன் சென்றார்.

தற்போது உள்ளது போல, அந்தக் காலத்தில் தார்ரோடுகள் கிடையாது. முக்கிய நெடுஞ்சாலைகள் கூட கருங்கல் ஜல்லி, 'கிராவல்' மண் இவற்றால் ஆனவைதான். சின்ன ரோடுகளில் பல கருங்கல் ஜல்லி இல்லாமல், வெறும் 'கிராவல்' மண் கொட்டி கெட்டிப்படுத்தப் பட்டவை. எங்களுடைய செங்கல்பட்டு மாவட்டம், திருவள்ளூர் பக்கங்களில் இது மிகவும் சிவப்பாயிருக்கும். அந்த ரோடுகளில் கார் போனால், காரை மறைக்கும்படியாக ஒரு பெரிய புழுதிப் படலம் எழும்பும். நாம் போகிற காருக்கு முனனால் ஒருகார் போனால், பின்னால் போகிற காரில் உள்ள நம்மீது புழுதி ஒரு அங்குலம் படிந்துவிடும். முகம், காது, மூக்கு எல்லாம் புழுதியாயிருக்கும். அப்படி சட்டை, உடம்பு எல்லாம் புழுதி. அதுவும் செம்மண் புழுதி படிந்த கோலத்தில், நேரு திருவள்ளூர்ப் பக்கம் சுற்றிவிட்டு காஞ்சிபுரம் வந்தார்.

பெரிய வரவேற்பு, உற்சாகம்கரைபுரண்டோடும் மக்கள் கூட்டம்,



# தந்தை பெரியார் பொன்மொழிகள்

★ அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் தேவைக்கும் பொருத்தமில்லாத காரியங்கள் பழக்கத்தின் பேராலோ, வழக்கத்தின் பேராலோ, தெய்வத்தின் பேராலோ, மதத்தின் பேராலோ, சாதி வகுப்பின் பேராலோ, மற்றெதன் பேராலோ நடத்தப்படக் கூடாது.

★ மனித தர்மத்தை அடிப்படையாக வைத்து, மனித சமுதாயத்திற்கு யாராவது தொண்டாற்ற வேண்டுமானால், முதலில் செய்ய வேண்டியது, பகுத்தறிவுப்படி மக்களை நடக்கச் செய்வதும் சிந்திக்கச் செய்வதுமேயாகும்.

★ இலக்கியம் என்பது நாகரிகத்தைப் புகட்ட வேண்டும். மக்களிடம் உயரிய குணங்களைப் புகுத்துவதாக இருக்க வேண்டும்.

★ குறளை ஊன்றிப் படிப்பவர்கள் எல்லோரும் நிச்சயம் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள். அரசியல் ஞானம், சமூக ஞானம், பொருளாதார ஞானம் ஆகிய எல்லாம் அதில் அடங்கியுள்ளன.

★ மக்களுக்குள்ள சமுதாயக் கொடுமை தீர வேண்டியது எவ்வளவு அவசியமோ, அது போலவே, மக்களுக்குள்ள பொருளாதாரக் கொடுமையும் தீர வேண்டியது அவசியமாகும்.

★ மனிதனுடைய ஒழுக்கம், நாணயம், நேர்மை முதலானவை அவற்றை உடைய மனிதனுக்குப் பெருமை அளிப்பது மாத்திரமல்லாமல், அவனைச் சுற்றியுள்ள எல்லா மக்களுக்கும் நன்மையும் அளிக்கும்.

★ பிறருக்கு ஒழுக்கத்தைப் பற்றிச் சொல்லுவதை விடத் தன்னிடத்து அது எவ்வளவு இருக்கிறது என்று ஒவ்வொருவரும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

மாலை மரியாதை. செங்கல்பட்டு ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசி என்ற முறையில் நான் ஒரு வரவேற்பு மடல் வாசித்துக் கொடுத்தேன். அதை அவர் வெகுவாகப் பாராட்டி மகிழ்ந்தார். பிறகு சொற்பொழிவு. காஞ்சிபுரம் செங்கல்பட்டு ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் டாக்டர் சீனிவாசன் வீட்டில் பகல் உணவுக்கு ஏற்பாடு செய்திருந்தோம். குளிக்க நேரமில்லை. அடுத்த ஊர் போக வேண்டும். ஆகவே, கைகால் முகம் மட்டும் அலம்பிக்கொண்டு எங்களுடன் உட்கார்ந்து உணவுகொண்டார். ஆம், தரையில் மனைமீது உட்கார்ந்து, வாழை இலையில், நமது தென் இந்திய உணவு-பிரியமாக உண்டார். கச்சமாகக்கட்டிய வேஷ்டி, ஜிப்பா, காலர் இல்லாத சட்டை, காந்தி குல்லாய், இந்த உடையில் இரண்டு காலையும் மடக்கிக் கொண்டு, மனையில் உட்கார்ந்து சாப்பிடுவது அவருக்கு சிரமமாயில்லை. உணவுக்குப் பின் போட்டோ, ஓய்வு? என்று கேட்கிறீர்களா! அது அவர் அகராதியில் இல்லை! உடனே அடுத்த ஊருக்குப் புறப்பாடு.

1947-ல் நாடு சுதந்திரம் பெற்று பிரதமர் ஆன பிறகு, பண்டிட்ஜி பலமுறை தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் செய்திருக்கிறார். அப்போதெல்லாம் பொதுக் கூட்டங்களில் ஆங்கிலத்தில் அவர் ஆற்றும் உரைகளை அநேகமாக நான்தான் மொழிபெயர்ப்பது வழக்கம். நான் அவருடைய 'official translator' என்றால் மிகையாகாது. சென்னை நகர் கடற்கரையில் நடைபெறும் மாபெரும் கூட்டங்களில் மட்டும் அவருடைய பேச்சை மொழி பெயர்த்துச் சொல்லும் வழக்கம் கிடையாது. பலருக்கு ஆங்கிலம் தெரியும் என்ற காரணத்தாலும், மொழி பெயர்த்தால் அதிகநேரம் ஆகிவிடும் என்ற காரணத்தாலும் மொழிபெயர்ப்பது இல்லை. மற்றபடி, மாவட்டத் தலைநகர்கள் முதலான இடங்களில் நடைபெறும் கூட்டங்களில் எல்லாம் மொழி பெயர்ப்பு உண்டு. மேடைகளில் பலமுறை என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே 'Is my official translator ready' என்று கேட்டு விட்டுப் பேச ஆரம்பிப்பார்.

தமிழ்நாட்டுக்கு வரும்போதெல்லாம் நேரு குதூகலத்துடன காணப்படுவார். தமிழ்நாட்டின் அமைதியான நிலை, மக்களின் ஒழுங்கான போக்கு இவையெல்லாம் அவருக்கு நிரம்பவும் பிடிக்கும். அதை வெளிப்படையாகவும் சொல்லுவார். தமிழ் மக்கள் வெளி ஆடம்பரம் இன்றி ஆக்கப்பணிகளில் ஈடுபட்டு முன்னேறி வருவதை நேரு பலமுறை பாராட்டியுள்ளார். ஒருமுறை டில்லியில் இந்தி ஆதரவாளர்கள் கூட்டத்தில் பேசும்போது 'நீங்கள் இந்தியைப் பற்றி வாயால் பேசுகிறீர்களே ஒழிய, காரியத்தில் என்ன செய்கிறீர்கள்? தமிழ்மொழியைப் பாருங்கள், அவர்கள் தமிழில் ஒரு அழகான கலைக்களஞ்சியத்தை உருவாக்கியுள்ளார்கள்' என்று இடித்துக் கூறினார்.

அவர் பொதுக்கூட்டங்களில் பேசும் முறை, ஒரு கருத்தை எடுத்துக் கொண்டால், அதை முழுவதும் சொன்ன பிறகே நிறுத்துவார். பிறகு அவர் பேசிய கிராமத்தில், விஷயங்களைத் தமிழில்மொழி பெயர்த்துச் சொல்ல வேண்டும். குறிப்பு ஏதும் இன்றி, விஷயத்தையும் ஒன்று விடாமல் சொல்வது சற்றுச் சிரமமான காரியம். வாக்கியம் வாக்கியமாக விட்டுவிட்டுப் பேசினால் மொழி பெயர்ப்பது சுலபம். அப்படி நேரு பேசுவதில்லை. ஆயினும், பழக்கம் காரணமாக நான் அந்த கஷ்டமான காரியத்தைப் பிழையின்றிச் செய்து வந்தேன். மக்களும் என்னுடைய மொழி பெயர்ப்பை விரும்பி ஏற்றுக்கொண்டார்கள்.

இவ்வாறு மொழிபெயர்க்கும் போது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை மட்டும் கூறி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன். ஒருமுறை கடலூரில் கூட்டம். முதலமைச்சர் காமராஜ், வேறு சில மாநில அமைச்சர்கள், அப்போது நேரு அமைச்சரவையில் நிதி அமைச்சராயிருந்த டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் ஆகியோர் மேடையில் வீற்றிருக்கிறார்கள். பண்டிட்ஜி பேசுகையில் 'our reach' என்ற ஆங்கிலப் பதத்தை உபயோகித்துப் பேசினார். அதை அப்படியே சொன்னால் சரியாக விளங்காது என்று கருதிய நான், ஒரு திருக்குறளைச் சொல்லி அதை விளக்கினேன்.

'நுனிக் கொம்பர் ஏறினார்
அஃதிறந்(து) ஊக்கின்
உயிர்க்கிறுதி ஆகிவிடும்.'

என்பது அந்தக் குறள். இதைச்சற்று விரிவாகச் சொல்லி நான் விளக்கிய போது அதைக் கேட்ட மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். அதை அறியாத நேரு அவர்கள், டி.டி. கிருஷ்ணமாச்சாரியை நோக்கி அதன் காரணத்தை வினவினார். அதற்கு டி. டி. கே. 'உங்களுடைய சிஷ்யன் உங்களைவிட ஒருபடி மேலே போய்விட்டான்' என்று கூறி விஷயத்தை விளக்கினார். பிறகு எல்லாரும் சிரித்தார்கள். நேருவுக்கும் சந்தோஷம் தாங்கவில்லை, வாய் விட்டுச் சிரித்தார்.

அந்தச் சிரிப்பு வாழ்க!




## தஞ்சை மாவட்டத்தில்

# ஆளுநர் தொடங்கி வைத்த வளர்ச்சிப் பணிகள்

**தஞ்சை மாவட்டம், காட்டுத் தோட்டத்தில் ரூபாய் 26 இலட்சம் செலவில் அமையவிருக்கும் விவசாய ஆராய்ச்சி மையத்திற்கான அடிக் கல்லை, மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் 22-11-88 அன்று நாட்டி, வேளாண்மைத் திட்டங்களைத் துவக்கி வைத்தார்.**

**தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ். மச்சேந்திர நாதன், இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்ற அடிக்கல் நாட்டு விழாவில் மேதகு ஆளுநர் அவர்கள் கூறியதாவது:**

**'தமிழகத்தில் ஆண்டுக்கு உற்பத்தி செய்யப்படும் 54 இலட்சம் டன் நெல்லில் தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் சுமார் 12.5 இலட்சம் டன் நெல் உற்பத்தி ஆகிறது. அடுத்த ஆண்டு 14.5 இலட்சம் டன் நெல் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. விவசாயிகள் குறைகளைக் கேட்டு உடனடியாக அப்பொழுதே முடிவெடுப்பதற்காக ஒரு விவசாய உயர் மட்டக் குழுவினை அரசு அமைத்து அந்தக் குழுவும் தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து பல்வேறு உடனடி நடவடிக்கைகளை எடுத்துள்ளதை நீங்கள் அறிவீர்கள்.**

**''இந்தக் குழு சிபாரிசு செய்துள்ள அனைத்துத்திட்டங்களையும்** அரசு உடனடியாக ஏற்றுக்கொண்டுள்ளது. காவிரி நீர்ப் பிரச்சினைப் பற்றி நான் நன்கறிவேன். காவிரி நீர்த் தாவாவில் என்ன முடிவு வருமோ என்று எதிர்பார்த்துக் காத்துக் கிடக்காமல், தற்போது உள்ள நிலைமைகளில் எந்த அளவிற்கு நாம் உற்பத்தியைப் பெருக்கிட முடியும் என்று திட்டமிட்டு நாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

> ❝ திட்டங்கள் நிறைவேற்றுவதில் பிற மாவட்டங்களுக்குத் தஞ்சாவூர் மாவட்டம் ஒரு சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது. இந்த ஆண்டு ஆதிதிராவிடர்களுக்கு ஒரு லட்சம் வீடுகளுக்கு மேல் அமைத்துக் கொடுக்கப்படும் ❞

ஆறு மாவட்டங்களில் விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளை அளிப்பதற்கான இரண்டு கட்ட சிறப்புத் திட்டங்கள் வரையறுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. முதல் கட்டம் சிறப்பாக முடிவடைந்து, இரண்டாவது கட்ட திட்டத்திற்கு ரூபாய் 4.87 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாய ஆராய்ச்சி விஞ்ஞானிகள் விவசாயிகளுக்குச் சரியான நேரத்தில் என்னென்ன செய்ய வேண்டும் என்று தெரிவித்து சிறந்த வகையில் உதவி வருகிறார்கள்.

''சிறப்பு அரிசி உற்பத்தித் திட்டத்திற்கு, தஞ்சாவூர் மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசனத்தை மேம்படுத்துதல், சீரிய கடன் வசதி, அதிக நவீன தொழில் நுட்பம் ஆகிய மூன்று நிலைகளில் **இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.**

**''தஞ்சாவூர் மாவட்டம் தனக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கினைக் குறித்த காலத்திற்கு முன்பே எட்டியுள்ளது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 1,210 ஆழ் குழாய்க்கிணறுகளில் இதுவரை 744 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒதுக்கடு செய்யப்பட்டுள்ள 3,290 வடிமுனைக் குழாய்க் கிணறுகளில் 1930 அமைககப்பட்டுள்ளன. அதே போன்று விவசாயக் கடன்களிலும் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 16 கோடியில், ரூபாய் 14.16 கோடி கடன் கொடுக்கப்பட்டு விட்டது. திட்டங்கள் நிறைவேற்றுவதில் பிற மாவட்டங்களுக்குத் தஞ்சாவூர் மாவட்டம், ஒரு சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது.**

**கோ. தி. மோகன்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**தஞ்சை மாவட்டம்**

### கலாச்சார ஒற்றுமை நாள்

**நாகப்பட்டினம், குமரன் திருமண மண்டபத்தில் 23-11-88 அன்று**

நடைபெற்ற கலாச்சார ஒற்றுமை நாள் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள், ''இந்திய மக்களிடையே ஒருமைப்பாட்டுணர்வு இருந்ததால் தான், இந்தியகலாச்சாரம் தொன்று தொட்டு அழியாமல் இருந்து வருகிறது'' என்று குறிப்பிட்டார்.

தஞ்சாவூர் மாவட்டம் சாலிய மங்கலத்தில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள குடிநீர்த் தொட்டியையும், 26 ஆதி திராவிடர் குடியிருப்புகளையும் (23-11-88) திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ் மச்சேந்திர நாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மேலும் அவர் 2100 நபர்களுக்கு ரூ. 1 கோடி மதிப்புள்ள நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

மேதகு ஆளுநர் பேசியதாவது:

''மகாத்மா காந்தி காலத்திற்கு முன்பு, நகரங்களில் மட்டுமே சாலை, கல்வி போன்ற முக்கியமான வளர்ச்சியேற்பட்டது. மகாத்மா காந்தி அடிகள்தான் முதன் முதலில் கிராமங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். அந்தக் கொள்கையினை கடந்த ஆண்டுகளாக அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

''கடந்த சில மாதங்களில் 597 ஆதிதிராவிடக் காலனிகளுக்கு மின் இணைப்பு கொடுத்துள்ளோம். இந்த நிதியாண்டு முடிவதற்குமுன் மேலும் 740 ஆதிதிராவிடக் காலனிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும். ஆதிதிராவிடர்கள் தற்போது இருப்பிடங்களை மிகவும் சுத்தமாக வைத்துக் கொள்வதை நானே நேரில் சென்று பார்த்திருக்கிறேன். அரசு நிர்வாகம் அடிக்கடி இப்பகுதியைப் பார்த்துக்கொள்ளும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. தேசிய ஒருமைப்பாடு விழாவில் இம்மாதிரி திட்டங்கள் துவக்கி வைப்பது மிகவும் பொருத்தமானதாகும்.''

## தாட்கோ வீடுகள்

தஞ்சாவூர் மாவட்டம், பிரதாபராமபுரத்தில் 2.5 இலட்சம் செலவில் 'தாட்கோ' மூலம் கட்டப்பட்டுள்ள 25 காமராசர் தீப்பிடிக்காத வீடுகளைத் திறந்து வைத்து உரையாற்றிய மேதகு தமிழக ஆளுநர் அவர்கள், சட்டக் கல்வி பயிலும் அனைத்து ஆதிதிராவிட மாணவர்களுக்கும் அரசு, படிக்கும்போதும், படித்த பின்பு பயிற்சி எடுக்கும் போதும் வட்டியின்றி உதவித் தொகை வழங்கும் என்று தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ். மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இத் திறப்பு விழாவில் மேதகு தமிழக ஆளுநர் தெரிவித்ததாவது:

''ஆதிதிராவிடர் நலனில், இந்த அரசு மிகவும் அக்கறை செலுத்தி வருகின்றது. இதுபோன்று திறக்கப்படுகின்ற ஆதி திராவிடர் குடியிருப்புக் காலனிகள் தமிழகத்தில் மக்கள் மேம்பாட்டிற்காக நடைபெறும் அமைதியான புரட்சியை அறிவுறுத்தும் நினைவுச் சின்னங்களாக விளங்குகின்றன. இந்த ஆண்டு ஆதி திராவிடர்களுக்காக 'தாட்கோ' மூலம் 5,000 வீடுகளும், காமராசர் தீப்பிடிக்காத வீடுகள் மூலம் 8,000 வீடுகளும், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மூலம் 55 ஆயிரம் வீடுகளும், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்படி 39 ஆயிரம் வீடுகளும் மொத்தம் ஒரு இலட்சம் வீடுகளுக்கு மேல் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படுகிறது. அடிப்படை வசதிகளான தண்ணீர் மின்சாரம் செய்து கொடுக்கப்பட்டதைக் கணக்கெடுத்தால், இதுவரை 597 காலனிகள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளைப் பெற்றுள்ளன. இன்னும் இந்த நிதியாண்டு முடிவதற்குள்ளாக 740 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.''

திரு. எஸ். மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரை ஆற்றினார். விழாவில் நாகை ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. எஸ். பி. தங்கையன், ஊராட்சி மன்றத் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். சாம்ராஜ் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். துவக்கத்தில் 'தாட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி. பிரபாகர்ராவ் இ.ஆ.ப., வரவேற்றார். முடிவில் மாவட்ட வளர்ச்சி அலுவலர் (தாட்கோ) திரு. வி. ஏ. ராஜு நன்றி தெரிவித்தார்.



## தமிழ்நாட்டிலேயே சிறந்த நூற்பாலை

தமிழ்நாட்டிலேயே சிறந்த கூட்டுறவு நூற்பாலையாக, சேலம் கூட்டுறவு நூற்பாலை தேர்ந்தெடுக்கப்பட்டு, அரசின் சார்பில் கேடயம் வழங்கப்பட்டுள்ளது.

1961-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தக் கூட்டுறவு நூற்பு ஆலையில் தற்போது 1400 பேர் பணியாற்றுகின்றார்கள். இதில் 50,000 கதிர்கள் உள்ளன. இதனை நவீனப்படுத்த அரசு ரூ ஒரு கோடியே 10 இலட்சம் அனுமதித்தது. இதனை இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி கொடுக்கிறது.

நடப்பாண்டில் 40 இலட்சம் கிலோ நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ரூ. 57 இலட்சம் லாபம் கிடைத்துள்ளது. 1986-87-இல் அதிகலாபம் பெற்றதால் இந்த நூற்பாலையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ. 4.15 இலட்சம் அளவில் பொருட்களாகவும் பணமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

நல்ல தரமான நூலை உற்பத்தி செய்வதிலும், லாபகரமாக நடப்பதிலும் சிறந்து விளங்குவதால் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகச் சாதனை நிகழ்த்தி பரிசு பெற்றுள்ளது.

இந்த நூற்பாலையின் நிர்வாக இயக்குநர் திரு ஏ. பி. விஸ்வநாதன், மற்றும் இதன் தலைவரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான திரு. எம். எப். பாரூக்கி, இ. ஆ. ப. ஆகியோரின் சிறப்புமிக்க நிர்வாகம், அதில் பணியாற்றும் தொழிலாளர்களின் கடின உழைப்பு ஆகியவையே, இவ்வெற்றிக்குக் காரணமாக அமைந்தன எனக் கூறலாம்.

**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சேலம்.**



# குடிநீர்த்திட்டங்கள்– குடிநீர் விநியோகம்

**ஆர்.ஏ. சீதாராமதாஸ், இ.ஆ.ப.,**
**சிறப்பு ஆணையர்,**
**செயல் நகராட்சி நிர்வாகம்,**
**குடிநீர் வழங்கல் துறை**

தமிழக அரசு தமிழ்நாட்டிலுள்ள கிராமம் முதல் பெரிய நகரம் வரை சுத்தம் செய்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வெவ்வேறு திட்டங்கள் தீட்டி நிறைவேற்றி வருகிறது. வறட்சிக் காலங்களில், போர்க்கால அடிப்படையில் குடிநீர் வழங்கத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

எல்லா மக்களுக்கும், எல்லாக் காலங்களிலும் நல்ல குடிநீர் வழங்க வேண்டும். இக்குறிக்கோளினை நிறைவேற்ற, தமிழகத்தில் வற்றாத ஆறுகள் மற்றும் போதிய அளவில் நீர் நிலைகள் இல்லை என்றாலும், கிடைக்கக்கூடிய நீரினைச் சேமித்து வைக்கவும், பூமிக்கு அடியிலுள்ள நீரினை எடுத்து, அதைச் சீரான முறையில் வினியோகிக்கவும் அரசு அவ்வப்போது பல்வேறு திட்டங்கள் தீட்டி நிறைவேற்றி வருகிறது.

தமிழ்நாட்டில் குடிநீர்த் திட்டங்கள் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்துச் செயல்படுத்தப்படுகின்றன. அவை ஊரகக் குடிநீர்த் திட்டங்கள், நகர்ப்புறக் குடிநீர்த் திட்டங்கள், சென்னை மாநகரக் குடிநீர்த் திட்டங்கள் ஆகும்.

ஊரகக் குடிநீர்த் திட்டத்திற்கு மொத்தச் செலவையும் மைய அரசும், மாநில அரசும் ஏற்றுக் கொள்கின்றன. கிராமப் புறங்களுக்குக் குடிநீர் வழங்க மக்கள் தொகை 500-க்குக் குறைவாகவுள்ள குடியிருப்புகளை ஒரு பகுதியாக (habitation) எடுத்துக் கொண்டு குடிநீர் வழங்கப்படுகிறது. 1985 ஏப்ரல் முதல் எடுக்கப்பட்ட கணக்கின்படி 64,083 குடியிருப்புகள் தமிழ்நாட்டில் உள்ளன. இதுகாறும் 59,272 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. மேலும், தொடர்ந்து ஆண்டுதோறும் வறட்சி நிலைமை ஏற்படுவதால் நீர் வழங்குதல் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நீர் வழங்கத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டு சுமார் 5,000 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கத் திட்டம் தீட்டப்பட்டு உள்ளது.

இது தவிர வறட்சியைச் சமாளிப்பதற்காக 4,000 குழாய்க் கிணறுகள் கடந்த மார்ச் முதல் ஜூலைவரை பல்வேறு இடங்களில் ரூ. 10 கோடி செலவில் அமைக்கப்பட்டன.

கிராமப்புறக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்தத் தொகையில் 20 சதவீதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழக்கூடிய பகுதிகளில் குடிநீர் வசதிகள் செய்துதரச் செலவிடப்பட்டு வருகிறது. சமீபத்தில் எடுக்கப்பட்ட கணக்கின்படி மொத்தம் 31,500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள் தமிழகத்தில் உள்ளன. இவற்றுக்குத் தனிப்பட்ட குழாய்க் கிணறுகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதம் வரை சுமார் 35 கோடி ரூபாய் செலவில் 3,700 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

பாரதப் பிரதமர் திரு.ராஜீவ் காந்தி அவர்களின் அறிவுரைப்படி, இந்த ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு குடிநீர் வசதிகள் செய்துதர கூடுதலாக 6 கோடி ரூபாய் சிறப்பு நிதியாக ஒதுக்கப்பட்டு உள்ளது. இந்தச் சிறப்பு நிதி மற்றும் வழக்கமாக ஒதுக்கப்படும் நிதியும் சேர்ந்து சுமார் 17½ கோடி ரூபாய்க்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு, 2,200 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளுக்கு நடப்பு ஆண்டில் குடிநீர் வசதி செய்து தரப்படும்.

மத்திய அரசின் "டெக்னாலஜி மிஷன்" என்ற திட்டத்தின் கீழ் உப்பு நீர் உள்ள பகுதிகள், இரும்புத் தாதுப்பொருட்கள் கலந்துள்ள நீர்ப்பகுதிகள், ஃப்ளூரைடு அதிகமுள்ள நீர்ப்பகுதிகள் போன்றவற்றில் உள்ள குடியிருப்புகளுக்குக் குறைந்த செலவில் தொழில் நுட்ப அடிப்படையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க, சுமார் 70 கோடி

> "இதுவரை 59,272 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. வறட்சியைச் சமாளிக்க 4000 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை நகர மக்களுக்கு, சீரான முறையில் தொடர்ந்து குடிநீர் வழங்கும் நடவடிக்கைகள்"

ரூபாய் செலவில் திட்டங்கள் தீட்டப்பட்டு, இராமநாதபுரம், சேலம் மற்றும் தென்னார்க்காடு மாவட்டங்களில் அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் சென்னை மாநகராட்சி நீங்கலாக 753 நகரங்களில், 336 நகரங்களுக்கு, குடிநீர் வழங்கும் திட்டங்கள் தற்போது அமைக்கப்பட்டுள்ளன. இன்னும் 6 மாதங்களில், மேலும் 100 நகரங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டங்கள் அமல்படுத்தவும், 40 நகரங்களில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காகச் சுமார் 18 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 13 நகரங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்கள் இன்னும் 6 மாத காலத்திற்குள் நிறைவேற்றப்பட உள்ளன.

பெரும்பாலான நகராட்சிகளின் நிதி நிலைமை, பற்றாக் குறையில் இருப்பதால், குடிநீர் வழங்கும் திட்டங்களுக்காக மாநில அரசும், ஆயுள் காப்பீட்டுக் கழகமும் நீண்டகாலக் கடன் உதவிகள் வழங்குகின்றன. இவை தவிர வெளிநாடுகளின் உதவியுடன் குடிநீர் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

உலக வங்கியின் நிதி உதவியுடன் சுமார் 150 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின்கீழ் மதுரை, கோவை, சேலம் நகரங்கள் மற்றும் 75 நடுத்தர நகரங்கள் மற்றும் 740 நகரங்கள் பயன்பெறும். இத்திட்டங்கள் அனைத்தும் 1991-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நிறைவு பெறும். இவற்றில் இதுவரை 12 நகரங்களில் குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நடப்பு நிதி ஆண்டிற்குள் மேலும் 12 நகரங்களில் குடிநீர்த் திட்டங்கள் முடிவு பெற உள்ளன.

ஐரோப்பியப் பொருளாதார நிறுவனத்தின் 15 கோடி ரூபாய் மானிய உதவியைக் கொண்டு கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் ஃப்ளுரைடு நீக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 260 குடியிருப்புகளில் 12½ கோடி ரூபாய் செலவில் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

டேனிடா உதவியுடன் மரக்காணம் மற்றும் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள குடிநீர் வழங்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

சென்னை மாநகரைப் பொறுத்த வரையில் பூண்டி, சோழவரம் மற்றும் செங்குன்றம் (ரெட்ஹில்ஸ்) ஆகிய ஏரிகளிலுள்ள நீரினையும் மற்றும் தாமரைப்பாக்கம், பஞ்செட்டி, மீஞ்சூர், பூண்டி, கணிகைப்பேர், ஆரணியாறு-கொரட்டலையாறு ஆகிய பகுதிகளிலுள்ள நிலததடி நீரினையும் கொண்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பருவமழை தவறாது பொழிந்தால் ஏரிகளிலிருந்து தினமும் 20 கோடி லிட்டர் தண்ணீரும், நிலத்தடி நீரிலிருந்து சுமார் 9 கோடி லிட்டர் தண்ணீரும் எடுத்து ஒரு நபருக்கு 70 லிட்டர் வீதம் நாள் ஒன்றுக்குக் கிடைக்குமாறு செய்யலாம்.

நகரின் குறைந்தபட்சத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அரசு பல அவசர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பழுதடைந்த குழாய்கள் மாற்றப்பட்டு வருகின்றன. புதிய குடியிருப்புப் பகுதிகளுக்கும் குடிநீர் இணைப்பு நீட்டிக்கப்படுகிறது. குழாய்களின் மூலம் குடிநீர் வழங்க முடியாத பகுதிகளுக்கும், ஏழை மக்கள் வாழும் குடிசைப் பகுதிகளுக்கும் லாரிகள் மற்றும் தண்ணீர்த் தொட்டிகளின் மூலமும் குடிநீர் வழங்கப்படுகிறது. 5,665 குழாய்க்கிணறுகளும், 4,740 இந்தியா மார்க்-2 பம்புகளும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் வறட்சிக் காலத்தில் ஏரிகளிலுள்ள தண்ணீர் ஆவியாவதைத் தடுப்பதற்காக, நவீன முறைகளைப் பயன்படுத்தி, தினமும் சுமார் 1 கோடியே 2 இலட்சம் லிட்டர் தண்ணீர் பாதுகாக்கப்பட்டது. சென்ற ஆண்டு ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக ஜூலை 8 முதல் ஒரு நாள் விட்டு ஒரு நாள் 4½ கோடிக் கேலன் தண்ணீர் வழங்கப்பட்டது. இந்த ஆண்டும், ஒரு நாள் விட்டு ஒருநாள் 6 கோடிக் கேலன் தண்ணீர் குடிப்பதற்கு வழங்கப்படுகிறது. ஒரு கோடி லிட்டர் தண்ணீர், தொழிற்சாலைகளுக்குத்தினமும்வழங்கப்படுகிறது.

சென்னை மாநகரிலுள்ள மக்களுக்குச் சீரான முறையில் தொடர்ந்து குடிநீர் வழங்க அரசு பல திட்டங்களைத் தீட்டி வருகிறது. உலக வங்கி உதவியுடன் ரூபாய் 150 கோடி செலவில் குடிநீர் மற்றும் நவீனக் கழிப்பிடங்கள் வசதிக்காகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம் தினமும் சுமார் 10 கோடி லிட்டர் தண்ணீர் கூடுதலாக வழங்கப்படும். இத்திட்டம் 1994-ம் ஆண்டில் நிறைவுபெறும். இத்திட்டத்தின் கீழ் முன்கூட்டியே எடுக்கப்பட்ட துரிதமான நடவடிக்கையின் காரணமாக இப்பொழுதே 4 கோடி லிட்டர் தண்ணீர் தினமும் கிடைக்கிறது. மேலும், பாலாற்றிலிருந்து நிலத்தடி நீரைத் தினமும் 4½ கோடி லிட்டர் அளவிற்கு எடுக்கும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது. குடிநீர்த்தேவை அதிகரித்து வரும் இந்நாளில், தொழிற்சாலைகளின் உபயோகத்திற்கு வழங்கும் குடிநீரைச் சேமிக்கும் நோக்கோடு, கழிவுநீரைச் சுத்தப்படுத்தி, தொழிற்சாலைகளின் உபயோகத்திற்கு வழங்கும் திட்டம் அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.

கடல்நீரைச் சுத்தப்படுத்திக் குடிநீராக மாற்றி வழங்கும் திட்டமும், அரசின் தீவிரப் பரிசீலனையில் இருந்து வருகிறது. மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களால் துவக்கப்பட்ட கிருஷ்ணாநதித் திட்டத்தின் மூலம் 1,200 கோடி கன அடி தண்ணீர் சென்னைக்குக் கிடைக்கும்.

சென்னை மாநகரைப் பொறுத்த வரையில் ஜனவரி '89-இல் ஏரிகளில் சுமார் 450 கோடி கன அடி நீர் இருந்தால் நாள்தோறும் சென்னை நகருக்குத் தண்ணீர் வழங்குவது பற்றிப் பரிசீலிக்கப்படும். தற்பொழுது உள்ள நீரின் அளவைக் கொண்டே வரும் ஆண்டும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழங்குவதில் எந்த விதமான இடர்ப்பாடும் இராது.

தமிழக மக்கள், குடிநீர்த் திட்டங்கள் நிறைவேறுவதற்கு முழு ஒத்துழைப்புத் தரவேண்டும். குடிநீர் நமது பொதுச் சொத்து. அதைச் சீராக, சிக்கனமாக, வீணாக்காமல் பயன்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

(சென்னை வானொலியில் 21-11-88 அன்று ஆற்றிய உரையிலிருந்து)

## கூட்டுறவு ஒரு வாழ்க்கை நெறி

கூட்டுறவுவியக்கம் வெகு காலத்துக்கு முன்பே பல நாடுகளில் சிறு அளவில் குறிப்பிட்ட நோக்கங்களுடன் ஆரம்பிக்கப்பட்டது.

வேளாண்மை, தொழில் சேவைகள் மற்றும் பலவற்றில், அதாவது எல்லாவற்றிலும் கூட்டுறவுகள் செயல்படுகின்றன. கூட்டுறவுக் கொள்கையென்பது சாதாரணமாக திறமையுடனும், சிக்கனத்துடனும் செயல்படுவது என்பதை விடவும் மேலானது. அது சிக்கனமானது. அது நியாயமானது. அது சமன் செய்கிறது. ஏற்றத் தாழ்வுகள் வளராமல் தடுக்கிறது. ஆனால் அவற்றையும் விட அது ஆழமானது. உண்மையில் கூட்டுறவு, ஒரு வாழ்க்கை நெறி.

—ஜவஹர்லால் நேரு



சாய்ந்து கொண்டிருக்கும் சண்டேசுவரர் கோயில்

# ஒரு காலக் கனவின் கண்ணீர்க் கதை!

**டாக்டர் இரா. கலைக்கோவன்**

பழையாறை! முடிகொண்ட சோழபுரம், நந்திபுரம், இராசராசபுரம், ஆகவகுலகாலபுரம் என்று பல சிறப்புப் பெயர்களுடன் வரலாற்றுப் பக்கங்களை நிறைத்துக் கொண்டிருக்கும் இந்த ஊரில் தான் எத்தனை வனப்பான வரலாற்றுக் கீறல்கள்.

குந்தவையும், வந்தியத்தேவனும் வாழ்ந்து மகிழ்ந்ததும், காதலும் கனிவுமாய் சோழ நாட்டுப் பேரழகியர் பலர் களித்துக் குலாவியதும், வீரப் புலிகளாய் இளங்காளைகள் ஆயிரக்கணக்கில் நாடுகாக்க எழுந்து நின்றதும் இந்த மண்ணில் தான் என்ற நினைவோடு பழையாறையை நெருங்குவோர், அதன் இன்றைய நிலையைப் பார்த்தால் துடித்துப் போய்விடுவர். விண்முட்டும் மாடமாளிகைகளும், கண் மயக்கும் காட்சியழகுகளும், நெஞ்சை நிறைக்கும் இனிய சூழல்களும், பழையாறைக்குப் பகையாகிப் போன நிலையில் யானையழித்த காடுபோல, சின்னஞ்சிறு ஊர்களாய்ச் சிதறுண்டு, கவினிழந்து கிடக்கிறது, இவ்வூர். பொலிவிழந்து நிற்கும் இந்தப் பழையாறையின் ஒதுக்குப்புறமான ஓரிடத்தில்தான் இராசேந்திரனின் காலக் கனவொன்று கண்ணீர்க் கதையைச் சுமந்தபடி கதறிக் கொண்டிருக்கிறது.

தமிழகத்துக் கோயில்களைக் கலையறிஞர்கள் பலவகைப்படுத்துவர். அவற்றுள் பள்ளிப்படைக் கோயில்கள் ஒருவகை. இறந்தவர்களைப் புதைத்தல் பள்ளிப்படுத்துதல் எனப்படும். அப்படிப் பள்ளிப்படுத்தப்பட்ட இடத்தில் எழுப்பப்படும் கோயில்களே பள்ளிப்படைக் கோயில்கள். முதற் பராந்தகனால் அவன் தந்தை முதலாம் ஆதித்தனுக்கு எழுப்பப்பட்ட கோதண்டராமேசுவரம், முதலாம் இராசராசனால் அவன் பாட்டன் அரிஞ்சயனுக்கு எழுப்பப்பட்ட அரிஞ்சிகையச்சுவரம், இவையிரண்டும் பள்ளிப்படைக் கோயில்களுள் குறிப்பிடத்தக்க சிறப்புடையவை. இவை போலவே இத்தமிழ் மண்ணில் பெண்ணொருத்திக்குப் பள்ளிப்படைக் கோயில் ஒன்று இம்மண்ணையாண்ட மன்னன் ஒருவனால் எழுப்பப்பட்டிருக்கிறது என்ற செய்தி பலருக்கும் தெரியாத வரலாற்றுப் புதையலாகும்.

இப் பள்ளிப்படைக் கோயில் இன்று 'இராமநாதன் கோயில்' என்ற புதிரான பெயருடன் பழையாறையில் பரிதாபக் கோலத்தில் காட்சியளிக்கிறது. தமிழகத்துப் பெருமையைக் கங்கைக்கரையிலும், அலைமோதும் கடாரக் கரையிலும் கவிதைகளாய் வளரவிட்ட சோழப் பெருவேந்தன் முதலாம் இராசேந்திரனால் எடுப்பிக்கப்பட்ட பெருமையுடையது இக்கோயில். கல்வெட்டில் 'பஞ்சவன் மாதேவீச்சரம்' என்று பூரிப்போடு அறிமுகப்படுத்தப்படும் இத்திருக்கோயிலை, இராசேந்திரன் தன் சிற்றன்னை பஞ்சவன் மாதேவியின் நினைவாக எடுப்பித்தான்.

முதலாம் இராசராசனுக்கும், வானவன் மாதேவிக்கும் பிறந்தவன் முதலாம் இராசேந்திரன். தாயிடம் அன்பு கொண்டிருந்தாற் போலவே முதலாம் இராசராசனின் மற்றொரு மனைவியும், தன் சிற்றன்னையுமான பஞ்சவன் மாதேவியிடமும் இராசேந்திரன் இணையற்ற அன்பு கொண்டிருந்தான். பழுவூர் மகளான பஞ்சவன் மாதேவி இப்பேரரசனைத் தன் கரைகாணா தாய்ப் பாசத்தால் அரவணைத்து வளர்த்திருக்க வேண்டும். அதனால்தான் அந்த அன்பின் விளைவால்தான், தான் அன்னையினும் மேலாய் மதித்த அப்பெருமாட்டி காலமானதும், அவரது மறைவைத் தாங்க இயலாத் துயரத்துடன் அப்பேரரசியைப் பள்ளிப்படுத்திய இடத்தில் அவர் நினைவாகச் சிவன் கோயிலொன்றைக் கலைக்கோயிலாய் எழுப்பி, அதற்கு அப்பெருமாட்டியின் பெயரையே சூட்டிப் 'பஞ்சவன் மாதேவீச்சரம்' என்று பெருமைப்படுத்தினான் இராசேந்திரன்.

பழையாறையில் பஞ்சவன் மாதேவிக்காக இராசேந்திரன் எழுப்பிய இந்த அழகுக் கற்றளி இன்றிருக்கும் நிலை நெஞ்சைக் குமுற வைக்கிறது. சுற்றிலும் வயல்கள் சூழ அசோகவனத்துச் சீதை போலச் சோகம் சூழ்ந்த தோற்றத்துடன், பாழடைந்து போன பழங்கோயிலாய், ஆளரவமின்றி, அனாதையாய் நிற்கிறது இந்த அன்புக் கோயில்! மிகப் பெரிய மதிலால் சூழப்பட்டிருந்தும், பல இடங்களில் தொடர்ச்சியின்றிச் சுவர் சிதறியிருப்பதையும், செங்கற்கள் நழுவியிருப்பதையும், மதிலெல்லாம் செடிகள் செழித்திருப்பதையும் காணும்போது கணகளில் நீர் தளும்புகிறது. மூன்று நிலை முன் கோபுரம் பூச்சுகள் உதிர்ந்து செங்கற்கள் வெளித்தெரிய செடி கொடிகளின் தயங்காத் தழுவலில், தன் கடைசி நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறது.

கிழக்கு நோக்கி அமைந்திருக்கும் மையக் கோயிலின் முகமண்டபத்து நுழைவாயிலில் பக்கத்திற்கொருவராக வாயிற்காப்போர் காணப்படுகின்றனர். பதினோராம் நூற்றாண்டுக் கலை முறையில் அமைந்திருக்கும் இந்த அழகுச் சிற்பங்கள் அழிவின் பாதையில் அடியெடுத்து வைத்திருக்கின்றன. முகப்புச் சுவரிலும், செடிகள் காடாய் மண்டியுள்ளன. கற்கள் பல கட்டுமானத்திலிருந்து நழுவி, எந்தக் கால் எப்போது விழுமோ என்ற நிலையில் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. துணிவை வரவழைத்துக் கொண்டு மகா மண்டபத்துக்குள் நுழைபவர்கள் புறநானூற்றுத் தமிழர்களாக இருந்தாலும் மூக்கைப் பிடித்துக் கொள்ளவும், நெஞ்சைத் தேற்றிக் கொள்ளவும் வேண்டியிருக்கும்!

வெளவால்களின் பெருங்குடியிருப்பாய்த் தோன்றும் இம்மையக்

கோயிலில் எங்கு நோக்கனும் கும்மிருட்டுத்தான். கையில் விளக்கில்லாமல் வருபவர்கள் எங்குக் காலை வைப்பது, எப்படி நடப்பது என்று புரியாமல் விழிக்க நேரிடும். இம்முகமண்டபத்தின் தரையில் பாவப்பட்டிருந்த கற்கள் கருணையாளர்கள் பலரால் கடத்தப்பட்டு விட்டதால், கம்பரை நினைத்தபடியே 'இட்ட அடி நோக, எடுத்த அடி' தவறி விடாதபடி கவனத்துடன் நடக்க வேண்டும்.

மகா மண்டபத்து வாயிலின் இருபுறமும் சிவபெருமானின் சந்திரசேகரவடிவம் அழகு கொழிக்க வாயிற்காப்போர் போல் நிறுத்தப்பட்டுள்ளது. இத்திருமேனிகளின் இடப்புறப் பின் கைகளில் முத்தலை ஈட்டி காட்டப்பட்டுள்ளது. வலப்புறப் பின் கைகளில் தலையோடு உள்ளது. நுழைவாயிலின் வலப்புறம் இருக்கும் திருமேனியின் முன் கை காக்கும் கையாக, இடமுன்கை கட்ய வலம்பிதத்தில் காணப்படுகிறது. இடப்புறம் இருக்கும் திருமேனியின் வல முன் கை கட்ய வலம்பிதமாக இடமுன் கை அழைத்து வழங்கும் அருட்கையாக உள்ளது. இச்சந்திரசேகர வடிவங்கள் இங்குள்ள கல்வெட்டிலும் குறிப்பிடப்பட்டிருப்பது சிறப்புக்குரிய செய்தியாகும்.

மகா மண்டபத்தில் தென்புறம் பார்த்தபடி இறைவியின் திருமுன் அமைந்துள்ளது. மங்கலநாயகி

பிச்சைத் தேவரின் அழகு வடிவம்





பஞ்சவன் மாதேகவரத்தின் பரிதாப முகப்பு

என்ற திருப்பெயருடன் விளங்கும் இத்தேவியின் திருமுன் மங்களமாய் இல்லாக் கொடுமைக்கு யாரை நோவது? குப்பைக் கூளங்கள் நிறைந்திருக்கும் இக்கருவறை மனித வாசனைகண்டு பலநாளாகியிருக்கும் போல் தோன்றுகிறது. இதே மகா மண்டபத்தில் கதிரவன், நாகர், முருகன், பிள்ளையார் முதலிய தெய்வத் திருமேனிகள் வழிபாட்டுக்கு வழியின்றி, இருட்டிலும் தனிமையிலும் தவிக்கும் தேவிக்கும் இறைவனுக்கும் துணையாக நிற்கின்றன.

மகா மண்டபத்தையும், உள் மண்டபத்தையும் சிறு இடைநடையொன்று இணைக்கிறது. உள் மண்டப வாயிலின் இரு புறமும் பக்கத்திற்கொருவராக வாயிற்காப்போர், ஆந்தைக் குண்டலமும், பனையோலைக் குண்டலமும் செவிகளை அழகு செய்ய இராசேந்திரன் காலத்துச் சிற்பக் கலையின் சிறப்புச் சான்றுகளாய் நிற்கின்றனர். இறைவன் ராமநாதசாமி என்ற புதுப் பெயருடன் கருவறையில் லிங்கத் திருமேனியராய் எழுந்தருளியுள்ளார். இடை நடையில் காணப்படும் சிங்கத் தூண் மிக அற்புதமான கலைப்படைப்பாகும். ஒரு காலை மடித்துத் தூக்கியபடி குத்துக்காலிட்டு அமர்ந்திருக்கும் சிங்கத்தின் தலைமீது தூண் எழும்புகிறது. பழுவூரையும், பல்லவ இராசசிம்மன் கோயில்களையும் நினைவுபடுத்தும் இத்தூண் இங்குத் தனித்து நிற்பதன் அதிசயம் தான் விளங்கவேயில்லை.

கருவறை, உள் மண்டபம் இவற்றின் புறச்சுவர்களில் தேவ கோட்டங்கள் அமைந்துள்ளன. இந்தத் தேவ கோட்டங்களின் மேல் மகர தோரணங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. உள் மண்டபத்துப் புறச் சுவரின் தென்புறத்தில் மூன்று கோட்டங்களும், வடபுறத்தில் மூன்று கோட்டங்களும் உள்ளன.

அடுத்த இரண்டு கோட்டங்களில் பிச்சையுகக்கும் பெம்மானும் பிள்ளையாரும் காணப்படுகின்றனர். பிச்சையுகக்கும் பெம்மானின் சிற்பம் இராசேந்திரன் காலத்துச் சிற்பக் கலையின் சிகரம் எனலாம். இறைவனின் வல முன் கை மானுக்குப் புல் தருவது போல் காட்டப்பட்டுள்ளது. வலப் பின்கை உடுக்கை ஏந்தியுள்ளது. இட முன் கையில் தலையோடும், பின் கையில் சாரமும் காணப்படுகின்றன. இறைவனின் இடப்புறம் குள்ளச் சிறு பூதம் ஒன்று தலையில் சட்டியைச் சுமந்தபடி நிற்கிறது. பாம்பை இடுப்பணியாகக் கொண்டிருக்கும் இறைவனின் இந்த அழகுத் திருக்கோலம் கச்சிதமான உடலமைப்பும், சிரிப்பு சிந்தும் சிங்கார முகமுமாய்க் கல்லில் வடித்த கவிதையாய் நிற்கின்றது.

புறச்சுவரின் வடபுறத்தில் கொற்றவை, அம்மையப்பர், கங்கையையேற்ற அண்ணல் முதலிய தெய்வத் திருமேனிகள் காணப்படுகின்றன. எல்லாமே அழகிய சிற்பக் கோலங்கள். கொற்றவைத் தேவி ஆறு கைகளுடன் அழ கரசியாகக் காட்டப்பட்டுள்ளார். வல முன் கை காக்கும் கையாக, வலப் பின் கரங்களில் வாளும், சக்கரமும் கொண்டு, இட முன் கை கட்ய வலம்பிதமாக, இடப் பின் கைகளில் கேடயமும் சங்கும் கொண்டு அருள் பொங்கும் அமுதப் பார்வையில் கருணை மலர நிற்கும் இத்தேவியின் இட முன் கை மணிக்கட்டில் கிளியொன்றும் காட்டப்பட்டுள்ளது.

கருவறையின் புறச்சுவர்களில் தென்புறம் ஆலமர் அண்ணலும், மேற்கில் லிங்கோத்பவரும், வடபுறம் நான்முகனும் உள்ளனர். துணைத் தளம், தாங்கு தளம், யாளிவரிமானம் கொடுங்கை அனைத்துமே கூர்மையான வடிப்புத் திறனுடன் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும், அழிவின் பேயாட்

டத்திலும் அப்படியே நிற்கும் சிறப்பு வியப்பூட்டுகிறது. கொடுங்கைவரை கருங்கல்லால் ஆன இதன் மேல் தளம் செங்கல்லால் ஆனது.

விமானத்தின் உச்சி திராவிட சிகரமாக இருந்தாலும், சற்றுப் புதுமையான அமைப்பில், முடிகவிழ்ந்தாற் போல் கட்டப்பட்டிருக்கும் அழகு நெஞ்சில் நிறைகிறது. கீர்த்தி முகங்களை வியான தேவதைகள் அழகு செய்கின்றன.

மையக் கோயிலின் வடபுறத் திருச்சுற்றில் சண்டேசுவரர் திருமுன், குடந்தையில் ஒரு பைசா கோபுரம் இருப்பதை நினைவுபடுத்துவது போல சாய்ந்த கோயிலாய்ச் சரிந்து நிற்கிறது. உலக அதிசயங்களுள் ஒன்றான பைசா கோபுரத்தைப் பார்க்க இனி இத்தாலி போக வேண்டாம். பழையாறைக்கு வந்து இந்தச் சண்டேசுவரர் கோயிலைப் பாருங்கள், போதும்! பைசா கோபுரத்தினும் அதிசயிக்கத்தக்க, விதத்தில் சாய்ந்து கொண்டிருக்கிறது. இத்திருமுன்னைச் செடி கொடியினங்கள் தீராக் காதலோடு தழுவிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் இன்னும் எத்தனை நாளைக்கு இந்தத் தமிழகத்து பைசா தாங்குமென்று தெரியவில்லை.

கோயிலின் திருச்சுற்று முழுவதும் முட்செடிகளும், புற்களின் கோரமான வளர்ச்சியும்தான். தென்புறச் சுற்றின் மையத்தில் செடி கொடிகளால் மூடப்பட்ட நிலையில் திறந்த கிணறு ஒன்று தூர்ந்துபோய் யானை பிடிக்க அமைத்த பள்ளமாய்க் காத்துக் கொண்டிருக்கிறது. தப்பித்தவறி கலை ஆர்வலர்கள் யாரேனும் இக்கோயிலுக்குள் நுழைந்து, சிற்பங்களை ரசித்தபடி இதைக் கவனியாது காலை வைப்பார்களேயானால், சிவபதம் நிச்சயம்.

மையக் கோயிலின் தாங்கு தளத்தின் முப்புறமும் கல்வெட்டொன்று காணப்படுகிறது. மிக நீளமான இக்கல்வெட்டு முதலாம் இராசேந்திரனின் ஏழாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ளது. 'திருமன்னி வளர' என்னும் இராசேந்திரனின் மெய்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டு வரலாற்றுக் கடலுக்கோர் கலங்கரை விளக்கமாய் அமைந்துள்ளது.

இக்கோயிலிருக்கும் இடம் கல்வெட்டில், க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு, திருநறையூர் நாட்டுப் பழையாறையான முடிகொண்ட சோழபுரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 'பள்ளிப்படையான பஞ்சவன் மாதேவி ஈசுவரத்து மகாதேவர்' என்ற வரியில் பள்ளிப்படை என்னும் சொல் அழிக்கப்பட்டிருக்கிறது. இது எந்த மகானுபவரின் வேலையோ தெரியவில்லை! இக்கோயில் இறைவனுக்கும், இக்கோயிலில் பணியாற்றும் பல்வேறு



அலுவலர்க்கும் வழங்கப்பட்ட நிவந்தங்களை இக்கல்வெட்டு வரிசைப்படுத்துகிறது. இச்செய்தியைக் கல்லில் வெட்டச் சொன்னவராய் உய்யக் கொண்டார் வளநாட்டு, வெண்ணாட்டுக் கேரளாந்தக சதுப்பேதி மங்கலத்து மாராயன் அருள்மொழியான உத்தம சோழபிரும்மராயன் என்பார் பெயரும் இக்கொடையைக் கண்காணிக்கும் பொறுப்பாளராய்ச் சேற்றூர்க் கூற்றத்து மருதத்தூர் உடையான் வெண்காடன் கோவந்தை, மடபதி லகுளீசுவர பண்டிதர் என்பார் பெயர்களும் குறிப்பிக்கப்பட்டுள்ளன.

இக்கோயில் மகாதேவர்க்கு மூன்று சந்திக்கும் திரு அமுது, நெய்யமுது, மிளகு, உப்புடன் கூடிய கறியமுது, தயிரமுது, அடைக்காய் அமுது (வெற்றிலை, பாக்கு) ஆகியவையும், பிற தெய்வங்களான கணபதி, சந்திரசேகர், உமாசகிதர் ஆகியோருக்கு ஒரு சந்திக்கு மட்டும் திரு அமுது, நெய்யமுது, கறியமுது, தயிரமுது, அடைக்காயமுது முதலியவையும், படைக்க நெல் ஒதுக்கப்பட்டிருப்பதையும், மூன்று நந்தா விளக்குகளும், சிறு காலைப் போதில் எட்டு, உச்சிப் போதில் எட்டு, இராப் போதில் பதினாறு என சந்தி விளக்குகள் முப்பத்திரண்டும், திருப்பலிக்கு மூன்று சந்தியும், கை விளக்குகள் எட்டும், இரவுப் பந்த விளக்குகள் இரண்டும் எரிப்பதற்கு நெய் வழங்க நெல் தந்து வகை செய்யப்பட்டிருப்பதையும் பார்க்கும் போது வியப்பால் விழிகள் மலர்கின்றன.

இத்தோடு நில்லாமல், திருமஞ்சனப்பாடு, திருமெய்ப்பூச்சு இவற்றுக்கும், சந்தனம், குங்கிலியம் முதலியன இவ்வளவு என்ற கணக்குடன் ஒதுக்கப்பட்டுள்ளன. சங்கராந்தியன்றும், இராசேந்திர சோழ தேவரின் திருநட்சத்திரமான திருவாதிரைத் திருநாளன்றும், அவனது தேவியின் திருநட்சத்திரமான ரேவதித் திருநாளிலும், இறைவனுக்குப் படையல்களிட நெல் அளவிடப்பட்டுள்ளது. இங்கிருந்த ஐந்து ஓதுவார்க்கும், மடாதிபதியான லகுளீசுவர பண்டிதருக்கும், திருவாதிரை விழா எடுக்கும் பிடாரனுக்கும், சிவபிராமணருக்கும், கணக்கெழுதுவார்க்கும், பண்டாரத்தைக் காக்கும் வெண்கடாரனுக்கும், திருமெய்க்காவல் செய்த பொன்னம்பலனுக்கும், மேளம் கொட்டும் அறுவர்க்கும், திரு அலகு, திருமெழுக்கு இட்டவர்க்கும் என்று கோயிலைக் காத்தவர், கோயிலில் பணி செய்தவர் அனைவர்க்கும் ஊதிய வகைகள் முறையாகத் திட்டமிடப்பட்டுள்ளன.

கோயிலை எடுப்பித்தால் மட்டும் போதாது. அங்கு நடக்கும் வழிபாடு, படையல் இவற்றோடு, அக்கோயிலை நிர்வகிக்கும் பொறுப்பாளர்களின் ஊதியம், வாழ்க்கை வசதிகள் இவற்றையும் திட்டமிட்டு தொலை நோக்குப் பார்வையுடன் கோயிலை எழுப்பும் பெரியவர்கள் நிரந்தரமான பண ஒதுக்கீடுகள் செய்ய வேண்டும் என்பதை இந்நீண்ட கல்வெட்டு அழகாக உணர்த்துகிறது. கோனேரிராசபுரத்துச் செம்பியன் மாதேவிக் கல்வெட்டுடன் ஒப்பிடக்கூடிய அளவுக்கு கோயில் நிர்வாகம் பற்றிய பல செய்திகளை உள்ளடக்கியிருக்கும் இராசேந்திரனின் இக்கல்வெட்டு, வரலாற்றறிஞர்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும்.

எத்தனையோ முன்னேற்பாடுகளுடன், எவ்வளவோ கனவுகளுடன், திட்டம் தீட்டியும், இராசேந்திரனின் இந்தப் பாசக்கோயில் காலத்தின் கரங்களில் சின்னாபின்னமாகிக் கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, கண்கள் ஈரமாவதைத் தவிர்க்க முடியவில்லை. ஏறத்தாழ அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் பாசத்தில் தோய்ந்து, கனிவான அன்னையின் மீது தான் கொண்ட மறையாத நேயத்தின் தாங்க முடியாத தவிப்பால், அப்பெருமாட்டியைப் பள்ளிப்படுத்திய இடத்தில் ஓர் அற்புதமான கலைக் கோயிலைத் தமிழ் மன்னன் ஒருவன் எழுப்பியிருக்கும் செய்தியை எத்தனைப் பேர் அறிவர்? தமிழகத்தில் ஒரு மகன் தன் அன்புத் தாய்க்கு அவளுடைய அழியாத நினைவுகளைப் போற்றி எழுப்பித் தாய்க்கொரு தாலாட்டாய், அமைத்த ஒரே பள்ளிப் படைக் கோயில் இது தான்! எப்படிப்பட்ட அருஞ் சொத்தாய் இக்கோயிலைப் போற்றிக் காத்திருக்க வேண்டும்? எத்தனைப் பெருமைக்குரிய திருத்தலமாக இதை மாற்றியிருக்க வேண்டும்? ஏன் செய்யவில்லை? கடையோரக் கண்ணீரைத் தான் பதிலாகத் தரவேண்டியுள்ளது.

# தமிழகச் சிறைகளில் தேசத் தலைவர்கள்

சில சுவையான செய்திகள்

**சீனி விசுவநாதன்**



தனி நபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட அரசியல் தலைவர்கள் வேலூர், திருச்சி, கோயமுத்தூர் சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

சிறைச்சாலைகளில் அரசியல் கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு எப்போதும் ஒரே மாதிரிதான் இருக்கும். அவ்வுணவை உட்கொண்டால் சாப்பாடே வெறுத்து விடும்.

வேலூர் ஜெயிலில் அரசியல் கைதியாக 1940-இல் வாசம் செய்து கொண்டிருந்தார் திரு சத்திய மூர்த்தி.

வேலூர் ஜெயிலில் அப்போது தினம் தவறாமல் பூசணிக்காயும், உருளைக் கிழங்கும் ஏதாவது ஒரு வகையில் இருந்துகொண்டே வந்தன. கறி, குழம்பு, கூட்டு என்று தினந்தவறாமல் சாப்பாட்டில் அவை இடம் பிடித்துவிடுமாம்.

காலை-மாலை என்று நேரந் தவறாமல் சாப்பிட்டுச் சலிப்படைந்த நிலையில், ஒரு நாள் சத்தியமூர்த்தி அவர்கள் சாப்பாடு கொண்டு வருகிறவனிடம் ''கத்திரிக்காய், வாழைக்காய், முருங்கைக்காய்'' என்று இப்படிப் பெயருள்ள காய்கறிகளெல்லாம் வேலூரில் கிடைக்கும் என்று ஜெயில் சூப்பிரண்டுக்குத் தெரிவி; ஒரு வேளை அவர் மறந்துபோய் இருக்கலாம்'' என்றார்.

மறுநாள் உணவு வகையில் மாறுதல் செய்யப்பட்டது.

“ஜெயிலுக்குப் போகிறவர்களுக்கு முதலாவது ஏற்படும் பெரிய மாற்றம் ஒன்று உண்டு. அவர்களுடைய பெற்றோர் வைத்த பெயர்கள், நண்பர்கள் அழைத்த பெயர்கள் எல்லாம் போய், அவர்கள் சிறைவாயிலிலேயே வெறும் 'நம்பர்கள்' ஆகிவிடுவார்கள்.

நாம் தொழுக்களில் அடைக்கும் மாடுகளுக்குக்கூட நம்பர் கொடுப்பதில்லை. 'மயிலைக் காளை', 'சிவலைக்காளை' என்றெல்லாம் அருமையாகப் பெயர் வைப்போம். ஆனால், சிறைக்குச் செல்லும் மனிதர்களுக்கோ உள்ள பெயர்களும் எடுக்கப்பட்டு, நம்பர்கள் கொடுக்கப்படுகின்றன. ஆயிரக்கணக்கான கைதிகளைக் கும்பலாக அடைத்து ஆண்டு வருவதற்கு முதலாவதாகச் செய்யப்படும் ஏற்பாடு இந்த நம்பர் கொடுப்பது''

என்று திரு **எஸ். எஸ். கரையாளர்** தம்முடைய **''திருச்சி ஜெயில்''** என்னும் நூலில் எழுதியுள்ளார்.

இந்த நம்பர் கொடுக்கும் ஏற்பாட்டில் நம்பர் 1 யார் தெரியுமா? மூதறிஞர் ராஜாஜி அவர்கள்தாம்.

நம்பர் 2 டாக்டர் டி.எஸ்.எஸ் ராஜன்
நம்பர் 3 டி. பிரகாசம்
நம்பர் 4 பி. கோபால ரெட்டி
நம்பர் 5 வி.வி.கிரி
நம்பர் 6 டாக்டர் ப.சுப்பராயன்
நம்பர் 9 ஓ.பி.ராமசாமிரெட்டியார்
நம்பர் 11 என்.ஜி.ரெங்கா
நம்பர் 12 பி.ரத்தினவேலுத்தேவர்
நம்பர் 25 பி.எஸ்.குமாரசாமிராஜா
நம்பர் 27 டி.எஸ்.சொக்கலிங்கம்
நம்பர் 29 வி.கே.பழனிசாமி கவுண்டர்
நம்பர் 31 வி.சி.பழனிசாமி கவுண்டர்
நம்பர் 35 ஏ.பி.ஷெட்டி
நம்பர் 48 மட்டப்பாறை வெங்கட்ராமஅய்யர்
நம்பர் 65 என்.எஸ்.வரதாச்சாரி
நம்பர் 72 டி.நாகிரெட்டி
நம்பர் 74 என்.அனந்தசயனம் அய்யங்கார்
நம்பர் 75 சர்தார் வேதரத்தினம் பிள்ளை
நம்பர் 82 கே.சந்தானம்
நம்பர் 86 டி.எஸ்.அவிநாசிலிங்கம் செட்டியார்
நம்பர் 87 சி.பி.சுப்பையா
நம்பர் 103 எம்.பக்தவத்சலம்
நம்பர் 104 என்.சஞ்சீவி ரெட்டி
நம்பர் 130 எல்.கிருஷ்ணசாமி பாரதி
நம்பர் 131 டி.விசுவநாதம் (தென்னேட்டி)
நம்பர் 144 முத்துராமலிங்கத் தேவர்
நம்பர் 150 பாலதண்டாயுதம்
நம்பர் 196 கிருஷ்ணமூர்த்தி(கல்கி)



இப்படி திருச்சி ஜெயில் பட்டியல் நீளும்.

ராஜாஜி முதலில் கைது செய்யப்பட்டது 1921-ஆம் வருஷம் டிசம்பர் மாதம். ஜெயிலில் கைதியின் சரித்திரத்தைக் குறித்து வைக்கும் அட்டைக்கு 'ஹிஸ்டரி போர்டு' என்று பெயர். ராஜாஜியின் 'ஹிஸ்டரி போர்டில்' அதிகாரிகள் என்ன எழுதிவைத்திருந்தார்கள் தெரியுமா?

ரிஜிஸ்தர் நம்பர்: 8398
அனுமதித்த தேதி: 21.12.1921
அப்பீல் செய்ய மறுத்த தேதி: 24.12.1921
பெயர்: சி.ராஜகோபாலாச்சாரி,

இந்திய தேசிய காங்கிரஸ்
பொதுக் காரியதரிசி

படிப்பு: 'சி'

**'சி' என்றால் எழுதப் படிக்கத் தெரியாது என்று அர்த்தம்.**

'இந்தியாவின் மிகவும் முக்கியமான அரை டஜன் மனிதர்களில் ராஜாஜியும் ஒருவர்' என்கிறார் ஜான்சந்தர் என்ற உலகப்புகழ் பெற்ற பத்திரிகை நிருபர். இதே ராஜாஜியைத்தான், எழுதப்படிக்கத் தெரியாத கைதி என்றார் வேலூர் சிறையதிகாரி.

—**''திருச்சி ஜெயில்'' நூலில்**
**எஸ்.எஸ்.கரையாளர்**

திருச்சி 'ஜெயில்' வாஸம் பற்றி 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தம்முடைய ''மூன்று மாதக் கடுங்காவல்'' என்னும் நூலில் பல சுவையான செய்திகளை எழுதியுள்ளார்.

# கடைசிவரை விடுவதில்லை!



**கா**ந்திஜி புதிய கதராடையை வேட்டியாக உடுத்திக் கொள்வார். அது கிழிய ஆரம்பித்ததும் வாகாய்க் கிழித்து மேல் துண்டுகளாகப் பயன்படுத்திக் கொள்வார். சிறு கிழிசல்களை அவரே தைத்துக் கொண்டு விடுவார். மேல் துண்டுக்கும் லாயக்கில்லாமல் போனதும் அதைத் தலையணைக்கு மேல் உறையாகப் பயன்படுத்தி விடுவார். அதிலிருந்தும் அந்தத் துணி ஓய்வெடுக்கத் தொடங்கினால், அது பிறகு கைக்குட்டையாக மாறும். மற்றவை வடிகட்டும் சிறு துணிகளாகி விடும். அதிலிருந்தும் விலக்க வேண்டிய நிலை வந்ததும் அழுக்கு, தூசு ஆகியவை துடைக்கும் கந்தைகளாக அவை மாறிவிடும். அவையும் இறுதியிலே சுத்தமாகிக் காகிதத் தயாரிப்புக்குக் குடிசைத் தொழில்கூடத்துக்கு மூலப் பொருட்களாகப் போய்ச் சேர்ந்து விடும்!

—நன்றி: 'கல்கி'(காந்தி மலர்-1969)

அந்த நூலில் தமக்கேற்பட்ட அனுபவத்தைத் தமக்கே உரிய பாணியில் இப்படி எழுதினார்.

''..நேற்றுத்தான் நடந்தவைபோல் சில சம்பவங்கள் மனதில் பதிந்திருந்தன.

●

புதிதாய் சிறைக்கு வரும் கைதிகளை உள்ளே அனுப்புகிறது வழக்கம் இல்லை. வெளியில் 'குவாரண்டை' னில் பத்து நாள் வைத்திருந்து, தொற்று வியாதி ஒன்றும் இல்லையா என்று பார்த்துக் கொண்டு, பிறகுதான் உள்ளே அனுப்புவார்கள். குவாரண்டைனில் வரிசையாக அறைகள் கட்டப்பட்டிருக்கின்றன. தனித்தனி அறையில் போட்டுப் பூட்டி விடுவார்கள். சாப்பாடு சமயத்தில் மட்டும் வெளியே விடுவார்கள். இவ்வளவு பந்தோபஸ்து இருந்தும் கைதிகள் தப்பி ஓடிப் போகாமலிருக்கும் பொருட்டு, இரண்டு காலிலும் இரண்டு இரும்புக்காப்பு மாட்டி, அவைகளில் இரண்டு இரும்புச் சங்கிலிகளையும் மாட்டி விடுவார்கள்.

இப்படிக் காப்பும் சங்கிலியுமாய்ப் பன்னிரண்டு நாள் இருந்தேன். எப்போதும் எனக்கு நகையைப் பார்த்தால் வெறுப்பு; போட்டுக் கொள்பவரிடம் பரிகாசம். அதற்கெல்லாம் பிராயச் சித்தமாக இந்தப் பத்து நாளும் காப்பும் சங்கிலியும் அணிந்திருந்தேன். நடக்கும்போது கிலுக்கு கிலுக்கு என்ற சப்தம் கேட்கும். இராத்திரியில் தூங்குவது ரொம்ப சிரமம்; அப்படித் தூங்கினாலும், புரண்டு படுக்கும்போது 'கிலுக்கு' சப்தம் தூக்கிவாரிப்போடும். அதோடு காலில் அடிபட்டு வலிக்கும்.

இம்மாதிரியான காப்புச் சங்கிலியுடன், குவாரண்டைனிலிருந்து சுமார் ஒரு பர்லாங் தூரத்திலுள்ள சிறை வாசலுக்கு வந்து, காலையில் கஞ்சியும், மத்தியானம், சாயங்காலம் சாப்பாடும் வாங்கிக்கொண்டு போக வேண்டும்.

நாலு நாள் கழித்து.. என்னுடைய தாயாரும், சித்தியும் என்னை 'இன்டர்வியூ' பார்க்க வந்திருந்தார்கள். நான் 'குவாரண்டை' னிலிருக்கும்போதே அவர்கள் வந்து விட்டபடியால் சிறை வாசலிலேயே 'இன்டர்வியூ' நடந்தது. கால்களில் காப்பும் சங்கிலியும் குலுங்க, குறுக்குக்கோடு போட்ட குட்டைக் கைச் சட்டையும் 'முழங்காலுக்கு மேல் அதே துணியில் நிஜாரும் தரித்து அழகான கோலத்தில் வந்தபோது, அவர்களுக்கு முதலில் என்னை அடையாளமே தெரியவில்லை. கிட்ட வந்து ''அம்மா! சித்தி! என்னத்திற்காக இவ்வளவு அவசரப்பட்டுக்கொண்டு வந்தீர்கள்?'' என்று நான் கேட்டபோதுதான் அவர்களுக்கு என்னைத் தெரிந்தது.



அம்மா ஒன்றுமே பேசத் தெரியாமல் திகைத்துப்போய் என்னைப் பார்த்தபடி நின்றாள். சித்தி ''ஐயையோ, உன்னை இந்தக் கோலத்தில் பார்க்கத்தானா உன் அம்மா பெற்று வளர்த்தாள்?'' என்று அழதொடங்கிவிட்டாள். நான் அவர்களைக் கொஞ்சம் சமாதானப்படுத்தி ''அம்மா! நான் நகை போட்டுக்கொள்வதில்லை என்று நீ குறைப்பட்டாயல்லவா? இதோ பார், காப்பும் சங்கிலியும்'' என்றேன். இந்த நகைச்சுவையை அவர்களால் அனுபவிக்க முடியவில்லை!''

**சி**றைக்குள் போனதும் புத்தகம் எழுதவேண்டும் என்ற ஆசை பலருக்கும் ஏற்பட்டிருக்கலாம். ஆசைப்படுகிறவர்களில் எத்தனைபேர் எழுதி முடிப்பார்கள்? எழுதியவர்களின் நூல்களும் அச்சு வாகனமேறி வெளிவந்தனவும் எண்ணிக்கையில் குறைவாகத்தான் இருக்கும்.

அரசியல் கைதிகளாகச் சிறையில் தவம் இருந்த சிலர்களில் வ.உ. சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா, ராஜாஜி, கல்கி ஆகியோர் எழுதிய நூல்கள் பல்லாயிரக்கணக்கில் விற்பனையான செய்தியும் தமிழ் உலகம் அறியும்.

# படமும் செய்தியும்



செங்கற்பட்டில் 24.11.'88 அன்று செங்கற்பட்டு மாவட்ட ஒருங்கிணைந்த நீதி மன்றங்களை மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்ஸாண்டர் அவர்கள் திறந்து வைத்தார்.



இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனத்தில் தயாரிக்கப்பட்ட டார்கான் பிரஸ் டெலிபிரிண்டர் எனும் இயந்திரத்தின் பணியை மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்ஸாண்டர் அவர்கள் 5.12.'88 அன்று பார்வையிடுகிறார்.







சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியம், சென்னை எம்.ஜி. ஆர். நகரில் ரூ. 235 இலட்சம் செலவில் உருவாக்கியுள்ள கழிவு நீரகற்றுத் திட்டத்திற்கான அடிக்கல்லை, ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி. இராமகிருஷ்ணா அவர்கள் 5.12.'88 அன்று நாட்டினார்.




29.11.'88 அன்று 'சிட்கோ ஏற்பாடு செய்த வாகனப் பாகங்களுக்கான பொருட்கள் தொடர்பான 'வாங்குவோர்–விற்போர் சந்திப்புக் கூட்டத்தை தலைமைச் செயலாளர் திரு எம்.எம். இராஜேந்திரன் தொடங்கிவைத்து உரையாற்றினார்.



# திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்:
# வளர்ச்சிப்பணிகள்

**ம. ராமன், இ.ஆ.ப.,**
**மாவட்ட ஆட்சித் தலைவர்**
**திருநெல்வேலி**
**கட்டபொம்மன் மாவட்டம்**

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் வேளாண்மைத்துறை மூலமாக கார் மற்றும் பிசானப் பருவங்களில் பிரதான பயிராக நெல் 1 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டு வருகிறது. மேலும், இறவையில் தை மற்றும் சித்திரைப் பட்டத்தில் சோளம் 12 ஆயிரத்து 700 எக்டேரிலும், கம்புப் பயிர் 5 ஆயிரம் எக்டேரிலும், ஆடிப் பட்டத்தில் ராகிப் பயிர் 6 ஆயிரத்து 400 எக்டேரிலும், மாசி மற்றும் புரட்டாசிப் பட்டத்தில் பருத்தி 15 ஆயிரம் எக்டேரிலும் மானாவாரியில் 16 ஆயிரத்து 600 எக்டேரிலும், பயறு வகைகள் 40 ஆயிரம் எக்டேரிலும் பயிரிடப் பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு மத்திய அரசு நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்கிடச் சிறப்பு அரிசி உற்பத்தித் திட்டத்தை ஏற்படுத்தி அதற்காக தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. இதில் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டமும் ஒன்றாகும். இம் மாவட்டத்தில் தற்போதைய அரிசி உற்பத்தி எக்டேருக்கு 2.7 மெட்ரிக் டன் என்பதிலிருந்து 3.2 மெட்ரிக் டன்னாக உயர்த்துவது தான் இத்திட்டத்தின் நோக்கமாகும். 1 இலட்சம் எக்டேரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. உற்பத்தி அளவினை அதிகரிக்க என்னென்ன வழிமுறைகள் உள்ளன என்பதை ஆராய்ந்து, தடைகளை நிவர்த்தி செய்வது, உற்பத்தியைப் பெருக்குவது இத்திட்டத்தின் நோக்கங்களாகும். குறிப்பாக பல்வேறு பெரிய மறறும் சிறிய பாசன ஆதாரங்களை மேம்படுத்துதல், நிலத்தடி நீரைப் பயன்படுத்துதல், கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்குதல் மற்றும் நெல் சாகுபடிக்குப் பயிர்க் கடன், மத்திய, நீண்டகாலக் கடன் வழங்குதல் மற்றும் உற்பத்தியை உயர்த்தவல்ல தொழில் நுட்பங்களைக் கடைப்பிடிக்கச் செய்தல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

கடனுதவி வழங்குதல் முக்கிய பணியாகச் செயல்படுத்தப்பட்டுவருகிறது. பயிர்க் கடன் ஏக்கருக்கு 1275 ரூபாய் என்பது சிறப்பு நெல் உற்பத்தித் திட்ட இடுபொருட்களுக்காகத் தற்சமயம் ஏக்கருக்கு 1535 ரூபாயாக, கடன் வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டு மட்டும் கார் மற்றும் பிசானப்பருவத்திற்கு 660 இலட்சம் ரூபாய் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவு வங்கிகள் மூலமாக இவ்வாண்டு 290 இலட்சம் ரூபாய் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டு இதுவரை 40



**''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு—நம்மில்**
**ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே**
**நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த**
**ஞானம்வந் தாற்பின் நமக்கெது வேண்டும்''**

**—மகாகவி பாரதியார்**

இலட்ச ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக இவ்வாண்டு 370 இலட்சம் ரூபாய் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கும், கிணறுகள் ஆழப்படுத்தவும், புதிய கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்கவும் தகுந்த ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கும் நிலவள வங்கி மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக சுமார் 50 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மூலமாக விவசாயிகளுக்குப் பயிர்க்கடன்கள் 1988-89-ஆம் ஆண்டிற்கு 500 இலட்சம் ரூபாய் வழங்கிடக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 244 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில் நலிவுற்ற பிரிவினருக்கு 146 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையானது மொத்தம் வழங்கப்பட்ட பயிர்க் கடனில் 60 விழுக்காடு ஆகும்.

விவசாயப் பெருமக்கள் நகைக் கடன்கள் எளிதில் பெறுவதற்காக மாவட்டத்திலுள்ள மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகள் மற்றும் தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக நலிந்த பிரிவினருக்கு முதலிடம் கொடுத்து இவ்வாண்டு 540 இலட்சம் ரூபாய்க்குக் கடன்கள் வழங்கத்திட்டமிடப்பட்டு இதுவரை 201 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

வேளாண் காடு வளர்ப்புத் திட்டத்தில் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு இலவசமாக மரக் கன்றுகள் வழங்கப்படுகின்றன. இவ்வாண்டில் 2 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பிற்கு 3 இலட்சம் மரக் கன்றுகள் விநியோகம் செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஷெட்யூல்டு விவசாயிகளுக்கு 25 சதவீத மானியத்தில் நெல் மற்றும் சிறு தானிய விதைகளும் பயிர்பாதுகாப்பு மருந்துகளும் விநியோகம் செய்யப்படுகின்றன. இதற்கு 1 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்படுகிறது.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத்திட்டம், சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம், பெரும் விவசாயத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் மற்றும் ஜீவன்தாரா திட்டம் ஆகிய வறுமை ஒழிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்கள் இம்மாவட்டத்தில் 1 இலட்சத்து 52 ஆயிரத்து 745 எனக் கண்டறியப்பட்டுள்ளது. இவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் ஷெட்யூல்டு வகுப்பைச் சார்ந்தவர்கள் ஆவர். கடந்த ஆண்டுவரை மொத்தம் 1 இலட்சத்து 7 ஆயிரம் குடும்பங்களுக்கு இத்திட்டத்தின் மூலமாக உதவி செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு இவ்வாண்டு 236 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செப்டம்பர் மாதம் முடிய 109 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 6435 நபர்கள் அரசு மானியத்துடன் கடன் வசதி பெற்றுப் பயன் பெற்றுள்ளனர்.

மேலும் கிராமப்புற இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்புப் பயிற்சி அளிப்பதற்கு இம்மாவட்டத்தில் பாதிக்கு மேற்பட்ட ஷெட்யூல்டு வகுப்பினர் மற்றும் பெண்களையும் சேர்த்து மொத்தம் 665 இளைஞர்களுக்கு 29 வகையான தொழில்களில் அரசு மற்றும் சமூக நல நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதற்காக, சுமார் 18 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து இதுவரை 6 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கு 291 இலட்சம் ரூபாய் இவ்வாண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 167 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பல்வேறு சமுதாய நலப் பணிகளை மேற்கொள்வதற்காக 1776 வேலைகள் எடுக்கப்பட்டு, பணிகள் யாவும் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் முடிவு பெறும் நிலையிலுள்ளன.



ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டிற்கு 178 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 8 இலட்சம் மனித சக்தி நாட்கள் ( MANDAYS ) உருவாக்கப்பட வேண்டுமெனக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்நிதியில் இதுவரை 76 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு 3 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 800 தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 496 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

வறட்சிக்கு இலக்கு ஆகும் பகுதித் திட்டத்தின் கீழ் குருவிகுளம் வட்டாரம் தேர்ந்தெடுக்கப்பட்டு பொருளாதாரத்தில் நலிந்துள்ள பெரும்பான்மையாக ஷெட்யூல்டு வகுப்பு விவசாயிகள் உள்ள கிராமங்களான அழகாபுரி, மதுராபுரி, சத்திரம் கொண்டான் ஆகிய கிராமங்கள் இணைக்கப்பட்டு அழகாபுரி வளர்ச்சி மையம் ஆரம்



கோவில்பட்டி உயர்ரகச் சோளம்



பிக்கப்பட்டு பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள சுமார் 17 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

நலிவடைந்த ஷெட்யூல்டு வகுப்பினர் விவசாயம் செய்வதற்கு உதவியாகப்புதிய கிணறுகள் அரசின் முழுச் செலவில் ஜீவன்தாரா என்ற புதிய திட்டத்தின் மூலம் 1988-89-ஆம் வருடம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் ஒரு எக்டேர் அதாவது 2.5 ஏக்கருக்குக் குறைவில்லாத நபர்கள் பயனடையத் தகுதியுடையவர்கள் ஆவார்கள். ஏற்கனவே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில்சிறு பாசனத் திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்கள் இந்தத் திட்டத்தில் பயனடைய வாய்ப்பில்லை.

குறைந்த நிலமுடையவர்கள் கூட்டாகச் சேர்ந்து இந்தத் திட்டத்தில் கிணறு வெட்ட முன் வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இந்தத் திட்டத்திற்கு ஏற்படும் செலவினம் 1988-89-ஆம் வருடத்திற்கு தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் முதலிய திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து வகை செய்யப்படுகிறது.

இந்த மாவட்டத்திற்கு, தேசிய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 230 கிணறுகளும், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்திலிருந்து 130 கிணறுகளும், ஷெட்யூல்டு வகுப்பினர் பயனடைய வகை செய்யப்பட்டிருக்கிறது. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் வகை செய்யப்பட்ட 230 கிணறுகளில், 100 கிணறுகள் பூதானக் கழகத்தின் மூலமும், 50 கிணறுகள் முனைஞ்சிப்பட்டி இளைஞர் தொண்டு நிறுவனம் மூலமும் செய்து கொடுக்கப்படுகின்றன. மீதமுள்ள 80 கிணறுகள் வட்டார வளர்ச்சி அலுவலரால் செய்து கொடுக்கப்படுகின்றன. ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் வகை செய்யப்பட்ட 130 கிணறுகள் வட்டார வளர்ச்சி அலுவலர் மூலம் செய்து கொடுக்கப்படுகின்றன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலமாக திருநெல்வேலி கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் 145 கிராமங்களுக்கு 205 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர் வழங்கிடத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் 1 இலட்சத்து 71 ஆயிரம் பேர் பயன் பெறுவர். இதுவரை குடிநீர் வழங்குவதற்காக 53,200 மக்கள் பயன்பெறும் வகையில் 110 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

பாரதப் பிரதமரின் சிறப்பு நிதி உதவியின் கீழ் இம்மாவட்டத்தில் உள்ள 25 ஷெட்யூல்டு வகுப்பினரின் குடியிருப்புகளுக்கு 20 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர் வழங்கத் திட்டம் அமைக்கப்பட்டு 7 ஷெட்யூல்டு வகுப்பினர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் இம்மாவட்டத்தில் 29 கிராமிய நூற்பு நிலையங்கள் மூலமாக 6 இலட்சத்து 22 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சிட்டங்கள் உற்பத்தி செய்து இதன் மூலம் 650 பெண்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் 121 நிரந்தரச் சிறுதொழில் சானறிதழ்களும், 285 தொழில் முனைவோர்களுக்குத் தற்காலிகச் சிறு தொழில் சான்றிதழ்களும், கைவினைஞர்களுக்கு 154 சான்றிதழ்களும், குடிசைத்தொழில்களுக்கு 88 சான்றிதழ்களும் மாவட்டத் தொழில் மையம் மூலம் வழங்கப்பட்டுள்ளன. இதனால் சுமார் 1,324 நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.

பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் 377 விண்ணப்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சுமார் 67 லட்சம் ரூபாய் கடனுதவி தேசியமயமாக்கப்பட்டுள்ள வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. சிறு தொழில் நிறுவனங்கள் நிதி உதவி பெற 36 நிறுவனங்களுக்கு 9 இலட்ச ரூபாய் மொத்தத் தொகைக்குப் பல்வேறு வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் 846 நியாய விலைக்கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதில் கூட்டுறவுத்துறை மூலமாக 634 கடைகளும், மீனவர் மற்றும் பனைத் தொழில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் 29 கடைகளும், அம்பா சமுத்திரம் வட்டம் மாஞ்சோலையில் தோட்டத் தொழிலாளர் சங்கம் மூலமாக ஒரு கடையும் செயல்பட்டு வருகின்றன.

நியாய விலைக்கடைகளில் அவ்வப்போது பொது மக்களிடமிருந்து வரும் குறைகளைக் களைவதற்காக மாவட்ட அளவில் மாவட்ட விநியோக அலுவலரின் அலுவலகம், கூட்டுறவுத் துறை இணைப்பதிவாளர் அலுவலகம், துணைப் பதிவாளர் பொது விநியோகம் ஆகிய 3 அலுவலகங்களிலும் தனிக் கட்டுப்பாட்டுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொது மக்களிடமிருந்து மனுக்கள் மூலமாகவும் தொலைபேசி மூலமாகவும் வருகின்ற குறைகளுக்கு முன்னுரிமை கொடுத்து உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



# பட்டு வளர்ச்சியில் தருமபுரி மாவட்டம்

பட்டு வளர்ச்சித் துறையானது, விவசாயமும், தொழிலும் சேர்ந்த ஒரு துறையாகும். முசுக்கொட்டைச் செடி பயிர் செய்தலும், பட்டுப் புழு வளர்த்தலும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டவை. பட்டுக் கூடுகளிலிருந்து பட்டு நூல் எடுத்தலும், பட்டு நூலை முறுக்கேற்றுதலும் தொழில் வளர்ச்சியைச் சார்ந்தவைஆகும். **இந்தியாவிலேயே பெரிய பட்டுப் பண்ணை, 800 ஏக்கர் நிலப்பரப்பில், தருமபுரி மாவட்டம் தளி ஊராட்சியில் உள்ள கோலட்டியில் உள்ளது.**

***தமிழ்நாட்டிலேயே பட்டு உற்பத்தியில் தருமபுரி மாவட்டம் தான் முதலிடம் வகிக்கிறது.***

அதற்குக் காரணம், பட்டுப்புழு வளர்ச்சிக்குத் தேவையான, இதமான சீதோஷ்ண நிலையை இயற்கை அன்னை நமக்கு வழங்கி இருப்பதுதான். தமிழ்நாட்டில் செய்யப்படும் மொத்த மல்பெரிச் சாகுபடியில் நான்கில் ஒரு பங்கு தர்மபுரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. மல்பெரியானது இம்மாவட்டத்தில் மொத்தம் 17246 ஏக்கர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. இம்மாவட்டத்தில் ஒசூர், கிருஷ்ணகிரி, பாகலூர், தளி, நல்லம்பள்ளி ஆகிய இடங்களில் பட்டுத்தொழில் நல்ல முறையில் செயல்படுகின்றது. மிக வேகமாக வளர்ந்து வரும் பட்டுத் தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக, தனியாகத் தொழில் துவங்க முன்வருபவர்களுக்கு, பட்டு வளர்ச்சித் துறையினரால் உரிமம் வழங்கப்படுகிறது.

பட்டுத் தொழில் கிராமப்புற மக்களுக்கு அதிக வேலைவாய்ப்பைத் தரும் ஒரு கிராமப்புறச் சிறு தொழிலாகும். தருமபுரி மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் பட்டுத் தொழில் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. தருமபுரி மாவட்டத்தில் 32,250 விவசாயிகள் மல்பெரி சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர்.

நடப்பு ஆண்டில் இதுநாள் வரை 27.99 லட்சம் முட்டைத் தொகுதி வினியோகம் செய்யப்பட்டு 8.46 லட்சம் கிலோ கிராம் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இதனால் சுமார் 1,05,000 நபர்கள் பகுதி மற்றும் முழு நேர வேலை வாய்ப்பைப் பெறுகின்றனர். 1987-88ஆம் ஆண்டில் 87.11 லட்சம் முட்டைகள் வினியோகிக்கப்பட்டு 32.00 லட்சம் கிலோகிராம் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

பட்டு வளர்ச்சித்துறை 1979-ஆம் ஆண்டு தொழில் வணிகத் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு தனித்துறையாகச் செயல்பட ஆரம்பித்த பின்னரே பெரும் வளர்ச்சி அடைந்தது.

தமிழ்நாட்டிலேயே தருமபுரி மாவட்டத்தில்தான் பட்டு வளர்ச்சிப் பணிகளைக் கவனிக்க 3.5.82 முதல் தருமபுரியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மண்டலத் துணை இயக்குநர் அலுவலகமும், 27.2.88 முதல் ஓசூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு துணை இயக்குநர் அலுவலகமும் செயல்பட்டு வருகிறது.

தர்மபுரி மண்டலக் கட்டுப்பாட்டின் கீழ் 9 பட்டு நூற்புப் பண்ணைகளும், 2 வித்தகங்களும், அங்காடிகள் 31, பட்டு நூல் நூற்பகங்கள் 3, கிராமியப் பட்டு நூற்புப் பயிற்சி மையங்கள் 1, கிராமிய இளம் புழு வளர்ப்பு மையங்கள் 11, பட்டுத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 6 உள்ளன.

நாட்டின் விதைக்கூடுகள் உற்பத்தி செய்ய தேன்கனிக்கோட்டை வட்டத்தில் 500 ஏக்கர் பரப்பளவில் நாட்டின் விதைப்பகுதி அமைந்துள்ளது. 88-89ஆம் ஆண்டில் இது வரையிலும் 1.42 கோடி விதைக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. ஒசூர் துணை இயக்குநர் கட்டுப்பாட்டின்கீழ் 13 பண்ணைகள், வித்தகங்கள் 2, அங்காடிகள் 2, நூற்பகங்கள் 2, கிராமிய இளம் புழு வளர்ப்பு மையங்கள் 11, பட்டுத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 4 உள்ளன.

# பட்டுப்பூச்சி வளர்ப்பு: கிராமப் பெண்களுக்கு ஓர் வரப்பிரசாதம்

பட்டுப்பூச்சி வளர்ப்பு கிராமப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. பட்டு உற்பத்தியைப் பெருக்கவும், பட்டுத் தொழில் மூலம் வேலை வாய்ப்பினை அதிகப்படுத்தவும், பட்டுப் பூச்சி வளர்ப்பதில் ஈடுபட்டுள்ள கிராமப் பெண்களுக்கு முறையான பயிற்சி தேவைப்படுகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் வேளாண்மைப் பொருளியல்துறை இப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தது. பயிற்சிக்குப் பிறகு எடுத்த கணக்கெடுப்பில் கிடைத்த தகவல்கள் பின்வருமாறு:

பட்டுப்பூச்சி வளர்ப்புப்பயிற்சியினால் சராசரியாக ஆண்டொன்றுக்கு எக்டேருக்கு ரூ. 2622 கூடுதல் நிகரலாபம் கிடைத்தது. வேலை வாய்ப்பைப் பொறுத்தவரை சராசரியாக ஒரு விவசாயக் குடும்பத்திற்கு, பயிற்சிக்கு முன்பு இருந்ததைவிட 155 மனித நாட்கள் (58 சதவிகிதம்) அதிக வேலை வாய்ப்பு க்கிடைத்தது.

சரியான முசுக்கொட்டை இலைகளைத் தேர்ந்தெடுத்தல், சரியான நேரத்தில் அளவான முறையில் இலைகளைப் புழுக்களுக்குக் கொடுத்தல், எளிதில் நோய் தாக்கா வலிமை பெற்ற முட்டைகளைப் பயன்படுத்துதல், நோய் தாக்கா வண்ணம் முன் பயிற்சி மேற்கொள்ளுதல், பட்டுப்பூச்சி வளர்க்கும் கொட்டகையை நோய் பரவாமல் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல் மற்றும் முசுக்கொட்டைச் செடிகளுக்குச் சரியான அளவில் உரமிடல் போன்ற செயல் முறைகளே பட்டுப்பூச்சி வளர்ப்பில் வெற்றி பெறக் காரணமாக அமைந்தன.





தர்மபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள 3 வித்தகங்களில் உற்பத்தி செய்யப்படும் பட்டு முட்டைகள் தமிழ்நாட்டிற்குத் தேவையான முட்டை அளவில் 2/3 பங்கை நிறைவு செய்கிறது. 1987-88ஆம் ஆண்டில் 87.11 லட்சம் முட்டைத் தொகுதிகளும், நடப்பு ஆண்டின் இதுவரையிலும் 16.51 லட்சம் முட்டைத் தொகுதிகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

உற்பத்தியாகும்பட்டுக் கூடுகளைக் கொள்முதல் செய்ய தருமபுரி, ஒசூர் மற்றும் கிருஷ்ணகிரி மற்றும்பெண்ணாகரத்தில் அங்காடிகள் அமைந்துள்ளன. நடப்பு ஆண்டில் இதுநாள் வரை 2.45 லட்சம் கிலோகிராம் கூடுகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன வட ஆர்க்காடு மாவட்டப் பட்டுத் தொழில் சிறு நூற்புக் கூட்டுறவுச் சங்கமும் கொள்முதல் செய்து பயன் பெறுகிறது. இம் மாவட்டத்தில்உள்ள அங்காடிகளின் பட்டுக் கூடுகள் வர்த்தக விவரம் தர்மபுரியில் 87-88ஆம் ஆண்டில் 4.78 லட்சம் கிலோகிராம் பட்டுக் கூடுகளும், நடப்பு ஆண்டில் இதுவரையிலும் 1.97 லட்சம் கிலோ கிராம் கூடுகளும் வர்த்தகம் செய்யப்பட்டுள்ளன.

ஒசூரில் 1987-88ஆம் ஆண்டில் 0.783 லட்சம் கிலோகிராம் கூடுகளும், நடப்பு ஆண்டில் இதுவரை 0.260 லட்சம் கிலோகிராம் கூடுகளும், வர்த்தகம் செய்யப்பட்டுள்ளன. கிருஷ்ணகிரியில் 87-88ஆம் ஆண்டில் 0.344 லட்சம் கிலோ கிராம் கூடுகளும், நடப்பு ஆண்டில் இதுவரை 0.20 லட்சம் கிலோ கிராம்கூடுகளும்வர்த்தகம் செய்யப்பட்டுள்ளன பெண்ணாகரத்தில் 87-88ஆம் ஆண்டில் சுமார் 0.20 லட்சம் கிலோகிராம பட்டுக் கூடுகளும், நடப்பு ஆண்டில் இதுவரை 0.12 லட்சம் கிலோகிராம் கூடுகளும் வர்த்தகம் செய்யப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் உற்பத்தியாகும் பட்டுக் கூடுகளைக் கொள் முதல் செய்யவும், கிராமப்புற மகளிருக்கும் வேலைவாய்ப்பு உருவாக்கவும், கிருஷ்ணகிரி அணைக்கட்டில் கிராமிய சிறு பட்டு நூற்பகமும், ஒசூரில் அரசு பட்டு நூற்பகம் ஒன்றும், தருமபுரியில் அரசு பட்டு நூற்பகம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன.

கிருஷ்ணகிரி அணையில் அமைந்துள்ள நூற்பகத்தில் 48 நூற்பு ஏனங்களும், 1080 கதிர்கள் கொண்ட 3 செட் முறுக்கேற்ற இயந்திரங்களும் உள்ளன. இதனால் 180 நபர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். இதில் 140பெண்கள் 83-84ஆம் ஆண்டில் 367 கிலோ கிராம் கச்சாப்பட்டு உற்பத்தியுடன் துவங்கிய இவ்வாலை கடந்த ஆண்டு 5298 கிலோகிராம் கச்சாப் பட்டை உற்பத்தி செய்துள்ளது. நடப்பு ஆண்டில் இதுவரை 1942 கிலோ கச்சாப் பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 40பேசின்கள் கொண்ட ஒசூர் நூற்பகத்தில் 100 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். கடந்த ஆண்டு 4507 கிலோகிராம் கச்சாப்பட்டும், நடப்பு ஆண்டில் இதுவரை 1642 கிலோகிராம் கச்சாப்பட்டும்உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 20பேசின்களுடன் 50 நபர்கள் (இதில் 20 பெண்கள்) பணி புரியும் தருமபுரி நூற்பகம், 82.83ஆம் ஆண்டில் 615 கிலோகிராம் பட்டு உற்பத்தியுடன் துவங்கியது. 1987-88இல் 1295 கிலோகிராம் கச்சாப் பட்டும், நடப்பு ஆண்டில் இதுவரை 480 கிலோகிராம் கச்சாப்பட்டும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**ஒசூர் பயிற்சிப் பள்ளி**

ஒசூரில் அமைந்துள்ள இந்தப் பயிற்சிப் பள்ளி 1979ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இப்பயிற்சிப் பள்ளியில் 61 பட்டதாரிகளும், 524 பட்டதாரி அல்லாதவர்களும், 200 பேர் அறக்கட்டளை மகளிர் பணியாளர்களும் மற்றும் 100 விவசாயிகளும் பயிற்சி பெற்றுள்ளனர்.

சீனத்துப் பட்டை அதிக விலை கொடுத்துப் பணக்காரர்கள்தான் வாங்கி உடுத்தி, பகட்டாக வாழ முடியும். பாட்டாளி வர்க்கம் அதைப் பார்த்து ஏங்கத்தான் முடியும் என்றது பழைய காலம். தற்பொழுது அன்றாடம் பிழைக்கும் சுப்பனும், குப்பனும் பட்டாடை உடுத்திப் பரவசமடையும் காலம் நிகழ்ந்து கொண்டு இருக்கிறது. இத்தகைய நிலையைத் தமிழகம் அடைந்து கொண்டு இருக்கிறது. என்றால், அதற்குக் காரணம்தமிழக அரசின் பட்டு வளர்ச்சித் துறையும் அதன் சீரிய முயற்சிகளுமேயாகும். தமிழகத்தில் வளர்ந்து வரும் பட்டு தேவையினைப் பூர்த்தி செய்யும் சிறப்பான முயற்சியில், தர்மபுரி மாவட்டம் முன்னோடியாகத் திகழ்கிறது என்றால் அது மிகையாகாது.

**ஆ. கோபால்,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (விளம்பரம்)**
**தருமபுரி மாவட்டம்.**

மாணவர் பக்கம்

# அன்னையே அகிலம் ஆவாள்

சு. ப. சுருளிசுப்பு

அன்பைக் கூட்டி
அறிவை ஊட்டி
இன்முகத் தோடு
இளநகை காட்டி
நன்றே காக்கும்
நமது தெய்வம்
அன்னை என்றே
அறிவாய் தம்பி...!



தூங்கும் போதும்
துடிக்கும் போதும்
பாங்காய்ப் பள்ளி
போகும் போதும்
தாங்கும் அன்பே
தாயின் அன்பாம்;
எங்கும் அவளை
எண்ணிடு தம்பி...!

வளரும் வயதில்
வழியை உணர்ந்தே
தளரும் நிலையைத்
தளரச் செய்வாள்;
மலரின் மணம்போல்
மாண்பைப் பெறவே
பலரும் போற்றிடப்
பயனைத் தருவாள்...!



என்றும் நமக்காய்
எதையும் செய்தே
தென்னை போலே
தேய்ந்து போகும்
அன்னை அவளே
அகிலம் ஆவாள்
என்றே நீயும்
எண்ணிடு தம்பி...!

## இது உங்கள் பக்கம்!

மாணவ மணிகளே!
இது உங்கள் பக்கம்

உங்கள் திறமையை வெளிப்படுத்த இது உதவும். குட்டிக்கதைகள், துணுக்குகள், பாடல்கள் முதலானவற்றை எழுதி அனுப்பலாம். ஆனால், அவை உங்கள் சொந்தக் கற்பனையாக இருத்தல் வேண்டும். துணுக்குகள் ஆதாரத்துடன் எழுதப்படல் வேண்டும்.

கல்வியோடு, பிறதுறைகளிலும் சிறந்து விளங்கும் மாணவர்கள், தங்கள் பாஸ்போர்ட் அளவுப் படத்துடன் தங்களைப் பற்றிச் சுருக்கமாக எழுதி அனுப்பலாம். அத்துடன் பள்ளித்தலைமையாசிரியர் அல்லது வகுப்பாசிரியர் கையெழுத்துடன் அனுப்பி வைக்கவேண்டும்.



### விளையும் பயிர்!

திருச்சி ஆர். இ. சி. தொடக்கப் பள்ளியில் நான்காம் வகுப்புப் பயிலும் மாணவன் கல்யாணகுமார்.

வகுப்பில் முதல் மாணவனாகத் திகழும் இம்மாணவன் விளையாட்டுப் போட்டி, பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி ஆகியவற்றிலும் பரிசுகள் பெற்றுள்ளான். அதுமட்டுமல்ல, நடிப்பிலும், நடனத்திலும் கூட இம்மாணவன் பாராட்டுப் பெற்று வருகிறான்.

## பொது அறிவுத் துணுக்குகள்

உலகிலேயே மிக உயரமான நீர் வீழ்ச்சி எது? எங்குள்ளது?

—வெனிசுலாவிலுள்ள எங்கெல் நீர்வீழ்ச்சி. உயரம் 3212 அடிகள்.

புகழ்பெற்ற விக்டோரியா நீர் வீழ்ச்சியை முதன் முதலில் கண்ட வெள்ளையர் யார்?

—டேவிட் லிவுங்டன்.

மீட்டர்கேஜ் ரயில் பாதையில் இரண்டு தண்டவாளங்களுக்கு இடையே உள்ள இடைவெளி எவ்வளவு?

—ஒரு மீட்டர்.

வெப்ப ஆற்றல் இயக்க ஆற்றலாக மாற்றுவதற்குச் சாதனங்கள் கூறு?

—நீராவி எஞ்சின்,
பெட்ரோல் எஞ்சின்.

உலகில் அதிக மழை பெய்யும் இடம் எது?

—சிரபுஞ்சி.

எந்தப் பெருங் கடல் உறைந்த நிலையில் உள்ளது?

—ஆர்ட்டிக் பெருங்கடல்.

பூமியைச் சமமாகப் பிரிக்கும் கற்பனைக் கோட்டின் பெயரென்ன?

—பூமத்தியரேகை.

போலியோ (இளம்பிள்ளை வாதம்)நோய்த் தடுப்பு ஊசி மருந்து கண்டு பிடித்தவர் யார்?

—ஜோன்ஸ் சாலக்.




அது ஓர் அழகான பூஞ்சோலை!

அங்கு ஒவ்வொரு பூவும் ஒவ்வொரு நிறத்தில் பூத்திருந்தது. மல்லிகை தூய வெள்ளை நிறம்; கொன்றை மஞ்சள் நிறம்; குவளை நீல நிறம்; ரோஜா ரோஸ் நிறம், சில பூக்களில் இரண்டு, மூன்று நிறங்கள் கலந்து உறவாடின. அவை வண்ண அழகோடு, நறுமணமும் பரப்பின.

ஒரு நாள் மாலை நேரம்!

அச்சோலையின் காட்சிக்கினிய கவின்பொங்கும் வண்ணக்கோலத்தில் மனம் பறிகொடுத்து மெய் மறந்து நின்றிருந்தேன்.

திடீரென ஒரே ஆரவாரம். அடுத்துக் கூச்சல்! மனம் திடுக்கிட்டது. ஒன்றும் புரியவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தேன்.

என்ன வியப்பு?

மலர்கள் ஒன்றையொன்று கோபித்துப் பேசிக்கொண்டன. ''நானே அழகு'', ''நீ விகாரத்தின் எல்லை!'' என்று கூவின.

மங்கலப் பொருளாகவும், அன்பின் அடையாளமாகவும், புனிதச் சின்னமாகவும் விளங்கும் மலர்களா, தங்கள் மென்மையை மறந்து வன்சொல்லில் ஈடுபடுகின்றன என்று பிரமித்து நின்றேன். பிறகு, மெல்ல அவைகளை அணுகி கோபத்திற்கும், குழப்பத்திற்கும் காரணம் யாதென உசாவினேன்.

''வெள்ளை நிறம்தான் உயர்ந்தது!'' என்றது மல்லிகை.

''இல்லை, மஞ்சள் நிறத்திற்கே ஏற்றம்!'' இது கொன்றை.

''நீல நிறமே அழகு!''-குவளை கூறியது.

''எவ்வண்ணமும் என் வண்ணத்தின் முன்பு போட்டி போட முடியுமா?'' என்று கேட்டது ரோஜா.

மலர்களின் வாதத்தைக் கேட்ட எனக்குச் சிரிப்புதான் வந்தது. முதலில் அவைகளைக் கையமர்த்தி அமைதி கொள்ளச் செய்தேன். பிறகு ''நீல வானமும், செந்தணலும், வெண்ணிலவும், பச்சைக் கிளியும், கருமேகமும், ஆரஞ்சுப் பழமும் உங்களைப் போலவா நிறவேறுபாடு கொண்டு சண்டை போட்டுக் கொள்கின்றன? விண், மண், பொருள், பறவை, உருவம், கனி ஆகியவை வெவ்வேறு நிலைமைகளையுடையவை. இயற்கையின் நியதியில் ஒவ்வொன்றும் ஒரு நிறத்தில் திகழ்கிறது. அவை ஒற்றுமையாக இருக்கும்பொழுது, ஒரே பூ இனத்தைச் சேர்ந்த நீங்கள் பல வண்ணங்களைப் பெற்றிருப்பதில் அன்பும், அரவணைப்பும் கொண்டு பெருமை கொள்வதற்குப் பதிலாக, சிறுமை கொண்டு சீற்றம் கொள்வது நேர்மை அல்ல'' என்றேன்.

பூக்கள் பதில் ஒன்றும் சொல்லவில்லை.

''உங்கள் சண்டையைத் தீர்த்து வைக்கும் நேரம் ஒன்று வரும். அப்பொழுது உங்களின் வண்ணத்தின் நிலையும் புரியும். அதுவரையில் பொறுத்திருங்கள்'' என்று கூறி வழி நடந்தேன்

உரிய பருவ காலம் வந்தது. மழை பெய்து நின்றிருந்தது. பொழில் பூத்துக் குலுங்கியது. சோலை மலர்களின் மலர்ச்சியிலே இன்பம் குலவியது. விண்ணிலும் மண்ணிலும் பூரணமான எழிற் கோலங்கள் நடம்புரிந்தன.

மாலை நேரம்!

மேற்கு வானில் சூரியன் மறையத் தொடங்கினான். முன்பு சென்றிருந்த அதே பூஞ்சோலைக்குள் அன்று நான் நுழைந்தேன். மலர்கள் ஆவலுடன் என்னை நோக்கின. என் சமாதான தீர்ப்பை எதிர்பார்த்து அவைகளின் பூவிதழ்கள் மெல்லத் துடித்தன.

மௌனமாக அவைகளின் அருகில் சென்று நின்றேன். முறுவல் தவழும் என் முகத்தை அவை உற்று நோக்கின. சற்றுத் திரும்பி கிழக்கு வானைப் பார்க்கும்படி அவைகளுக்குச் சைகை செய்தேன்.

ஆ!
என்ன மாயம் இது!
யார் தீட்டிய ஓவியம் அது?
எப்படி வந்தது இந்த நிறப் பிரிகை?

மேக மூட்டங்களின் இடையே ஓர் அழகிய பெரிய வானவில் காட்சி அளித்தது மலர்கள் யாவும் அதைப் பார்த்து ஆச்சரியக் கடலில் திளைத்தன. பிறகு என்னைச் சூழ்ந்து கொண்டன. நான் மெல்ல கனைத்தேன்.

''வண்ணக் குழந்தைகளே! என் எண்ணம், என் நிறம் என்று ஒரு வண்ணத்தை, ஒரு நிறத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடினீர்களே! வானவில்லின் ஏழு நிறங்களைப் பார்த்தீர்களா? ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு முதலிய ஏழு நிறங்கள் ஒன்றுக்கொன்று பிணக்கு இல்லாமல் சேர்ந்து இருக்கும்பொழுது, எவ்வளவு குளுமையாக இருக்கிறது! எத்தனை அழகாக இருக்கிறது!''

ரோஜாவின் கன்னங்கள் வெட்கத்தால் மேலும் சிவந்தன.

''மலர்களே! அந்த வானவில்லின் ஏழு நிறங்களும் ஒன்றே ஒன்றுதான். சூரிய ஒளிக்கதிர் ஆகாயத்தில் மேகங்களாக மிதந்து கொண்டிருக்கும் நீர்த்துளிகளில் நுழையும்போது, ஒளி விலகலினால் அழகு நிறப்பிரிகை ஏற்பட்டு, வானவில் உண்டாகிறது. மேகங்கள் கலைந்தவுடன் வானவில்லும் மறைந்து விடுகிறது. அதுபோலவே ஒவ்வொரு மலரின்மீது சூரிய ஒளி படும்போது, அது அவ்வொளியிலுள்ள எல்லா வண்ணங்களையும் இழுத்துக் கொண்டு, தனது வண்ணம் ஒன்றையே பிரதிபலிக்கும். ஒரு சிவப்பு நிறத்தை மட்டும் நம் கண்களுக்குத் தெரியும்படி பிரதிபலித்து, மற்ற எல்லா நிற ஒளியையும் இழுத்துக் கொள்கிறது. பார்த்தீர்களா? மூலம் ஒன்று. கோலங்கள் பலப்பல! ஒன்றில் சக்தி, பலவற்றில் அழகு! இப்பொழுது சொல்லுங்கள், உங்களுக்குள் பேதம் உண்டா? வாதம் புரிவது சரியா?''

''பேதம் இல்லை! இனி வாதமும் இல்லை!'' மலர்கள் 'கலீர்' என்று சிரித்துக் கூவின.





## • கூடங்குளம் அணுமின் நிலையத்தால் ஆபத்து என அஞ்ச வேண்டியதில்லை!

## • மணலி ஆரோமேடிக் ஆலை: பல்லாயிரம் வேலைவாய்ப்பு

### மேதகு ஆளுநர் அறிவிப்பு

சென்னைக்கு அருகே உள்ள மணலியில், 840 கோடி ரூபாய் மதுப்பீட்டுச் செலவில் மணவேதிகள் (ஆரோமேடிக் வேதிப் பொருட்கள்) தொழிற்சாலைத் திட்டத்தைத் துவங்க மணலியில் இருக்கும் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு மத்திய அரசின் பூர்வாங்க அனுமதி கிடைத்துவிட்டது.

புதிதாகத் துவக்கப்படவிருக்கும் இத்தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருள்-செயற்கை இழை, ஃபிலிம், மின் கருவிகள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரிக்கப் பயன்படும். பாலியஸ்டர் செயற்கை இழை தயாரிப்பதற்கான மூலப்பொருளாகவும் இப்பொருள் பயன்படும். பிளாஸ்டிக் பொருட்கள், பெயிண்ட், பூச்சிக் கொல்லி மருந்துகள், மருந்துப் பொருட்கள் தயாரிப்பதற்கான மூலப்பொருளாக ஆர்த்தோ ஆக்சிலின் என்ற பொருள் பயன்படும்.

கூட்டுத் துறைபோல அமையும் இத்தொழிற்சாலைக்கு, மணலி எண்ணெய் சுத்துகரிப்பாலை மூலமே இணைந்து பணியாற்றும் ஓர் அமைப்பு தேர்ந்தெடுக்கப்படும். இந்த ஆலை அமைப்பிற்கான நிதி வசதியை மணலி சுத்திகரிப்பு ஆலை தனது சொந்த நிதியிலிருந்தும், பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மூலதனத்திலிருந்தும் முதலீடு செய்யும்.

இந்த ஆலை அமைப்பிற்கு ரூ. 231 கோடி அந்நியச் செலாவணி தேவைப்படும். நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் மூலம் இத்தொழிற்சாலையின் உற்பத்துப் பொருட்கள் அனைத்து நாடுகளின் தரக்கட்டுப்பாடு அடிப்படையில் தயாரிக்கப்படும்.

இத்தொழிற்சாலை அமைப்பின் மூலம், மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நாளடைவில் பலம் வாய்ந்ததோர் பெரும் தொழில் நிறுவனமாகவும், பெட்ரோலிய உபபொருட்கள் தயாரிக்கும் சிறிய தொழிற் கூடங்களைப் பரவலாக அமைப்பதற்கான தாய் அமைப்புப் போலவும் விளங்கும்.

இப்படியொரு தொழிற்சாலை அமைவதால் மணலியின் சுற்று வட்டாரப் பகுதிகளில் ஏராளமான சிறு தொழிற்சாலைகளும் உருவாகக் கூடும். மேலும் இத்துறையின் சிறந்த தொழில் வளாகமாகவும் இது அமையும். இந்தத் திட்டத்தால் நேரடியாக இருபதாயிரம் பேருக்கு வேலை கிடைக்கும். இதன் அடிப்படையில் உருவாகும் துணை உற்பத்தி மற்றும் சிறுதொழில்கள் மூலம் மேலும் பல்லாயிரக் கணக்கானோர் வேலை வாய்ப்பு பெறுவார்கள்.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சி இந்த ஆரோமேடிக் வேதிப் பொருட்கள் தொழிற்சாலைத் திட்டத்தின் மூலம் மேலும் மேம்படும்.

o o o

நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள இராதாபுரம் வட்டத்தைச் சேர்ந்த கூடங்குளம் பகுதியில் அணுமின் நிலையம் நிறுவ, தமிழ்நாடு அரசு 1995 ஏக்கர் நிலத்தை, ஒதுக்கீடு செய்திருக்கிறது. இந்த அணுமின் நிலையம் அமையும் பகுதிகளைச் சுற்றி ஐந்து கிலோ மீட்டர் தூரத்திற்கு வேளாண்மை தவிர வேறு எத்தகைய வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளவும் அரசு தடை விதித்துள்ளது.

இந்த அணுமின் நிலையத்தின் தேவைக்காகப் பேச்சிப்பாறை அணையிலிருந்து வினாடிக்கு 10 கனஅடி வீதம் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

1998-ல் செயல்படத் துவங்கும் கூடங்குளம் அணுமின் நிலையம் மூலம் சுமார் ஆறாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

அணுமின் உற்பத்தி என்பது இந்த விஞ்ஞான யுகத்தில் பல வகையாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் ஏற்பாடு என்பதை வளரும் நாடுகளெல்லாம் ஒப்புக் கொண்டிருக்கின்றன. இங்கே இதற்கு எதிராகப் பிரச்சாரம் செய்யப்படுவது வேதனைக்கு உரியதாகும். மின் உற்பத்தித் துறையில் தமிழ்நாடு 4,500 மெகாவாட் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ள நிலையில் - கூடங்குளம் அணுமின் நிலையத் திட்டத்திற்கு அரசு மூலம் எல்லா உதவிகளும் செய்து தரப்படும். இத்திட்டத்திற்காக 700 எக்டேர் தரிசு நிலத்தை அரசு கையகப் படுத்தித் தர இருக்கிறது. இது சாகுபடி நிலமோ, வனத்துறைக்குச் சொந்தமானதோ அல்ல.

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தில் கணிசமான பகுதியைத் தமிழகத்திற்கே ஒதுக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமரிடம் வலியுறுத்தப்படும்.

இந்த அணுமின் நிலையத்திற்காக சோவியத் நாட்டின் உதவியாக, இந்தியச் செலாவணியின்படி எட்டாயிரம் கோடி ரூபாய் கிடைக்கும். ரஷ்யத் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் அமைக்கப்படவிருக்கும் கூடங்குளம் அணுமின் நிலையத்தினால் பெரிய ஆபத்து எதுவும் ஏற்படுமோ என அஞ்சத் தேவையில்லை. அப்பகுதியில் வாழும் மக்களுக்கோ, அந்தப் பகுதியின் சுற்றுப்புறச் சூழலுக்கோ, மீனவர்களுக்கோ, எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது. எல்லாவற்றுக்கும் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசு செய்து கொடுக்கும்.

**—மேதகு ஆளுநர்**

**டாக்டர் பி. சி. அலெக்சாண்டர்,**

**[26—11—88 செய்தியாளர் கூட்டத்தில் பேசியது.]**

தமிழ் வளர்த்த பெரியார்:

# 'வாகீச கலாநிதி' கி.வா.ஜகந்நாதன்

குழந்தைக் கவிஞர்
அழ.வள்ளியப்பா



தோற்றம் : 11-4-1906 மறைவு : 4-11-1988

ஆழ்ந்த புலமையும், ஆராய்ச்சித் திறமையும் கொண்ட வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன் அவர்கள் மறுமலர்ச்சி இலக்கியங்களைப் படைப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். சங்கத் தமிழ் தந்த உ.வே. சாமிநாத அய்யரின் முதன் மாணாக்கராயிருந்து, அவர் செய்த அளப்பரிய தமிழ்த் தொண்டுக்கு வலக்கரமாக விளங்கியவர். கி.வா.ஜ.வின் கால் படாத ஊரில்லை; அவர் சொற்பொழி வாற்றாத மேடையில்லை.

அவரது நடை எளிய நடை. ஓரளவே கற்றவர்க்கும் புரியும் நடை. சங்க காலச் செய்யுட்களாயினும் சரி, தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கணங்களாயினும் சரி, அவர் அவற்றை எடுத்துக் கூறும் முறையும், எளிதிலே புரிய வைக்கும் ஆற்றலும், ஆயிரக்கணக்கானவர்களைத் தமிழ் நூல்களை ஆர்வமுடன் படிக்கத் தூண்டியுள்ளன.

தமிழிலே அவர் தொடாத துறை இல்லை; தொட்டுத் துலங்காத துறையுமில்லல.

தொல்காப்பியம் என்றதுமே இக்கால எழுத்தாளர்களில் பலரும், வாசகர்களில் பெரும்பாலோரும் அதைத் தொட்டுப் பார்க்கக்கூட அஞ்சுவர். எனவேதான் 'பயப்படாதீர்கள்!' என்ற தலைப்புடன் தொல்காப்பியத்தை எவரும் படித்து எளிதில் அறியும் வண்ணம் தந்தார். 'விடையவன்' என்ற புனைபெயரிலே அவர் எழுதி தந்த இலக்கண வினா விடை பலருக்கிருந்த ஐயங்களை அகற்றித் தெளிவு ஏற்படுத்தியுள்ளது.

'சங்க நூற் காட்சிகள்' எனும் பெயரில் எட்டுத்தொகையை எட்டு நூல்களிலே வடித்தளித்துள்ளார். அவர் ஆற்றிய கந்தரலங்காரச் சொற்பொழிவுகள் இருபது நூல்களாக வடிவம் பெற்று வந்துள்ளன. 'திருமுறை மலர்கள்' எனும் நூல் பன்னிரு திருமுறைகளுக்கும் விளக்கம் தரும் சிறப்புப் பெற்றது. அபிராமி அந்தாதி, கந்தர் கலி வெண்பா, அநுபூதி போன்ற பல அருந்தமிழ் நூல்களுக்கும் விளக்கம் தந்துள்ளார்.

சில தமிழ்ப் புலவர்கள் சங்க காலத்துடன் நின்று விடுவார்கள். வளர்ந்து வரும் தமிழ் இலக்கியங்களைக் கண்டு கொள்வதில்லை. கி.வா.ஜ. அவர்களோ மறுமலர்ச்சி இலக்கியங்களையும் நன்கறிந்து கொண்டதோடு, தமிழன்னைக்கு மேன்மேலும் தமது புதியன படைக்கும் திறமையால் புகழ் சேர்த்தவர்.

பவள மல்லிகை, அறுந்த தந்தி, கலைஞன் தியாகம், நல்ல பிள்ளையார் போன்ற பல சிறு கதைத் தொகுதிகளையும் 'மேக மண்டலம்' என்ற கவிதை நூலையும், 'இலங்கைக் காட்சிகள்' என்ற பயண நூலையும் தந்த கி.வா.ஜ. குழந்தை இலக்கியத்திற்கும் ஆக்கம் தந்தவர். 'விளையும் பயிர்' என்ற இவரது சிறுவர் நூல், பெருமக்கள் பலரின் இளமைப் பருவத்தை எடுத்துக் கூறி, விடாமுயற்சி, தன்னம்பிக்கை ஆகியவற்றை ஊட்டுவதோடு, தாழ்வுமனப்பான்மையையும் அகற்றும் வகையில் அமைந்துள்ளது.

நாட்டுப்புற இலக்கியத்திற்கும் இவர் நல்லருந் தொண்டாற்றியிருக்கிறார். மறைந்துவரும் நாடோடிப் பாடல்களைத் திரட்டி, அவற்றைச் சுவையான கதைகளைப் போல் விளக்கம் தந்து மேன்மையுறச் செய்துள்ளார். பெர்சி மக்யூன் (Percy Macqueen) என்ற ஆங்கிலேயர் 50 ஆண்டுகட்கு முன்பு திரட்டி வைத்த நாட்டுப்புறப் பாடல்களை 'மலையருவி' எனும் பெயரில் அரியதொரு முன்னுரையுடன் தந்த பெருமையும் இவருக்கு உண்டு.

வித்துவான் பட்டம் பெற்ற இவர், விடாமுயற்சியுடன் மேன்மேலும் படித்து எம். ஏ. பட்டமும் பெற்றார். என். ஆர். சுப்பையர் ஆங்கிலத்தில் எழுதிய நூலை 'ஆரம்ப

அரசியல் நூல்' என்ற பெயரில் மொழிபெயர்த்துள்ளார்.

வித்துவான், எம். ஏ. பட்டங்கள் பெற்ற இவருக்கு, வாகீச கலாநிதி, திருமுருகாற்றுப்படையரசு, தமிழ்க் கவிபூஷணம், தமிழ்ச் செல்வர், திரு நெறித் தவமணி, தமிழ்ப் பெரும் புலவர் என எண்ணற்ற சிறப்புப் பட்டங்களும் உண்டு. இத்தகைய சிறப்புப் பட்டங்கள் பெற்று, தொடர்ந்து தமிழ்ப் பணியே தமது தலையாய பணி என்று ஓயாமல் உழைத்தவர்க்கு, தமிழகத்திலுள்ள எந்த ஒரு பல்கலைக் கழகமும் டாக்டர் பட்டம் வழங்கவில்லையே என்ற குறை பலருக்கு உண்டு. ஆயினும் கி. வா. ஜ. இதையெல்லாம் பொருட்படுத்துவதில்லை. எவரையும் குறைகூறிப் பேசமாட்டார். அரசியலில் அக்கறை செலுத்தினாலும், அரசியலிலே நேரடியாக ஈடுபட விரும்பாதவர்.

சாகித்ய அகாதமி பரிசினையும், தமிழக அரசின் பரிசுகளையும் பெற்ற இவர், எந்த வயதினராயினும் அவர்கள் நிலைக்கு ஏற்பப் பேசிப் பழகும் இயல்புடையவர். அரைமணி நேரம் அவருடன் பேசிக் கொண்டிருந்தால், ஆயிரம் பக்கங்களைப் படித்து அறிந்து கொண்ட மன நிறைவு ஏற்படும்.

'கலைமகள்' மாத இதழின் ஆசிரியராகத் தொடக்கக் காலத்திலிருந்து விளங்கி வந்த இவர், அனுஷம், கபிலன், வாசகன், ஜோதி, கும்பம் என்ற பல புனை பெயர்களில் இலக்கியம் படைத்தவர். எத்தனையோ எழுத்தாளர்களை உருவாக்கியிருக்கிறார். எத்தனையோ சொற்பொழிவாளர்களுக்கு வழி காட்டியிருக்கிறார்.

சிலேடையாகப் பேசுவதிலும், பிறர் மனம் புண்படாதவாறு நகைச்சுவை ததும்பப் பேசுவதிலும் வல்லவர்.

சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி ஒன்று இப்போது என் நினைவுக்கு வருகிறது.

ஒரு விழாவில் பேசிய அவர், விழா முடிந்ததும் மேடையிலிருந்து இறங்கி வந்தார். 'என்னுடன் வருகிறீர்களா? காரிலே உங்களைக் கொண்டுபோய் வீட்டிலே விடுகிறேன்'' என்றேன். 'சரி' என்றார். அவருடன் நானும் என் நண்பர் ஒருவரும் காரிலே சென்றோம். அவர் இல்லத்தின் முன்னால் கார் போய் நின்றதும், அவர் எங்களை வற்புறுத்தி உள்ளே அழைத்துச் சென்று மோர் தந்தார். மோரை அருந்தி விட்டுக் காருக்கு வந்தோம். அவரும் எங்களை வழியனுப்பக் கூடவே வந்தார். காரிலே ஏறினோம். ஆனால், கார் உடனே புறப்படவில்லை. தள்ளிவிடும் நிலை



உ.வே.சாமிநாத அய்யர்

ஏற்பட்டது. நானும் என் நண்பரும் இறங்கித் தள்ளும்போது, கி.வா.ஜ. வும் தள்ளுவதற்கு வந்தார். 'வேண்டாம் வேண்டாம். நீங்கள் தள்ள வேண்டாம்' என்று நான் தடுத்தேன்.

''நான் என்ன தள்ளாதவனா?'' என்று கேட்டுக் கொண்டே எங்களுடன் சேர்ந்து தள்ளி, வண்டியைப் புறப்பட வைத்தார்.

ஈராண்டுகளுக்கு முன்பு, ஓர் ஆடி வெள்ளிக்கிழமையன்று நான், மயிலை கற்பகாம்பாள் கோயில் சென்றிருந்தேன். அப்போது அங்குள்ள குமாரசாமிக் குருக்கள் எனும் இலக்கிய ஈடுபாடுள்ள நண்பர் என்னுடன் பேசிக் கொண்டிருந்தார். அவரிடம் 'கி.வா.ஜ. அவர்களைக் காணப் போகிறேன்' என்று சொன்னதும், அவர் ஒரு பெரிய மாலை ஒன்றை என்னிடம் கொடுத்து கி.வா.ஜ. வுக்கு அணிவிக்கச் சொன்னார்.

மாலையுடன் கி.வா.ஜ. இல்லம் சென்ற நான், அவர் உடல் நலமின்றிப் படுத்திருப்பதைக் கண்டேன். அந்த நிலையிலும், அவர் எழுந்து வந்து இன்முகத்துடன் வரவேற்றார். குருக்கள் கொடுத்ததாகக் கூறி, அந்த மாலையை அவருக்கு அணிவித்தேன். அவர் பெருமகிழ்ச்சி அடைந்தார். அப்போது அருகில் இருந்த அவருடைய துணைவியார், 'ஆடி வெள்ளிக்கிழமைகளில் கோயில் போவேன்; இப்போது இவர் உடல் நிலை சரியில்லாததால், போக இயலவில்லை. அப்படியிருந்தும் கற்பகாம்பாளே உங்கள் மூலமாக இந்த மாலையை அனுப்பி அனுக்ரகம் செய்திருக்கிறாளே!'' என்று வியந்து கூறினார்கள்.

அவர் மறைந்தபோது நூற்றுக்கணக்கான அன்பர்கள் வந்து அவருக்கு மாலை அணிவித்தனர். நானும் ஒரு சந்தன மாலையை அவரின் பூத உடலில் வைத்து வணங்கியபோது, கற்பகாம்பாள் கோயில் மாலைதான் என் நினைவுக்கு வந்தது.

## சென்னை வானொலி நிகழ்ச்சிகள்

### பத்தாம் வகுப்பு மாணவர்களுக்குத் தேர்வுக்குறிப்புகள்

இவ்வாண்டு மார்ச் திங்களில் பொதுத் தேர்வைச் சந்திக்க இருக்கும் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு உதவிடும் வகையில், தேர்வுக் குறிப்புக்களை டிசம்பர் 17, 24, 31 ஆகிய நாட்களில் பிற்பகல் 2.15க்கு ஒலிபரப்பாகக் கேட்கலாம்.

### இசை விழா :

டிசம்பர் திங்கள் என்றாலே சென்னையைப் பொறுத்தவரை இசைவிழாதான் எல்லோரது மனத்தில் தோன்றும். இசை விழா, நிகழ்ச்சிகள் ஒலிக்கும் அலை வரிசைகள் நேரம் வருமாறு:

சென்னை-1— சிற்றலை.

நாள்தோறும் :

காலை 8.30-லிருந்து 9.30 வரை.
இரவு 8.00-லிருந்து 9.00 வரை,
9.30-லிருந்து 11.00 வரை (சனி நீங்கலாக)

மேலும், சனிக்கிழமைகளில் பிற்பகல் 3.15-லிருந்து 4.15 வரை. ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.00-லிருந்து 6.00 மணி வரை.

இவ்விசை நிகழ்ச்சிகள் 18-12-88-லிருந்து 4-1-1989 வரை ஒலிபரப்பாகும். இசைவிழா இசைநிகழ்ச்சிகள் சென்னை-2 அலை வரிசைகளில் நாள்தோறும் இந்நாட்களில் மாலை 7.15-லிருந்து 8.00 மணி வரையிலும், பண்பலையில் மாலை 5.00 மணியிலிருந்து 6.00 வரையில் கேட்கலாம்.




தமிழரசு ஒவ்வொரு இதழும் படித்துப் பாதுகாக்கப்படவேண்டிய அறிவுக் களஞ்சியம்.

— எஸ்.எஸ். தாமோதரன்
சுண்டப்பற்றிவிளை.

சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகம், தொண்டு, வீர வரலாற்றை என்போன்ற மாணவர்கள் தெரிந்து கொள்ள உதவுகிறது தமிழரசு

—பாலூர் ந. பாலாஜி,
கீழப்பாலூர்.

நேரு நூற்றாண்டு விழாச் சிறப்பிதழ் அரிய பொக்கிஷம். புகைப்படத் தொகுப்பும் அருமை.

—பி. கோவிந்தசாமி,
பேதாதம்பட்டிப் புதூர்.

பண்டித நேருவைப் பற்றிய கவிதைகள், கட்டுரைகள் அத்தனையும் சிந்தனைக்கு விருந்து.

—எல். முத்து,
ஊத்தங்கரை.

நேரு மாமாவின் அட்டைப் படம், மனத்தைக் கொள்ளை கொண்டது.

—வி. கே. வீரசேகரன்,
விக்கிரபாண்டியம்,

டாக்டர் ஜே. ஜி. கண்ணப்பன் அவர்களின், 'பல் மருத்துவ இயலில் அறிவியலின் பங்கு' பற்றிய கட்டுரை, பற்களைப் பாதுகாக்க ஒரு பெட்டகமாக விளங்கியது.

—ப. முருகேசபாண்டியன்,
கரப்பாடி.

நேரு பெருமகனாரின் நூற்றாண்டு விழாச் சிறப்பு இதழைப் படித்து உள்ளம் பூரித்தேன்.

—எஸ். நாகரெத்தினம்
படமாத்தூர்.

நேருவின் பொன்மொழிகள் பயனுள்ளதாக இருந்தன.

—டி. ரமேஷ் குமார்
பரங்கிப்பேட்டை.

'நேருவின் நூற்றாண்டுவிழா குறித்து வெளிவந்துள்ள கட்டுரைகள் சிறப்பானவை.

—நா. அருணாசலன்
கண்டவராயன்பட்டி.

சுவாமி விவேகானந்தரின் வாழ்வும், கருத்துகளும் எல்லாரும் அறியும்படி செய்யவேண்டும். ஆன்மிகமெனும் அரிய பொக்கிஷத்தை நாம பெறமுயல வேண்டும்.

—எஸ். முத்துக்கிருஷ்ணன்
கோவை— 6.

டிசம்பர்: 23 உழவர் நாள் (கிசான் தினம்):

# உழவே தலை!

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

— திருவள்ளுவர்

உழவுக்கும் தொழிலுக்கும்வந்தனை செய்வோம்- வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்.

—மகாகவி பாரதியார்

நிலத்தைத் தானே உழுது, தானே பயிர் செய்து, தன் குடும்பம் முழுவதையும் அதில் ஈடுபடுத்தி, அதன் பயனை அனுபவிப்பவர் குடியானவர்.

—தந்தை பெரியார்






# தேசிய ஒருமைப்பாடு நிலைக்க உழைப்போம்!

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் பிறந்த தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில், தேசிய ஒருமைப் பாட்டு வாரத் தொடக்க விழா சென்னை கலைவாணர் அரங்கத்தில் 19-11-'88 அன்று தொடங்கியது.

சென்னைக் கல்லூரி மாணவ, மாணவியர்கள் அரசியல் நிர்ணய சபையை, மீண்டும் நடத்திக் காட்டுதல் அடிப்படையில் யாவரும் பாராட்டும் வண்ணம் நடத்திக் காண்பித்தனர்.

திரு செ. ராம்தாஸ் இ.ஆ.ப., அவர்கள்(சிறப்பு ஆணையர் மற்றும் செயலர், செய்தி மற்றும் சுற்றுலாத்துறை) வரவேற்புரையாற்றுகையில், "அன்னை இந்திராகாந்தியின் பிறந்த நாள் விழா தேசிய ஒருமைப்பாட்டு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. அன்னை இந்திரா அவர்கள் இளமையிலேயே நாட்டுக்காகப் பாடுபட்டவர். எழுபது கோடி மக்களின் ஏகப் பிரதிநிதியாகத் திகழ்ந்தார். புறநானூற்றில் ஒருமைப்பாடு பற்றி அன்றே கூறப்பட்டு உள்ளது'' என்றார்.

சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் திரு ஆர். காந்தி பேசுகையில், "இந்திரா காந்தியின் சேவைகளை நினைவு கூரும் வகையில் சென்னையில் அவருக்குச் சிலை வைக்க வேண்டும். இந்தியா பல மொழிகளைப் பேசும் நாடு. பல மதத்தவர்களை உள்ளடக்கிய நாடு. இன்று குருநானக் பிறந்தநாள். இன்று தேசிய ஒருமைப்பாடு நாள் விழாக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியது. இந்திரா விட்டுச் சென்ற பணியினை நாம் தொடர இன்று உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.'' என்றார்.

திரு டி. செங்கல்வராயன் பேசுகையில், "ஏழை எளிய மக்களுக்கு வங்கிக் கடன் கிடைக்க வழி வகை செய்தவர் இந்திராகாந்தி. காந்தி, நேரு சுதந்திரத்திற்காகப் போராடியவர்கள். பொருளாதாரப் புரட்சியை உலகச் சரித்திரத்திலேயே ஏழை, எளிய மக்களுக்காகச் செய்து காட்டியவர் மறைந்த இந்திரா காந்தியவர்கள் என்றால் மிகையாகாது'' என்றார்.

திருமதி வைஜயந்திமாலா எம்.பி பேசுகையில், 'அன்னை இந்திரா அவர்களை நாம் தெய்வமாக மதிக்கிறோம்'' என்றார்.

தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு எம். இராஜேந்திரன் இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில், "சிறுபான்மையினர் நலன், குழந்தைகள் நலன் ஆகியவற்றில் பெரும் அக்கறை காட்டியவர் இந்திராகாந்தி. 'நாடு ஒற்றுமையாக இருந்தால்தான் சுபிட்சமாக வளரமுடியும். என்னுடைய ரத்தம் நாட்டு ஒற்றுமைக்காகப் பயன் படட்டும்' என்றார் இந்திரா'' என்றார்.

தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர், டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில், "பல வண்ண மலர்கள் நிறைந்த பூங்காவைப் போலப் பல்வேறு மத, மொழி, கலாச்சாரம் மிக்க பூங்காவாக உலகில் இந்தியா திகழ்கிறது. ஆயுதமின்றி அகிம்சையின் மூலம் நாம் சுதந்திரம் பெற்றதால்தான் மகாத்மா காந்தி இறந்தபோது வெள்ளையர்கள்கூட அழுதனர்'' என்றார்.

மேதகு தமிழ்நாடு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில் கூறியதாவது:

"மதத்தின் அடிப்படையில் பிரிவினை கோருபவர்கள் மிகமிகச் சொற்பம். இந்திரா காந்தி ரத்தம் சிந்திப் பாதுகாத்த நமது நாட்டில் ஒருமைப்பாட்டைக் கட்டிக் கா[illegible] நாம் ஒவ்வொருவரும் உறுதி பூண வேண்டும்.

"இந்தியாவைப் போல மதச் சார்பற்ற கொள்கையைப் பின் பற்றாமல், ஒரே மதம், ஒரே [illegible] என்ற கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட பாகிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளில் ஜனநாயகம் நிலை நிறுத்தப்பட முடியாத சூழ்நிலையும், ஒற்றுமைச் சீர்குலைவும் காணப்படுகிறது. மறைந்த இந்திராகாந்தி அவர்கள், தைரியமும், திடமும் கொண்ட முடிவுகளை எடுக்கும் எண்ணம் கொண்டவர்.''

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில், "மறைந்த பாரதப் பிரதமர் அவர்கள் காட்டிய வழியில் நாம் எல்லாரும் நடக்க இந்த அரிய சந்தர்ப்பத்தில் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்றார்.

விழா இறுதியில், செல்வி ஆர். மணிமேகலை குழுவினரின் நந்த



னார் சரித்திரம் (நாட்டிய நாடகம்) நடைபெறறது.

மேதகு ஆளுநர் அலெக்சாண்டர் அவர்கள் தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழியைப் படிக்க, விழாவில கலந்து கொண்ட அனைவரும் திரும்பக் கூறி உறுதிமொழி எடுத்து கொண்டனர்.

***சிறுபான்மையினர் நல நாள்***

தேசிய ஒருமைப்பாட்டு வார விழாவின் இரண்டாவது நாள் (20-11-'88), சிறுபான்மையினர் நல நாளாகக் கொண்டாடப் பட்டது.

சென்னை நகரப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ-மாணவியர் கலை நிகழ்ச்சிகளுடன் விழா தொடங்கியது.

விழாவிற்கு வந்திருந்தோரைப் பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர் திரு எம். கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப. வரவேற்றுப் பேசுகையில், ''பிற்பட்டோர் நலனுக்காக இந்த அரசு பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. அதை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்' என்றார்.

விழாவிற்குத் தலைமையேற்ற திரு. எம். வைத்தியலிங்கம், இ.ஆ.ப (ஆணையர் மற்றும் செயலாளர், பிற்பட்டோர் நலம், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் மற்றும் சமூகநலத் துறை) பேசுகையில், ''இந்தியா பல்வேறு மதத்தினரையும், மொழியினரையும், கலாச்சாரம் உடையவர்களையும் உள்ளடக்கியது. காஷ்மீர் முதல் குமரி வரை ஒன்றாக எண்ணிகொஞ்சமும் வேறுபாடின்றிச் செயல்பட்டு வருகிறோம். பண்டித நேரு அவர்கள் ஒருமைப்பாட்டு உணர்வை உண்டாக்கினார்' என்றார்.

கவியரங்கைத் தொடங்கி வைத்து, திருமதி சௌந்தரா கைலாசம் **தம் கவிதையில்,** ''சாதிகள் நீங்க வேண்டும். பசி போக்கப்பட வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

கவியரங்கிற்குத் தலைமையேற்று திரு புத்தனேரி ரா. சுப்பிரமணியம் தம் கவிதையில் –
''சிறுபான்மையினரின் நலத்தைச் சிந்தித்துப் பார்க்கும் நேரம் இது. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவரை உயர வைக்கும் விழா இது. காந்தி, பாரதி, நேரு, இந்திரா காந்தி அவர்களை நினைவுகூர்ந்து அவர்கள் வழிகளில் நாம் வாழ வேண்டும்'' என்றார்.

திரு எஸ். வெங்கிடசாமி **தம் கவிதையில்,** மக்களுக்கு வீரம் ஊட்டியவர் நேரு. திட்டத்தைத் தீட்டி நிறைவேற்றிடு என்று கூறியவர் நேரு. வாழ்வில் உயர்வதற்கு நம்பிக்கை தேவை என்றார் நேரு. நேரு உலக அமைதிக்காகப் பாடுபட்டதற்கு நன்றி செலுத்துகிறோம்'' என்றார்.

திரு நா. சீ. வரதராஜன் **தம் கவிதையில்,** ''தேசியப்பற்றை நெஞ்சில் ஊறறி வளர்க்கவும், இந்துக்கள், முஸ்லீம்கள், கிருத்துவர்கள் எல்லாம் நம் பந்துக்கள் என்று நாம் நினைக்க வேண்டும்' என்றார்.

திரு புதுவயல் செல்லப்பன் **தம் கவிதையில்,** சிறுபான்மையினரை நம்மவர் என்று பார்க்கிறார் நேரு. நாடு முன்னேற நாம் உணர்வுடன் செயல்படவேணும். நம் பொருள், நம் இனம் என்று நினைக்கணும்.'' என்றார்.

திரு மதிவண்ணன் **தம் கவிதையில்,** மொத்தத்தில் நாம 'இந்தியர். எல்லோரும் உழைத்தால் வெற்றி கிட்டும். ஒற்றுமை குலையாது. தனித்தனி மலராக நாம் இருக்க வேண்டாம். கதம்பமாக இருப்போம்'' என்றார்.

கருத்தரங்கைத் தொடங்கி வைத்து திரு கு. இராஜவேலு பேசுகையில். ''தேச பக்தர்கள் உழைத்ததன் காரணமாகத்தான் சுதந்திரம் கிடைத்தது. அதை நாம் மறக்கக் கூடாது. தேசபக்தி குறைந்து வருவதால்தான், இன்று நாம் ஒருமைப்பாட்டு வார விழா கொண்டாடும் நிலைமை ஏற்பட்டுள்ளது'' என்றார்.

திரு பி. ஏ. தெய்வசிகாமணி பேசுகையில், 'பண்டித நேரு, இந்திரா காந்தி ஆகியோர் சிறுபான்மையினர் நலனுக்காகப் பாடுபட்டார்கள்' என்றார்

டாக்டர் சுதா சேஷையன் பேசுகையில், 'சிந்தனையாளர்கள் இந்த நாட்டில் சிறுபான்மையினராக இருக்கிறார்கள். அவர்கள் வளர வேண்டும். இன்றைய இளைஞர்கட்கு நமது நாட்டின் சரித்திரம் தெரிந்திருக்க வேண்டும்'' என்றார்.

திரு தா. ஜெயகாந்தன் பேசுகையில், ''சேதப்பட்டதால் நடத்தப்படும் விழா அல்ல. இந்தியாவை வாழ வைப்பதற்காக நடத்தப்படும் விழா. சிறுபான்மையினர் பெரும்பான்மையினருக்குப் போட்டி இல்லை. இந்தியா ஒன்றுபட்ட நாடு. தேசியப் பெருமைகள் இந்த விழா மூலம் எடுத்துக் காட்டப்படுகிறது. தேசிய நலம் மூலம்தான் மக்கள் நலம் காக்கப்படும்'' என்றார்.

உதவி இயக்குநர் திரு நல்லரசு நன்றி கூறினார்.

**மொழி ஒற்றுமை நாள்**

21.11.1988 அன்று மொழி ஒற்றுமை நாள் நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் செய்தி-மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு ஆர்.வைகுந்தம் வரவேற்றார்.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த சிறைத்துறைத் தலைவர் திரு எஸ். பூபால் அவர்கள் தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:

''இளம் உள்ளங்களில் ஒருமைப்பாட்டு உணர்வுகளை வளர்க்கும் வகையில் தேசிய ஒருமைப்பாட்டு வார விழா பயன்படுகிறது. நாட்டின் ஒற்றுமைக்காக இன்னுயிர் ஈந்த அன்னை இந்திராகாந்தி அவர்களின் நினைவாக ஒருமைப்பாட்டு வாரம் கொண்டாடுவது மிகவும் பொருத்தமாகும்.''

சென்னை கேரள சமாஜம் தலைவர் திரு பி.சி.என். பணிக்கர் பேசுகையில், ''பல்வேறு மாநிலங்களில் வாழும் இந்திய மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ அன்பும், சகிப்புத் தன்மையும் பேருதவியாக அமைந்துள்ளது. மொழி ஒற்றுமையும் அதற்கு உதவுகிறது'' என்று குறிப்பிட்டார்.

பஞ்சாபி சங்கம் பொதுச் செயலாளர் திரு.பி.என்.தாவன் பேசுகையில், தமிழ்நாட்டு மக்களின் அன்பு உள்ளத்தைப் பாராட்டினார்.

இறுதியாக, செய்தி-மக்கள் தொடர்புத்துறை உதவி இயக்குநர் திரு கு.கோவிந்தராஜுலு நன்றி கூறினார்.

**நலிவடைந்தோர் நல நாள்**

22.1.88 அன்று நலிவடைந்தோர் நல நாளாகக் கொண்டாடப்பட்டது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் சிறப்பு ஆணையர் மற்றும் செயலாளர் திரு அ. இராமச்சந்திரன், இ.ஆ.ப. தலைமை ஏற்றார்.

விழாவுக்கு வந்திருந்தோரை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் திரு.ஜி.அம்பேத்கார் இராஜ்குமார், இ.ஆ.ப. வரவேற்றார்.

சிறப்புரையாற்றிய திரு எல். இளையபெருமாள் குறிப்பிட்டார்;

''மனிதனை மனிதன் தொட்டால் தீட்டு என்று இந்த நாட்டில் சொல்லப்பட்டதை அறிந்த உத்தமர் காந்தியடிகளும், அண்ணல் அம்பேத்கார் அவர்களும் கொதித்தெழுந்தார்கள். இந்த பேதம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திப் பல நூல்கள் எழுதினர். அவர்களின் எழுத்தாற்றல் வெற்றி பெற்றது.''

அடுத்து உரையாற்றிய திரு க. பாரமலை தெரிவித்ததாவது:

''தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் உயர்வுக்காக இந்திராகாந்தி அவர்கள் பற்பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தினார். எத்தனையோ கனவுகள் கண்டார். அவற்றை எல்லாம் நிறைவேற்ற நாம் சபதம் எடுத்துக்கொள்வோம்.

அடுத்து, திரு செ.கு. தமிழரசன் தமது உரையில் குறிப்பிட்டார்:

''ஒருமைப்பாட்டு முழக்கத்தை உதட்டளவில் பேசாமல், செயலளவில் காண்பித்தவர் இந்திராகாந்தி அம்மையார்.

''ஆதிதிராவிட மக்கள் நலனுக்காக அவர் அரும்பாடுபட்டார். இந்திரா காந்தி அவர்களின் பெயரால் ஒரு பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும்''.

சென்னை மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு குலாம் முகமது உசேன் நன்றி கூறினார்.

கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்ற மாணவியர்க்குப் பரிசுகள் வழங்கி, நலிவுற்ற மக்களுக்குத் தையல் இயந்திரங்கள், தொழிற் கருவிகள் ஆகியவற்றை வழங்கினார் திரு. இராமச்சந்திரன், இ.ஆ.ப.

**பண்பாட்டு ஒற்றுமை நாள்**

23.11.88 அன்று பண்பாட்டு ஒற்றுமை நாள் கொண்டாடப்பட்டது.

திருக்குறளார் திரு வீ. முனிசாமி அவர்கள் தலைமை வகித்தார். அவர் பேசுகையில், ''மனிதனுக்குப் பெருமை ஒற்றுமையாக இருந்து வாழவேண்டும். எது செய்தாலும் அது மக்களுக்குப் பயன்படவேண்டும். அதுதான் பண்பு, பண்பாடு'' என்றார்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் திரு க.த. திருநாவுக்கரசு அவர்கள் பேசுகையில், ''வாழ்க்கை வழிப் பண்பாடு, கலை வழிப் பண்பாடு, மொழி வழிப் பண்பாடு, சமய வழிப்பண்பாடு காண முயல வேண்டும்'' என்றார்.

திருமதி உமையாள் முத்து அவர்கள் பேசுகையில், கவிஞர்

## வேளாண்மைப் பல்கலைக் கழகத்துக்குப் பாராட்டு!

இங்கிலாந்து நாட்டில் ஆர்பென்டனில் உள்ள ரோதாம்ஸ்டெட் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றுகின்ற தலை சிறந்த பூச்சியியல் வல்லுநர் டாக்டர் ரோமன் சாவிக்கி எப். ஆர். எஸ்., தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மற்றும் கோவையிலுள்ள மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெறுகின்ற ஆராய்ச்சிப் பணிகளை 1988 நவம்பர் 22-24 தேதிகளில் கண்டறிந்தார்.

ஆராய்ச்சிப் பணிகளைக் கண்டறிந்த பின் டாக்டர் சவுக்கி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் எஸ். ஜெயராஜ், ஆராய்ச்சி இயக்குநர் டாக்டர் எம். பாலசுப்பிரமணியம், விரிவாக்கக் கல்வி இயக்குநர் டாக்டர் என். சண்முகம், மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலைய இயக்குநர் டாக்டர் ஏ. கே. பாசு மற்றும் பருத்தி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கின்ற விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடினார்.

தமிழகத்தில் வேளாண்மைத் துறையும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும் இணைந்து செயல்படுத்தும் பூச்சிநோய் கண்காணிப்புத் திட்டத்தையும், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளையும், அளவோடு தேவைக்கேற்ப பூச்சி மருந்துகளைப் பயன்படுத்தும் உத்திகளையும் வெகுவாகப் பாராட்டினார்.

இது தவிர நமது நாட்டிலேயே ஏறத்தாழ ஐம்பது சதவீதத்திற்குப் பூச்சி மருந்துகளின் தரத்தைப் பரிசோதிக்கும் தமிழ்நாட்டுத் திட்டமும், தமிழ்நாட்டில் தரமான பூச்சி மருந்துகள் விநியோகிக்கப்படும் முறையும் தம்மைக் கவர்ந்ததாக அவர் கூறினார்.

கண்ணதாசன் எழுதிய 'மனிதன் என்பவன் தெய்வமாகலாம்' என்ற பாட்டை மேற்கோள் காட்டி, மனிதப் பண்பாட்டை இப்பாடல் பிரதிபலிக்கிறது என்றார்.

தொடக்கத்தில், செய்தி-மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு அ. பன்னீர்செல்வம் அனைவரையும் வரவேற்றார். இறுதியில் செய்தி-மக்கள் தொடர்புத் துறை உதவி இயக்குநர் திரு சி. நல்லரசு நன்றி நவின்றார்.

விழா முடிவில், சென்னை பாரதீய கலாச்சார் வழங்கிய மகாகவி பாரதியார் நாட்டிய நாடகம் நடந்தது.

**மகளிர் நல நாள்**

தேசிய ஒருமைப் பாட்டு வார விழாவில் 24-11-88-ஆம் நாள் மகளிர் நல நாளாகக் கொண்டாடப் பட்டது.

சமூக நலத்துறை இயக்குநர் ஷீலா ராணி சுங்கத் இ.ஆ.ப. தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், அத்துறையின் உதவி இயக்குநர் வரவேற்புரையாற்றினார்.

டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி பேசுகையில். ''ஏழையும் செல்வனும் ஆண்களும் பெண்களும் சரிசமமாக வளரும்போது தான் இந்தியாவின் முன்னேற்றம் நல்லபடி அமையும். பெண்களை அடிமைப்படுத்துவது பொருளாதாரச் சுதந்திரமே. அதை அடைய நமது பெண்கள் பாடுபட வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

தாம்பரம் சேவை இல்லத்தைச் சேர்ந்த செல்வி பி. மகாலட்சுமி, செல்வி ஜி. அர்ச்சனா ஆகியோர் மகளிர் மேம்பாடு பற்றிப் பேசினார்கள்.

உழைக்கும் மகளிர் சங்கத்தின் சார்பில் திருமதி ஜெயா அருணாசலம் பேசும்போது—''ஆண் பெண் இடையே உள்ள பாகுபாடு நீங்கி, சமத்துவம் மலர வேண்டுமானால் பெண்களாகிய நாமெல்லாம் போராடியே ஆக வேண்டும்'' என்றார்.

பெண்ணுரிமைச் சங்கத்தின் சார்பில் திருமதி ராஜலட்சுமி கிருஷ்ணன் பேசியதாவது: '' பலதார, மறுதார மணத்தைப் பெண்களாகிய நாம் அங்கீகரிக்கக்கூடாது. வரதட்சணைக் கொடுமையை ஒழிக்கப் பாடுபட வேண்டும்.

சமூகநலத்துறை இயக்குநர் திருமதி ஷீலாராணி சுங்கத் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது: நம்மை அடிமைப்படுத்தும் காரியங்களையும் முயற்சிகளையும் நாமெல்லாம் தன்னம்பிக்கையோடு அச்சமின்றி எதிர்த்து நிற்க வேண்டும். அப்போதுதான் பாரதி பாடிய பெண் விடுதலைக் கனவு நனவாகும்.''

இவ்விழாவில், நலிவுற்ற பெண்கள் சிலருக்குச் சமூக நலத்துறை இயக்குநரால் சிறுதொழில் தொடங்க நிதி உதவி வழங்கப்பட்டது.

விழா முடிவில், சமூக நலத்துறை இணை இயக்குநர் திரு. ம. சொர்ணலிங்கம் நன்றி கூறினார்.

**வனவளம்—கலை நலம் காப்பு நாள்**

தேசிய ஒருமைப்பாட்டு வார விழாவின் 25-11-88-ஆம் நாள் நிகழ்ச்சிகள். வனவளம் கலை நலம் காப்பு நாளாகக் கொண்டாடப்பட்டது.

முதன்மை வனத்துறைத் தலைவர் திரு. ஜான்ஜோசப் வரவேற்புரையாற்றினார்.

தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் அவ்வை நடராசன் தொடக்கவுரையாற்றும்போது குறிப்பிட்டதாவது : ''கலை என்பது மனத்திலிருப்பது; வனம் என்பது வாழ்க்கையோடு தொடர்புடையது. பிற நாட்டார், மரங்களைக் காதலிப்பதாகச் சொல்லுவார்கள்; ஆனால் நம் நாட்டிலேதான் மரங்களை வணங்கும் வழக்கம் இருக்கிறது. முல்லை என்றொரு நிலப்பகுதியே இங்கே உண்டு.''

சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை ஆணையர் மற்றும் செயலாளர் திரு துரை சுந்தரேசன் பேசுகையில்— ''மரம் வளர்ப்பில் மக்களை ஈடுபடுத்தி வருகிறோம். இவ்வகையில் அரசும் தன் பங்கைச் செலுத்தி வருகிறது'' என்றார். கூட்டம் நடைபெற்ற கலைவாணர் அரங்க வளாகத்தில் அவர் மரக்கன்றுகளை நட்டார்.

பேராசிரியர் ப. சிவலிங்கம் பேசும்போது—'காடுகள் அழிந்தால் மிகப் பலகேடுகள் ஏற்படும்' என்று குறிப்பிட்டார்.

திரு ஏ. எம். ஜகந்நாதராவ், டாக்டர் சுதா சேஷையன், டாக்டர் தெ. ஞானசுந்தரம் ஆகியோரும். தமிழ்நாட்டுக் கலை நலம் குறித்தும், வனவளம் குறித்தும் விரிவாக உரையாற்றினார்கள்.

விழா முடிவில்-தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய உறுப்பினர் மற்றும் செயலர் டாக்டர் எம். மாரியப்பன் நன்றியுரையாற்றினார்.



## துணை இயக்குநர் திரு இரா. வைகுந்தன் மறைவு

செய்தி-மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் (நினைவகங்கள்) திரு இரா. வைகுந்தன் அவர்கள் கடந்த 10.12.88 அன்று அவரது சொந்த ஊரான கோலியனூரில் இயற்கை எய்தினார். அவருக்கு வயது 51.

இறுதிச் சடங்கு 11.12.88 அன்று நடைபெற்றது. துறையின் உயர் அலுவலர்களும், ஊழியர்களும் சென்னைத் தலைமைச் செயலகத்தில் 12.12.88 அன்று மாலை கூடி திரு இரா. வைகுந்தன் அவர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அவரது மறைவுக்கு ''தமிழரசு'' தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
100 சதவிகிதம் அசல் பட்டு
மற்றும் தங்க சரிகைகளைக்
கொண்டு நெசவு செய்யப்பட்ட
புதுமையான
பட்டுச்சேலைகளை
கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.
இந்தியாவின் மிகப்பெரிய
கைத்தறி கூட்டுறவு விற்பனை
நிறுவனம் கோ-ஆப்டெக்ஸ்.
அதற்குச் சொந்தமான
560 விற்பனைக்கூடங்கள்
மூலமாக கோடிக்கணக்கான
வாடிக்கையாளர்களின்
தேவைகளை பூர்த்தி செய்கிறது
DIPR: Efficient

தமிழரசு

பதிவு எண்: M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



தோற்றம் :
17-1-1917

டாக்டர் எம். ஜி. ஆர்

மறைவு :
24-12-1987